

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்

# தீபம்

16.06.2019 தீபம் – 186
பக்கங்கள் - 24 விலை ரூபா 30.00




மோடியின் விஜயமும் தமிழ் அரசியல் தலைமைகளும்.. பக்கம் 03
நிலத் தொடர்ச்சி அற்ற வகையிலாவது வடக்கு - கிழக்கு இணைய வேண்டும் பக்கம் 06
பல ஆண்டுகாலப் பிரச்சினைகளும் சில நிமிட சந்திப்புக்களும் பக்கம் 08
சாட்சியங்கள் வெளிப்படுத்தும் ஓட்டைகள்.. பக்கம் 12





# மழலை முற்றம்



## மான் துரத்திய சிறுத்தை

சூல் கொண்ட மான் ஒன்று காட்டில் மேய்ச்சலுக்குப் போனது. மழை வரவே எங்காவது ஒதுங்க எண்ணிற்று. குகை ஒன்று தெரியவே அதற்குள் போனதும் இரண்டு குட்டிகளை ஈன்றது. அங்கேயே இருந்தது.

அந்தக் குகைக்குச் சொந்தக்காரச் சிறுத்தை வந்தது. சிறுத்தை தன்னையும் தன் குட்டிகளையும் தின்று விடும் என்பதை அறிந்த தாய் மான்.

உரத்த குரலில் 'குழந்தைகளே இப்போதுதானே ஒரு புலியைத் தின்றீர்கள். பசியடங்கவில்லையா? இன்னொரு சிறுத்தை வேண்டுமா?' என்று கூறியதும் சிறுத்தை ஓட்டம் பிடித்தது.

இதன் ஓட்டத்தைப் பார்த்த நரி 'ஏன் ஓடுகிறீர்?' எனக் கேட்டது.

'ஒரு நாளில் புலியும் சிறுத்தையும் உண்ணும் மான் கூட்டத்தைப் பார்த்து ஓடுகிறேன்.'

நரி சிரித்தது. 'இது வெறும் பொய். வா குகைக்கு. மானைக் கொல்லுகிறேன். நான்' என்றது நரி'

இரண்டும் வந்தன. குகைக்கு அருகாக வந்ததும் சிறுத்தையின் தைரியம் ஓடியேவிட்டது. நான் குகைக்குள் வரமாட்டேன். பயமாக இருக்கிறது என்று நடுங்கியது.


நரி 'கயிறு ஒன்றெடுத்து என் கழுத்தையும் உன் உடம்பையும் சேர்த்துக் கட்டுவோம். நாமிருவரும் உள்ளே நுழைவோம்' என்றது. சிறுத்தையும் சம்மதித்தது. இரண்டும் ஒன்றை ஒன்று கயிற்றால் பிணைத்துக் கொண்டு குகைவாயிலுக்கு வந்தன.

'குழந்தைகளா! தயாராக இருங்கள். இதோ ஒரு சிறுத்தை வந்திருக்கிறது. உங்கள் பசி ஆறும்' என்று மான் கத்தியது. மறுகணம் நரியைப் பார்த்து மான் சொல்லிற்று:

'ஏன் நரியாரே! உம்மிடம் ஏழு சிறுத்தை கொண்டுவரச் சொன்னால் ஒரே ஒரு சிறுத்தையைக் கொண்டுவந்தீர். என் பசிக்கு ஒரு சிறுத்தை போதாது. இருந்தாலும் உமது உதவிக்கு எனது நன்றி.'

இதைக்கேட்ட சிறுத்தை எடுத்தது ஓட்டம். ஓடுகிற வேகத்தில் கட்டுப்பட்ட நரியை மேடு பள்ளத்தில் இழுத்துக் கொண்டு ஓடியது. காடு மேடு எங்கும் கல்முள் எங்கும் இழுத்துக் கொண்டு ஓடியது சிறுத்தை.

அந்தக் குகையில் தனது குட்டிகளுடன் சௌக்கியமாக வாழ்ந்தது மான்.





## அப்பா தந்த புத்தகம்



அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்
அதில் இருக்கும் பாடங்களோ
ஆஹா மிக அற்புதம்!



யானை உண்டு, குதிரை உண்டு
அழகான முயலும் உண்டு
பூனை உண்டு, எலியும் உண்டு
பொல்லாத புலியும் உண்டு



அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்

குயிலும் உண்டு, குருவி உண்டு
கொக்கரக்கோ கோழி உண்டு
மயிலும் உண்டு, மானும் உண்டு
வாலில்லாத குரங்கும் உண்டு


அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்





அழ வள்ளியப்பா


## மூளைக்கு வேலை




சரியான இலக்கங்களை உரிய இடை வெளிகளில் நிரப்பவும்



சரியான இலக்கங்களை உரிய இடைவெளிகளில் நிரப்பவும்




பொது அறிவுப் போட்டி இலக்கம் ஒன்றின் விடைகளும் பரிசு பெற்றோர் விபரமும் அடுத்த வாரம் வெளிவரும்.



## அறிவு மொழிகள்

* ஓடுவதில் பயனில்லை. நேரத்தில் புறப்படுங்கள்.
* எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.
* நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாவாய் இரு.
* யார் சொல்வது சரி என்பதை விட, எது சரி என்பதே முக்கியம்.
* பலமுறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.

**3D படம்**



**நன்றாக உற்றுப் பாருங்கள் உங்களை ஆச்சரியப்படுத்தும் ஒன்றைக் காணுவீர்கள். அது என்ன என்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.**



தீபம்
வார இதழ்
"யாமார்க்கும் குடியல்லோம்"
16.06.2019 இதழ் -186
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# நல்ல நாடு நல்ல அரசு பாவம் மக்கள்

இலங்கை அரசியலில் ஒரு புதிய யுகம் தோன்றுகின்றது. என அரசியல் ஆய்வாளர்கள் விமர்சகர்கள் மற்றும் அரசியல் ஆர்வலகர்களால் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புக்களுடன், விதைந்துரைக்கப்பட்ட நல்லாட்சி அரசின் 'பொட்டுக்கேடுகள்' சந்தி சிரிக்கும் நிலைமையைத்தாண்டி, சரித்திரம் சிரிக்கும் நிலைமைக்கு வந்துள்ளமை வெட்கக்கேடான வேதனைக்குரிய நிலைமை ஆகும்.

இலங்கையில் ஜனநாயகம் என்ற மகத்தான சொல் அர்த்தம் இழந்து அருவருப்புக்குரிய ஒன்றாக மாறிவருவதை அகில உலகமே அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

பௌத்த சிங்கள பேரின வாதத்தால் பீடிக்கப்பட்டு சுதந்திரம் இழந்து ஏழு தசாப்பங்களைக் கடந்து போன நிலையிலும், பல்வேறுபட்ட அடிப்படை வாதங்களில் இருந்து விடுபட முடியாமல் நாடு தள்ளாடுவதற்குத் தொலைநோக்குச் சிந்தனையும், தேசப் பற்றும், மானுட நேயப் பண்பும் அறவே அற்ற நாற்காலிக் கனவுகளில் சுகம் காணும் அரசியலாளர்களே முழுக்க முழுக்கக் காரணம் என்பதை அவர்களே இப்போது தமது அறிக்கைகள் மூலமும், வாக்குமூலங்கள் மூலமும் பெருமையோடு வெட்கமின்றி ஒப்புக்கொண்டு வருவது பொறுப்பில்லாத் தன்மையின் உச்சக்கட்டமாகும்.

உல்லாசப் பயணிகளைப் போலப் பலகோடி ரூபாய் மக்களின் வரிப்பணத்தையும், உலகத்திடமிருந்து கைநீட்டி வாங்கிய பணத்தையும் செலவழித்து ஊர்வலமும், உலகவலமும் வந்துவிட்டு, நாட்டின் - மக்களின் - பாதுகாப்பு என்பது அதலபாதாளத்துள் வீழ்ந்து நொருங்கும் நிலைமையில் அதுபற்றி எதுவுமே தமக்கு தெரியாது என ஜனாதிபதியும், பிரதமரும் அப்பாவிகள் போல் கைவிரிக்கும் கேவலம் வேறெந்த நாட்டிலும் நடந்திருக்குமா? என்ற கேள்வி எழும் சூழலில், இந்த அவலச் சூழலை வைத்து அடுத்த தேர்தலில் கதிரைகளைக் கைப்பற்றும் கனவில் திட்டமிடும் எதிர்க்கட்சிதாரிகள் நிலை எல்லாவற்றையும் விடக் கேவலமானது.

இந்தக் காலத்தில் மக்களை ஆக்க பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டி நாட்டின் தலைமுறைகளின் எதிர்கால நலன்குறித்துத் தீர்மானமெடுக்க அர்த்தமுள்ள வழிகளைக்காட்ட வேண்டிய அரசியல் ஆய்வாளர்கள், விமர்சகர்கள், மதியுரைஞர்கள் பெருமளவில் வெறும் ஊகங்களின் அடிப்படையில் அரசியல்வாதிகளுக்கு வக்காளத்து வாங்கும் வகையில் அணி பிரிந்து பேசியும் எழுதியும் தமது மேதாவிலாசங்களைத் தக்கவைக்கச் செயற்படுவது துன்பம் தரும் விடயமே.

மாற்று தலைமை பற்றியும் அதன் காலத்தேவை பற்றியும் சிந்திப்பவர்கள் கூட வரும் மாற்றுத் தலைமைகளும், ஏமாற்றுத் தலைமைகளாக அமைந்துவிட்டால்...! என்ற சந்தேகக் குறியுடன் மௌனம் காத்து நிற்பதும் உண்மையே.

'பயங்கரவாதத்தை சர்வதேச ரீதியில் அழிப்போம். அதற்கு இந்த நாட்டிற்கு உதவத் தயார் என சூழுரைக்கும் சர்வதேச சமூகம் அவர்கள் பிரஸ்தாபிக்கும் பயங்கரவாதத்தின் அடிப்படைக் காரணியான இன - மத - மொழி அடிப்படையிலான மேலாதிக்கவாதச் சிந்தனையாளரின் தலைமையிலான அரச பயங்கர வாதத்தை அழிக்க உதவ முன்வராமையானது அவர்கள் கட்டிக்காக்க நினைக்கும் ஜனநாயக தர்மத்தில் அரச பயங்கர வாதம் என்பதும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்பதை உறுதிபட நிரூபித்து நிற்பதைக் கடந்த கால வரலாறு உணர்த்தி நிற்கிறது.

இச்சமயத்தில், நாடுமுன்னேற நலங்கள் பெருக
ஜனநாயகத்தை சற்றே நிறுத்தி
சவுக்கை எடுப்போம் தரித்திரம் நீக்கும்
சுதந்திரம் என்ன சோற்றுப் பானையா? என்ற
கண்ணதாசனின் பாடல்வரிகள் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகின்றது.




**சாத்திரியாரே!**
**சித்திரையில் புத்திரன் பிறந்தால் அக்குடி நாசம் என்கிறார்களே உண்மைதானே?**

**அப்படி என்றால் நமது தமிழ்த் தலைவர்கள் எல்லாம் சித்திரையிலா பிறந்தார்கள்.....!**
(1970 களில் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள் வரைந்த கருத்தோவியம் இது). மீதி உங்கள் சிந்தனைக்கு....






## பாரதீ...

சிறந்து நின்ற சிந்தை யோடு
தேயம் நூறு வென் றிவள்
மறந்த விர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே!
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்மை நூல்கள் தேயவும்
சொல்லும் இவ் வனைத்தும் வேறு
சூழ நன்மை யுந்தர
வல்ல நூல்கெ டாது காப்பள்
வாழி அன்னை வாழியே!



# மோடியின் விஜயமும் தமிழ் அரசியல் தலைமைகளும்

இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி மீண்டும் பதவி ஏற்ற பின்னர் மாலைதீவு - இலங்கை நோக்கி தனது வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பித்தார். அதில் ஓரங்கமாக இலங்கை வருகை தந்தவர் எட்டு மணித்தியாலம் இலங்கையின் தலைநகர் கொழும்பில் தரித்து முக்கிய தலைவர்களை சந்தித்ததுடன் ஐ.எஸ் தாக்குதலில் அழிவுக்குள்ளான கொச்சிக்கடைத் தேவாலயத்தையும் பார்வையிட்டு சென்றுள்ளார். அவரது இலங்கை வருகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்து உரையாடியது முக்கியமான செய்தியாக அமைந்தி ருந்தது. இக்கட்டுரையும் மோடியின் இலங்கை விஜயமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பற்றி தேடுவதாக அமைந்துள்ளது.

ஐ.எஸ் தாக்குதல் இலங்கை அரசி யலை பிராந்திய சர்வதேச அரசி யலின் மையமாக மாற்றிவிட்டது. இலங்கைக்குள் ஆதிக்கம் பெற்ற அரசியல் சக்திகள் அனைத்தினதும் நிலைமை பூச்சியமாகியுள்ளது. அதன் விளைவுகளிலிருந்து மீள முடியாது நெருக்கடிக்குள் இருக்கும் தரப்புக்களில் முதன்மையானவர்கள் தமிழ் தரப்பினர். அவர்களது கடந்த கால அரசியல் தவறுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அவர்களை கையறு நிலைக்கு தள்ளியுள்ளது.

ஆனால் இந்தியப் பிரதமர் மோடியின் பயணம் இலங்கை இனப்பிரச்சினை பொறுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அதன் தலைவர்களுக்கும் சில வாய்ப்புகளை வழங்கியுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் மோடி இலங்கைக்கு இரு தடவை வருகை தந்திருந்தார். ஆனால் கூட்டமைப்பும் அதன் தலைமையும் இலங்கையின் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயற்பட்டதால் எத்தகைய முன்னேற்றத்தையும் எட்டமுடியவில்லை.

மோடி வடக்கு விஜயம் செய்த போது பொருளாதார சமூகத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாரகளே அன்றி ஒரு தேசிய இனமாக தமிழருக்குரிய அரசியல் பிரச்சினையை முன்வைக்கத் தவறியிருந்தார். 13 க்கு அப்பால் மோடி வருவதற்கு தயங்கியதைவிட கட்டமைப்பு செய்வதற்கு தயாராகவில்லை. வடக்கு கிழக்கு தாயகம், சுயநிர்ணயம், தமிழ் தேசியம் என்ற வார்த்தைகள் எல்லாம் தேர்தலுக்கு மட்டுமே தமிழ் தலைவர்கள் பயன்படுத்துவார்கள். மோடியுடன் உரையாடும் போது 13 க்குள் அடங்கிவிடுவார்கள்.

1987 முதல் மோடியுடனான சந்திப்பு வரை தமிழ் அரசியல் தலைமைகள் 13 ஐ முழுமையாக நடாத்த வேண்டும் என்ற கோரிக்கையையே கொண்டிருக்கின்றனர். அதனை உரையாடலுக்கு மட்டுமே பயன்படுத்தினார்களே அன்றி அமுல்படுத்துவதில் கருசனை கொள்ளவில்லை. அதுகூட தமிழ் மக்களுக்கு ஏமாற்றுத்தனமானதாகவே உள்ளது. 13 இன் கீழ் காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் மட்டுமன்றி வடக்கு

> மோடி வடக்கு விஜயம் செய்த போது பொருளாதார சமூகத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்களே அன்றி ஒரு தேசிய இனமாக தமிழருக்குரிய அரசியல் பிரச்சினையை முன்வைக்கத் தவறியிருந்தார். 13 க்கு அப்பால் மோடி வருவதற்கு தயங்கியதைவிட கட்டமைப்பு செய்வதற்கு தயாராகவில்லை. வடக்கு கிழக்கு தாயகம், சுயநிர்ணயம், தமிழ் தேசியம் என்ற வார்த்தைகள் எல்லாம் தேர்தலுக்கு மட்டுமே தமிழ் தலைவர்கள் பயன்படுத்துவார்கள். மோடியுடன் உரையாடும் போது 13 க்குள் அடங்கிவிடுவார்கள்.

கிழக்கு இணைப்பிலுள்ள ஓர் அரசியல் வரைபாகும். அதனை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரித்தார்கள். அதனை மீள அரசியல் ரீதியாக சரிப்படுத்த எத்தகைய பிரயத்தனத்தையும் தமிழ் தலைமை முன்னெடுக்கவில்லை. 13 ஐ கையில் எடுத்தால் அதனை முழுமையாக வெற்றிபெற உழைத்து அதில் நின்று கொண்டு அடுத்த உரையாடலை ஆரம்பிக்க முடியும்.

நரேந்திரமோடியின் விஜயம் இரண்டு விதத்தில் முக்கியமானது.

ஒன்று கூட்டமைப்புக்கும் இந்தியாவுக் குமான அரசியல் வெளியை மீளவும் திறந்துள்ளது. அதில் புதுடில்லி நேரடியா கவே கூட்டமைப்பை அழைத்துள்ளது. இது மு.க.ஸ்டாலினுக்கு போர்த்திய பொன்னாடைக்கு பதிலிறுப்பதாகவும் பார்க்கலாம். அது தவறான இராஜதந்திரமாக கொண்டாலும் அரசி யலில் அவற்றை மறந்து செயல்பட வேண்டியது அவசியமானது. எனவே புதுடில்லியின் அழைப்புகளை சரிவர கையாள தயாராக வேண்டும்.

முதலில் இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் பயணிப்பதை கைவிட்டுவிட்டு தமிழருக்கான நிகழ்ச்சி நிரலை வரைந்து அதன் கீழ் புதுடில்லி பயணத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். புதுடில்லியுடனான உறவை சரி செய்துவிட்டு சென்னையுடனான உறவை பலப்படுத்த வேண்டும். காரணம் பா.ஜ.கா தனித்து 301 ஆசனங்களை லோக்சபாவில் கொண்டுள்ளது. தற்போது சென்னையை வைத்து புதுடில்லியை கையாள முடியாது. எனவே புதுடில்லி யுடனான சுமூக உறவு தமிழ்தரப்புக்கு வேண்டும். அது தமிழரின் நலன்களை விட்டுக் கொடுக்காத உறவாக அமைதல் வேண்டும்.





கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்

இரண்டாவது இந்துத்துவம் பிராந்திய அரசியல் களத்தில் நிலையான வடிவத்தைப் பெறப் போகிறது. எதிர்காலம் இந்து - இஸ்லாம் என்ற பெரும் முரண்பாடு எழவாய்ப் புள்ளது. மேற்காசியாவில் உள்ள இஸ்லாமியர் தொகையை விட தென்னாசியாவில் அதிகமான தொகையினர் காணப்படுகின்றனர். அதிலும் இந்தியாவிலேயே அதிக இஸ்லாமியர்கள் உள்ளனர். உலகத்தில் இந்தோனேசியாவுக்கு அடுத்து அதிக முஸ்லிம்கள் வாழும் நாடு பாகிஸ்தான் அதற்கு அடுத்ததாக இந்தியா என்பதுவும் கவனத்திற்குரியது. எனவே நிரந்தரமாக இந்து - இஸ்லாம் பிரிவினை அல்லது முரண்பாடு என்பது தவிர்க்க முடியாத அரசியலை தென்னாசியாவில் ஏற்படுத்தும் இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பது முடிவுக்கு வந்துவிட்டது. அரசியலமைப்புக்கு புறம்பான அரசியல் ஒன்றின் ஆதிக்கத்துக்குள் இந்தியாவின் இந்துத்துவம் ஏற்படுத்தியுள்ளது. அதுவே இலங்கையிலும் உள்ளது. பௌத்தமதம் அத்தகைய அரசியலையே ஏற்படுத்தியுள்ளது என்பதை கடந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அதனாலேயே இலங்கை - இந்திய நட்புறவு பலமானதாக அமைந்துள்ளது. பௌத்தம் இந்து தர்மத்தின் குறைபாடு களை சரிசெய்யப் புறப்பட்ட ஒன்றாகும் இரண்டின் தர்மபோதனைகளும் ஒன்றானதே. இதனால் இரண்டும் இலகுவில் கைகோர்த்துவிடும். அத்தகைய நடைமுறை சுலபமானதும் கூட.

இது இலங்கையிலுள்ள தீவிர இஸ்லாமியருக்கு ஆபத்தான செய்தியாகும். இதற்காக இரு நாடுகளும் கைகோர்ப்பதில் கடினமானதாக அமையாது. இலங்கை ஆட்சியாளரும் தமக்கான நெருக்கடியின் போதெல்லாம் இந்தியாவை அணைத்துக் கொள்வார்கள். ஆகவே இந்திய - இலங்கை உறவு மிகப்பலமானதாக மாறும் காலமாகும். அதுமட்டுமல்ல அமெரிக்கா ஜப்பான் இஸ்ரேல் எனும் பாரதீய ஜனதாகக் கட்சியின் கூட்டு அணியானது இலங்கையில் குவிக்கப்பட்டிருக்கும் போது இந்தியாவுக்கு அதிக வாய்ப்புகள் இலங்கையில் உள்ளது. அதனை அடைவதற்கான விஜயமாகவே மோடியின் இலங்கைக்கான நகர்வு பார்க்கப்படுகிறது. இங்கும் தமிழ் தரப்புக்கு ஒரு அரசியல் களம் விரிந்துள்ளது. அது மதங்களால் ஒன்றானதாகும். இத்தகைய மத பாரம்பரிய இணைப்பும் தமிழர் அரசியலில் பலவீனங்களை சரி செய்யக் கூடியது.

எனவே தமிழ் தலைமைகளது அரசியல் முனைப்புக்களே தீர்வுகளை நோக்கி நாடுகளை நகர்த்தும். தமிழ் அரசியல் தலைமைகள் இன்னோர் சிறுபான்மையினை பாதுகாத்துக் கொண்டு அரசியலில் நிமிர்வதை உறுதிப்படுத்தகூடிய வாய்பினை மோடி விஜயம் தந்துள்ளது. அதனை நோக்கி தமிழ் தலைமை நகருமா? என்பது கேள்விக்குரியதாகும். ஒரு தரப்பு அடிமைத்தனமாகவும், இன்னோர் தரப்பு எதிரித்தனமாகவும் இந்த அரசியலை நோக்குவதாக தெரிகிறது. இது தமிழர்களது மரபார்ந்த இயல்பா என்பது தேடப்பட வேண்டியதாகும்.

# நம்பிக்கை இல்லாத் தீர்மானம், தேரரின் உண்ணா நோன்பு, முஸ்லிம் உறுப்பினர்களின் பதவிதுறப்பு - ஒரு பார்வை...

மாசிலான்







இஸ்லாமியத் தீவிரவாதம் அல்லது பயங்கரவாதம் ஏப்பிரல் இருபத்தொன்று உயிர்த்த ஞாயிறு நாளில் கிறிஸ்தவ தேவாலயங்களில் தனது கொடூர முகத்தைக் காட்டியது. இப்பயங்கரவாதத் தாக்குதலினால் 350 இற்கு மேற்பட்ட உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட நூற்றுக்கணக்கானோர் படு காயமடைந்தனர். இதன் விளைவாக இஸ்லாமிய அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அது விவாதத்துக்கு எடுக்கப்பட முன்னர் புத்த பேரினவாதம் அவ்வமைச்சரையும் கிழக்குமாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவையும் மேல்மாகாண ஆளுநர் ஆசாத் சாலியையும் பதவி விலக வைத்து விட்டது.

நாடாளுமன்ற அரசியலில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்பது புதுமையல்ல. ஆளும் அரசின் மீதோ அல்லது ஒரு அமைச்சர் மீதோ எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டு வருவது நடைமுறையாகும். அந்தநம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு வாக்களிப்பில் முடிவு எட்டப்படும். அனேகமாக நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் வெற்றி அடைவது மிக மிகக் குறைவாகும். ஆனால் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் மிகவும் விசித்திரமான உலக நாடாளுமன்றங்கள் எங்குமே நடைபெறாத நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்று 1981 ஜூலையில் இல் கொண்டு வரப்பட்டதாகும். ஆளும் கட்சி என்பது பெரும்பான்மையைக் கொண்டதாகவே இருக்கும். எதிர்க்கட்சி என்பது ஆளும் கட்சியிலும் குறைந்த எண்ணிக்கையுள்ள கட்சிக்குரியதாகும். அதனால்தான் அக்கட்சிக்குரியவர் எதிர்க்கட்சித் தலைவராகிறார். ஆனால் இந்த எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற கேலிக்கூத்தான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியினரால் கொண்டுவரப்பட்டது. 1977 நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரும்பான்மையுடன் ஐ.தே.கவின் ஜே.ஆர் ஆட்சியமைத்தார். அப்பொழுது இரண்டாவது பெரியகட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சித் தலைமையைப் பெற்றது. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். ஆளும் கட்சியின் சிறில் மத்தியுஸ், நெவில் பெர்னாண்டோ ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் மீது கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானமே நகைப்புக்கும் கேலிக்கும் உரிய நம்பிக்கை இல்லாத் தீர்மானமாகும். ஆளும் கட்சி மீதோ அமைச்சர் ஒருவர் மீதோ கொண்டுவரப்படும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெற்றால் ஆட்சி மாற்றம் அல்லது அமைச்சர் பதவி போய் விடும் .ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் மீது கொண்டு வரப்படும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி அடைந்தாலும் கூட எதிர்க்கட்சித் தலைவரின் பதவியைப் பறிக்க முடியாது. ஏனெனில் அது எதிர்க்கட்சியின் உரிமை. அப்படி இருந்தும் ஐ.தே.க. அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தது அதன் விளைவு தான் 1981 இல் ஒன்றில் இடம்பெற்ற இனவழிப்பாகும். இது தான் 1983 இனவழிப்புக்கும் கால்கோளாக அமைந்தது ஆகும். தமிழினத்தின் மீதும் த.வி.கூ. மீதும் மிகவும் கீழ்த்தரமான முறையில் நாடாளுமன்றத்தில் உரைகள் நிகழ்த்தப்பட்டன. தமிழ் அரசியல் தலைவர்களை கொடூரமாகச் சித்திரவதைகள் செய்ய வேண்டும் என்று கூடப் பேசினார்கள். அனைத்தையும் தூண்டி விட்டு ஜே.ஆர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவ்வுரைகள் ஏடுகளில் தலைப்புச் செய்திகளாக வந்தன. சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழ வைத்தன நாடாளுமன்ற மரபுகளுக்கு முரணாக இந்த நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்று பேசுவதற்கு இடதுசாரிகளுக்கு இடம்கொடுக்கப்படவில்லை.

தற்பொழுது இஸ்லாமியத் தமிழ் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அவர் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு உதவினார் என்றால் முறையான விசாரணைகளைப் பாதுகாப்புத் துறையோ காவற்றுறையோ சீர்செய்வது தான் முறையாகும். அத்துடன் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதும் ஏற்கக் கூடியதே ஆகும். ஆனால் இந்நம்பிக்கை இல்லாத் தீர்மானம் முன்னர் எப்படி அமிர்தலிங்கத்தின் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம்தமிழ் மக்களை இலக்கு வைத்துக் கொண்டுவரப்பட்டு தமிழ் இனவழிப்புக்கு அடிகோலியதோ அதேபோன்று இஸ்லாமிய மக்களுக்கு எதிரான இன உணர்வுகளைத் தூண்டக் கூடியதாக ரிசாத் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானமும் அமைந்து விடக்கூடிய வாய்ப்புகளே இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. ஏனெனில் உயிர்த்தஞாயிறுப் படுகொலைகளுக்குப் பின்னர் குருநாகல் போன்ற இடங்களில் இஸ்லாமிய மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் இவ்வாறான நிலைமையை நாடெங்கும் பரவ வழி செய்யலாம் என்று நம்ப இடம் ஏற்படுத்தியமை சான்றாகும்.

ரிசாத் மீதான நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ய ஆளும் ஐ.தே.க. எடுத்த முனைப்புகளும் எதிர்க்கட்சிகள் ஆளும் தரப்புக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளும் இஸ்லாமிய மக்களை மையமாக வைத்தே எடுக்கப்பட்டன என்பது தான் உண்மையாகும். உண்மையான மக்களாட்சி மரபினைப் பின்பற்றும் கட்சிகளாக இருந்திருந்தால் அத்தீர்மானத்தைப் பின் போடாமல் உரிய முறையில் இனவாதம் அற்ற முறையில் விவாதத்தை நடத்தி முடிவைக் கண்டிருக்க வேண்டும். ஆனால் ஆளும் தரப்பு தீர்மானத்தை விவாதிக்கப் பின்போட்டமையும் அதற்கிடையே நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரேலிய ரத்தின தேரர் அமைச்சரையும் கிழக்கு மாகாண ஆளுநரையும் மேல் மாகாண ஆளுநரையும் பதவி விலக்கக் கோரி நடத்திய உண்ணா நோன்பும் நாடாளுமன்றத்தையே கேலிக்குள்ளாக்கிய செயலாகவே பார்க்கப்பட வேண்டியதாகும். நாடாளுமன்றத்தில் விவாதத்தை மேற்கொள்ளாமல் புத்த தலைமைப் பீடத்திற்கு முன்னாள் அதாவது கண்டியில் தலதா மாளிகைக்கு முன்னாள் புத்த பிக்குவும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரேலிய இரத்தின தேரர் உண்ணா நோன்பிருந்து அமைச்சரைப் பதவி விலக்கக் கோரி நிபந்தனை விதித்தது சிறிலங்காவின் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தையே காட்டுகின்றது. சிங்கள பௌத்த மகாசங்கம் நினைத்தவர்களே அமைச்சர்களாக இருக்க முடியும் ஜனாதிபதியோ பிரதமரோ நாம் விரும்பியவர்களையே அமைச்சர்களாக நியமிக்கமுடியும் என்ற யதார்த்தத்தை உலகறிய இந்த உண்ணா நோன்பு வழிகாட்டியுள்ளது. பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்கள் தலதா மாளிகையை நோக்கித் திரண்டதும் சாங்கைக்குரிய மல்வத்த உயர் புத்த பீடங்கள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியமையும் இங்கு கூர்ந்து கவனிக்கப்பட என்பதாகும். இதே நேரம் ஜனாதிபதியால் மன்னிப்புக் கொடுக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஞானசார தேரர் கால அவகாசம் கொடுத்து எச்சரிக்கை விடுத்ததும் சனாதிபதியும், பிரதமரும் அவசரமாகப் பிரச்சினையைக் அணுகி ஆளுநர்கள் இருவரும் பதவி விலகியமையும் இஸ்லாமிய அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகுவதாக அறிவித்தமையும் நாட்டில் ஏற்படவிருந்த குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக எண்ணப்படுகிறது.

ஆனால் அமைச்சர்கள் கூட்டாகத் தமது பதவிகளை துறந்தது செல்லாது என்பதும் இதுவரை (இக்கட்டுரை எழுதும் வரை) தனித்தனியாகத் தமது பதவிதுறப்புக் கடிதங்களை கொடுக்கவில்லை என்பதால் அவர்கள் இன்னமும் அமைச்சர்களாகவே உள்ளார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். இஸ்லாமியர்கள் ஒற்றுமையாகப் பதவிகளைத் துறந்துள்ளார்கள் என்ற நிலையில் இஸ்லாமியர் ஒருவரே மேல்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். ஒற்றுமையைச் சிதறடிக்க இதுவும் ஒரு வழியல்லவா.

நாட்டில் இவ்வாறான நிலைமை தொடர்ந்து கொண்டு இருக்கும்பொழுது தமிழர் தரப்பு தனது உறுதியான நிலையினை மக்களுக்குக் கூறாதாது ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பற்றி தீர்க்கமாக முடிவு எதனையும் அறிவிக்காமல் காலத்தை போக்கிக்கொண்டிருந்துள்ளது. ஒரு பழம்பெரும் கட்சி என்று சொல்பவர்கள் வழுவல் நிலையில்லாமல் இது சரியானது இல்லைத் தவறானது என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் நாட்கள் இருக்கின்றன பின்னர் பார்த்து முடிவெடுப்போம் என்பது ஏமாற்று அரசியலே ஆகும். ஆளும் ரணிலைக் காப்பாற்றவே இவர்கள் இவ்வாறு இழுத்தடிப்புகளை மேற்கொள்கிறார்கள் என்பது மக்களின் திடமான நம்பிக்கையாகும். அது மட்டுமல்ல பிக்குவின் உண்ணாநோன்பு பற்றியாவது தமிழர் தரப்பு கூறியிருக்க வேண்டும். மதப் போர்வையில் ஆட்சியாளருக்கு அழுத்தம் கொடுப்பது ஏற்கக்கூடியதல்ல என்று சொல்லியிருக்க வேண்டாமா?

அரசியல்வாதிகள் என்ன என்ன எண்ண ஓட்டத்தில் இருந்தாலும் சாதாரண மக்கள் ஒன்றை மறந்து விடக்கூடாது. நாடாளுமன்றம் பெரும்பான்மையினரின் விருப்பு வெறுப்புகளுக்கு அமையவே சட்டங்களையும் தீர்மானங்களையும் எடுக்கும். 1948 இல் தொடங்கி அதுவே தான் நிலை. பெரும்பான்மை உறுப்பினர்கள் சிங்கள பௌத்தர்களாகவே இருப்பதனால் அவர்கள் எப்பொழுது சிங்கள புத்த சிந்தனைக்கு உட்பட்டே முடிவுகளை எடுப்பார்கள். தேவை என்றால் இனங்களைப் பிரித்து சலுகைகளை வழங்கி ஒருவருக்கொருவரை எதிர் நிலைக்கு மாற்றித் தமக்குச் சார்பாக ஒரு அணியினராய் வைத்துக் கொண்டு மற்ற அணியினரை செயலிழக்கச் செய்வார்கள். காரியம் ஆகியதும் தமக்கு ஆதரவாக வைத்திருந்தவர்களையும் செயலிழக்கச் செய்வதுதான் பெரும்பான்யினரின் அரசியல் தந்திரமாகும். இத்தந்திரத்துக்குள் சிக்குண்டு சிறுபான்மையினர் அழிந்து போக வேண்டுமா. இதுவரை காலமும் பிரிந்திருந்த தமிழினம் இனியாவது ஒன்றுபடக்கூடாதா. தமிழினத்தைக் கூறு போட்டு ஒரு பகுதியினர் இப்போதைக்கு மேலெழ முடியாதவாறு செய்து விட்டார்கள். தமிழர் நிலங்களும் தங்களுடையது தொல்லியல் சான்றுள்ளது என்று சொல்லி மண்ணைப் பறித்து புத்த விகாரைகளையும் கட்டி தமிழர் கோயில்களையும் பறித்து வருகின்றார்கள். இஸ்லாமியர்களுக்கு இந்த நிலை வரும் போராட்டம் அழிக்கப்பட்டால் எனவே இஸ்லாமிய மக்களே உங்களுக்கானதும் இப்போராட்டம் என்று அப்பொழுது யாரோ எழுதியது நினைவில் வருகிறது.... தற்பொழுது சிறு ஓட்டுக்கள் போட்டு சிறிது காலம் ஓட்டிவிடுவார்கள். ஆனால் அவர்களது தேரவாத சிந்தனையிலிருந்து தப்ப வேண்டுமென்றால் தமிழ் பேசுகின்ற அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும்.

இது தான்தேரரின் உண்ணா நோன்பு வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

# நிலத் தொடர்ச்சியற்ற வகையிலாவது வடக்கு-கிழக்கு இணைக்கப்படல் வேண்டும்



சி.அ.யோதிலிங்கம்

வடகிழக்கு இணைப்பு என்ற விடயம் இன்று மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாகிவிட்டது. முஸ்லீம்கள் இணைப்பிற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். எந்த முஸ்லீம் கட்சியும், எந்த முஸ்லீம் அமைப்பும், எந்த முஸ்லீம் தலைவரும் இணைப்பிற்கு ஆதரவாக இல்லை. கிழக்கில் உள்ள சிங்கள மக்களும் ஆதரவாக இல்லை. நல்லாட்சி அரசும் அதற்குப்பின்னால் நிற்கின்ற இந்திய, அமெரிக்க சக்திகளும் மைத்திரி - ரணில் அரசினை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இதுபற்றி பேசுவதற்கு தயாராக இல்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் கடப்பாடு கொண்ட இந்தியாவும் பெருந்தேசிய வாதத்திற்கு பயந்து வாயை மூடி மௌனமாக உள்ளது. கூட்டமைப்புத் தலைமையும் இது பற்றி பெரியளவிற்கு பேசுவதில்லை.

இந்திய - அமெரிக்க - ரணில் - மைத்திரி என்பவற்றின் கூட்டு தமிழ் அரசியலில் இருந்து தமிழ் தேசியத்தை நீக்கம் செய்தல் என்ற தமது நிகழ்ச்சி நிரலில் வட-கிழக்கினை நிரந்தரமாக பிரித்து விடுதல் என்பதனையும் பிரதானமாக சேர்த்துள்ளது. இக் கூட்டு இனப்பிரச்சனையை வடக்குடன் முடக்கி விட முயற்சிக்கின்றது. இச்சக்திகள் இனப்பிரச்சினையை வடக்குப்பிரச்சனையாக சுருக்கி விடமுயற்சிக்கின்றனர்.

மறுபக்கத்தில் பெருந்தேசியவாதிகள் குறிப்பாக பிக்குமார் வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்கும் நடைமுறை வேலைத்திட்டங்களில் இறங்கியுள்ளனர். கிழக்கில் தமிழ் முஸ்லீம் முரண்பாட்டினை மிக இலாவகமாகக் கையாழ்கின்றனர். முஸ்லீம்கள் தமிழ்த் தேசிய ஆதரவு நிலைப்பாட்டினை ஒரு போதும் எடுக்கப்போவதில்லை என்பதும் தங்களுடன்தான் தொடர்ந்தும் நிற்பார்கள் என்பதும் பெருந்தேசியவாதிகளுக்கு நன்கு தெரியும். இதனால் முஸ்லீம் ஆதரவு பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் தமிழ் - முஸ்லீம் முரண்பாட்டில் தமிழ் மக்களுக்கு சார்பான நிலைப்பாட்டினை எடுக்கின்றனர். ஏறாவூர் மீராவோடை பாடசாலை காணி விவகாரத்தில் தலையிட்டு தமிழ்மக்களுக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்துள்ளனர். திருக்கோவில் வட்டமடு மேய்ச்சல் தரைப்பிரச்சினையிலும் தற்போது தலையிட்டுள்ளனர்.

கிழக்கு தமிழ் மக்களுக்கு தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை இல்லாததினால் தமது இருப்பைப் பாதுகாப்பதற்கு பிக்குமாரிடம் சரணடைவதைத்தவிர வேறு தெரிவு இருக்கவில்லை. இது மிகவும் அபாயகரமான போக்கு. இது பற்றி தமிழ் தேசிய சக்திகள் இன்னமும் கவனத்தைக் குவிக்கவில்லை. வட-கிழக்கு இணைப்பு இல்லாமல் இந்த அபாயகரமான போக்கினை ஒரு போதும் தடுக்க முடியாது. பெருந்தேசியவாதிகள் கிழக்கினை எப்படியாவது சிங்கள மயமாக்கவே முற்படுகின்றனர். பிக்குமாரின் பிரசன்னம் தற்காலிகமாக சாதகமானது போலத் தோற்றம் தெரிந்தாலும் நீண்ட காலத்தில் மிகப்பெரும் பாதிப்பையே கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தும். போரின் போது முஸ்லீம்கள் பெருந்தேசியவாதத்திற்கு சார்பான நிலையை எடுத்தனர். இன அழிப்பு நடவடிக்கையில் தாமும் பங்கேற்றனர். இன்று அதன் பயனை அனுபவிக்கின்றனர். இறக்காமம் மாயக்கல் புத்தர்சிலை விவகாரத்தில் தமிழ் மக்கள் முஸ்லீம்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. முஸ்லீம்கள் தனித்து விடப்பட்டனர். இன்று உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை பயன்படுத்தி முஸ்லிம் மக்கள் மீது பெருந்தேசியவாதம் பாயத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களைப்பொறுத்தவரை வட-கிழக்கு இணைப்பு மூன்று வகைகளில் அவசியமானது ஒன்று தமிழ் மக்களின் கூட்டிருப்பை , கூட்டுரிமையை, கூட்டடையாளத்தைப் பேணுவதற்கு இணைப்பு அவசியமானதாகும். இவை தேசிய இனத்தின் அடிப்படைகள். இவை இல்லாமல் ஒரு தேசிய இனமாக தமிழ் மக்கள் எழுச்சி பெற முடியாது. இவற்றை சிதைப்பது தேசிய இனமாக இருப்பதை சிதைப்பதற்கு சமமானது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் இச் சிதைப்பிலேயே கவனம் செலுத்தின. குறிப்பாக கூட்டிருப்பு சிதைந்தால் கூட்டுரிமையும் கூட்டடையாளமும் தானாகவே சிதைந்துவிடும்.

ஒரு தேசிய இனத்தின் கூட்டிருப்பைச் சிதைப்பதற்கு பிரதான வழி அதன் நில ஒருமைப்பாட்டைச் சிதைப்பதுதான், தேசிய இனத்தை ஒடுக்கும் அனைத்து அரசுகளும் இதனை ஒரு கருவியாக பின்பற்றுகின்றன. பாலஸ்தீனம், வட அயர்லாந்து, கிழக்குத் தீமோர், தென் சூடான் என்பவற்றிலும் இது பின்பற்றப்பட்டது. இலங்கையில் சிங்கள ஆட்சியாளர்கள் சுதந்திரத்திற்கு முன்னரே இச்சிதைப்பிற்கான வியூகங்களை வகுக்கத் தொடங்கியிருந்தனர். ஆரம்பத்தில் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் கல்லோயத்திட்டம் என்ற பெயரில் இச்சிதைப்பு நடவடிக்கை அரங்கேற்றப்பட்டது. மிக விரைவிலேயே தமது வியூகத்தை மாற்றி தமிழர் தாயகத்தை இணைக்கும் மையப்பகுதியான, தாயகத்தின் இதயப்பகுதியான திருக்கோணமலை மாவட்டத்தில் சிதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



அனைத்து வகை நிலப்பறிப்பு முயற்சிகளும் திருக்கோணமலை மாவட்டத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்கள், சட்டவிரோத விவசாயக்குடியேற்றங்கள் மீனவர்குடியேற்றங்கள், வியாபாரக்குடியேற்றங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், புனிதபிரதேசங்களுக்கான குடியேற்றங்கள், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றங்கள் என இவை தொடர்ந்தன.

திட்டமிட்ட விவசாயக்குடியேற்றங்களுக்காக அல்லைத்திட்டம், கந்தளாய்த்திட்டம், மொறவேவாத்திட்டம் மகாதிவுல்வெவத் திட்டம், பதவியாத்திட்டம் என்பன உருவாக்கப்பட்டன. இத்திட்டங்களுக்கான காணிகளைப் பங்கிடும் போது திருக்கோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் கூட புறக்கணிக்கப்பட்டனர். சிங்கள மாவட்டங்களிலிருந்து சிங்கள மக்கள் கொண்டு வந்து குடியேற்றப்பட்டனர். ஒற்றையாட்சிக்கட்டமைப்பும், சிங்கள மயமாக்கப்பட்ட நிர்வாக இயந்திரமும் இவற்றிற்குப் பெரிதும் துணைபுரிந்தன.

திருக்கோணமலை மாவட்டத்தை வில்போல வளைத்து இக்குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. குடியேற்றங்களை அரசியல் ரீதியாக பலப்படுத்துவதற்காக சிங்களக் குடியேற்றங்களை ஒரு வால் போல இணைத்து "சேருவல" தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. சிங்களப்பிரதேச சபைகளும் குறைந்த வாக்காளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டன.

30 வருடங்களாக தொடர்ந்த ஆயுதப் போராட்டம் இந்த நிலப்பறிப்பு முயற்சிகளை கட்டுப்படுத்தி வைத்திருந்தது. 2009 இல் ஆயுதப்போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து நிலப்பறிப்பு மீண்டும் தொடர்கின்றது. நிலப்பறிப்பு விடயத்தில் மகிந்தர் அரசிற்கும், மைத்திரி-ரணில் கூட்டு அரசிற்குமிடையே வேறுபாடுகள் இருக்கவில்லை. முன்னையவர் பகிரங்கமாக நிலப்பறிப்பை மேற்கொள்ள, பின்னையவர்கள் சூட்சுமமாக இதனை மேற்கொள்கின்றனர். தற்போது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல, முஸ்லீம்களும் தம்பங்கிற்கு தம்மிடமுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலப்பறிப்பை மேற்கொள்கின்றனர். எனவே கூட்டிருப்பையும், அதன் வழியான கூட்டுரிமை, கூட்டடையாளத்தையும் பேணுவதற்கு வட கிழக்கு இணைப்பு அவசியமானது.

இரண்டாவது கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பு. இங்கு பாதுகாப்பு என்பது ஒரு தேசிய இனத்தை தாங்குகின்ற தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம், மக்கள்கூட்டம் என்பவற்றின் பாதுகாப்பை குறித்து நிற்கின்றது. கிழக்கில் தமிழ் மக்களிடம் அதிகாரம் இல்லை. சிங்கள தரப்பிடமும் முஸ்லீம் தரப்பிடமுமே உள்ளது. இரண்டு தரப்புகளும் கிழக்கு தமிழ் மக்கள் மீது ஒரு தாக்குதல் யுத்தத்தினை நடாத்தத் தொடங்கியுள்ளன. இதை எதிர்த்து ஒரு தற்காப்பு யுத்தத்தினைக்கூட நடாத்த முடியாத நிலையில் கிழக்குத் தமிழ் மக்கள் உள்ளனர்.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டமே சற்று வலிமையான நிலையில் உள்ளது. இது வலிமையான நிலையில் இருந்தால்தான் அம்பாறை மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் எஞ்சியிருக்கின்ற தமிழ்ப்பிரதேசங்களையாவது பாதுகாக்க முடியும். இன்று மட்டக்களப்பு மாவட்டமே தன்னைப் பாதுகாக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது. இயற்கையாக மட்டக்களப்பு வாவி அமைந்துள்ளதால் படுவான் கரைப்பிரதேசம் நிலப்பறிப்பிலிருந்து சற்று தப்பிப்பிழைத்துள்ளது. எழுவான் கரைப்பிரதேசம் நாளுக்கு நாள் நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது. மிக சூட்சுமமான முறையில் காணிகள் பறிக்கப்படுகின்றன.

வடக்கு எப்போதும் சர்வதேசக் கவனிப்புக்குரியது. தமிழ் மக்களும் அதிகளவில் உள்ளனர். அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் ஒரு அரசியல் தளமாக வடமாகாணசபை உள்ளது. எந்தச்சிறிய நெருக்கடிகளும் உடனடியாகவே அரசியல் அரங்குகளில் பேசுபொருளாகிவிடும். உள்நாட்டு மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் பேசுபொருளாகிவிடும். கிழக்கின் நிலை அவ்வாறானதல்ல. சர்வதேச கவனிப்பு அங்கு மிகக் குறைவு. வெளிநாட்டு இராஜதந்திரிகள் கிழக்கிற்கு செல்வதில்லை. சம்பந்தன் தலைமையும் கிழக்கிற்கு செல்லுமாறு வற்புறுத்துவதில்லை. தாம் வெளிநாடுகளுக்கு செல்லும் போது கிழக்கு பிரதிநிதிகளை அழைத்துச் செல்வதுமில்லை. தாங்களும் கிழக்குப்பிரச்சினை பற்றி சர்வதேச மட்டத்தில் பேசுவதில்லை. மொத்தத்தில் கிழக்கு தமிழ் மக்கள் இருட்டுக்குள் விடப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தற்போதுள்ள நிலையிலாவது கிழக்கைப் பாதுகாப்பதற்கு வட-கிழக்கு இணைப்பு மிகமிக அவசியமாகின்றது.

மூன்றாவது முன்னரே கூறியது போல தமிழ் அரசியலிருந்து தமிழ்த் தேசியத்தை நீக்கம் செய்யும் செயல்திட்டம் 2009ம் ஆண்டு தொடக்கம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாகத் தான் அமெரிக்க-இந்திய-மைத்திரி-ரணில்-சம்பந்தன் தலைமை கூட்டு இனப்பிரச்சினையை வடக்குடன் மட்டும் முடக்க முயற்சிக்கின்றது. இனப்பிரச்சினையுடன் கிழக்கையும் இணைத்தால் வட-கிழக்கை இணைப்பை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் வரும். அதை தவிர்ப்பதற்காகவே இந்த முயற்சி. இச்செயல் திட்டத்தின் முதலாம் கட்டம் வட-கிழக்கு பிரிந்த மாகாணசபைகளை செயல்படவிடல். இரண்டாம் கட்டம் வட-கிழக்கு இணைப்பு நடைமுறையில் சாத்தியமில்லை என பிரச்சாரம் செய்தல் மூன்றாம் கட்டத்தில் பௌத்த பிக்குகள் களத்தில் இறங்கிவிடப்பட்டுள்ளனர். 4ம் கட்டம் கிழக்கை சிங்கள மயமாக்குவதாகவே இருக்கும். இந்த செயல்திட்டத்தை வளரவிடாமல் நிறுத்துவதற்கும் வட- கிழக்கு இணைப்பு அவசியம்.

எனவே வட-கிழக்கு இணைப்பு என்பது அரசியல் தீர்வின் அடிப்படை. இது எந்தவித பேரம் பேசலுக்கும் அப்பாற்பட்டது. கிழக்கை அகற்றிவிட்டு தமிழ்த் தேசியம் ஒருபோதும் நின்று பிடிக்க முடியாது. விடுதலைப் போராட்டத்திற்காக கிழக்கு மாபெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்தநிலையில் இது அரசியல் அறமாகவும் இருக்கமுடியாது.


இங்குதான் முஸ்லீம் விவகாரம் முக்கியமாகின்றது. வட-கிழக்கு முஸ்லீம்களினதும் தாயகம் என்பதில் இங்கு மாற்றுக்கருத்து இல்லை. இணைந்த வடகிழக்கு அதிகார அலகினை முஸ்லீம்களும் ஏற்றுக் கொள்வார்களேயானால் அதில் முஸ்லீம்களுக்குரிய இடம் யாது? என்பதை அவர்களுடன் பேசித் தீர்க்கலாம். இது விடயத்தில் மிகுந்த நெகிழ்ச்சியுடன் நடந்து கொள்ள தமிழ்ச் சமூகம் தயாராகவே உள்ளது. ஆனால் கிழக்கின் யதார்த்த நிலை வேறாக உள்ளது.

முஸ்லிம்களின் தனி அதிகார அலகுக் கோரிக்கையையும் பரிசீலிக்கத் தயாராக உள்ளது. வடகிழக்கிற்கென தமிழ் மக்களினால் நகர்த்தப்பட்ட அரசியலோடு முஸ்லீம்கள் இணையவில்லை. அவர்கள் அதற்கு வெளியே தான் நின்றனர். நபர்களாக ஒரு சிலர் பங்கேற்றார்களே தவிர முஸ்லீம் சமூகம் வெளியேதான் நின்றது. உண்மையில் முஸ்லீம்களும் இணைந்திருந்தால் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களையும் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

இறக்காமம் மாயக்கல்லி புத்தர்சிலை விவகாரத்தை முஸ்லீம்கள் தனித்து முகம் கொடுத்திருக்க முடியாது உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பின் பின்னரான காலத்திலும் தமிழ் மக்கள் முஸ்லிம்களோடு நின்றிருப்பர். முஸ்லீம் தேசியவாதம் தமிழ்த் தேசியவாதத்திற்கு எதிராக கட்டமைக்கப்பட்டதே தவிர சிங்கள பௌத்த பெரும் தேசியவாதத்திற்கு எதிராக கட்டமைக்கப்பட வில்லை. ஒரு கட்டத்தில் தமிழ்த் தேசியப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஒரு கருவியாகவும் முஸ்லீம்கள் பயன்படுத்தப்பட்டனர்.

**வடக்கு கிழக்கு இணைக்கப்படுமாயின் முஸ்லிம்களுக்கு என தனியாக ஒரு அலகு வேண்டும்.**

**- ரவூப் ஹக்கீம்**




இது விடயத்தில் தமிழ் மக்களும் முஸ்லீம்களும் தமது தனித்துவத்தை இழக்காது உருவாக்கப்பட்ட "தமிழ் பேசும் மக்கள்" என்ற பொது அடையாளத்திற்குள் வருவதற்கு முஸ்லீம்கள் தயாராக இருக்க வில்லை. அவர்கள் தமிழ் மக்களோடு எந்தவகையிலும் தொடர்பற்ற மத அடிப்படையிலான தனியான இனமாகவே தங்களை அடையாளப்படுத்தினர். அவ்வாறு அடையாளப்படுத்துவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்றது. என்பதை இப்பத்தியாளர் மறுக்கவில்லை.

முஸ்லீம்கள் ஏற்றுக் கொள்ளாத நிலையில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற கோட்பாடு வடகிழக்கில் படுதோல்வியடைந்தது. அது தமிழ் மக்களுக்கு பொறுப்பையும், முஸ்லீம்மக்களுக்கு பொறுப்பின்மையையும் விதித்தது. அது முஸ்லீம் அரசியலை கொச்சைப்படுத்தியதோடு தமிழ் மக்களுக்கு கைவிலங்காகியது. தமிழ்த் தலைமைகள் தமிழ்- முஸ்லீம் முரண்பாட்டை கையாளத் தெரியாமல் நிலவிரிப்புக்குள் தள்ளியபோது முரண்பாடு கையாள முடியாத நிலைக்குச் சென்றது.

இன்றைய நிலையில் முஸ்லீம்கள் வட- கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்வதற்கு பல தடைகள் காணப்படுகின்றன. அதில் ஒன்று வடகிழக்கிற்கென தனியான அரசியல் முஸ்லீம் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப் படாமையாகும். முழு இலங்கைக்குமான முஸ்லீம் அரசியலே கட்டியெழுப்பப்பட்டது. இதனால் வட- கிழக்கு இணைப்பு தென்இலங்கை முஸ்லீம்களையும் பாதிக்கும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

இரண்டாவது வட-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டால் எதிர்ப்பு அரசியலுக்கு முஸ்லீம் அரசியலும் தயாராக வேண்டும். அதன் வளர்ச்சியாக போராட்ட அரசியலுக்கு தயாராக வேண்டும். ஆனால் முஸ்லீம்களிடம் அந்த அரசியல் கலாசாரம் சிறிது கூட வளரவில்லை. அவர்கள் தொடர்ச்சியாக அரசாங்கத்துடன் இணைந்த அரசியலேயே முன்னெடுக்கின்றனர். எதிர்க்கட்சி அரசியலுக்கு அங்கு கொஞ்சம் கூட இடம் இருக்கவில்லை.

மூன்றாவது நீண்டபோர் காரணமாக் சிங்கள ஆட்சியாளர்கள் முஸ்லீம்களுக்கு பல சலுகைகளை வழங்கி தங்களுடன் அணைத்துக் கொண்டனர். இந்தச் சலு- கைகளினால் கிழக்கில் தமிழ் மக்களை விட முஸ்லீம்கள் பொருளாதார ரீதியாக மேல்நிலையில் உள்ளனர். இந்த சலுகைகள் நிரந்தரமானது என நினைக்கின்றனர். தமிழ்த் தேசியப்போராட்டத்தை ஒடுக்கும் ஒரு கருவியாக அவர்கள் பயன்படுத்தப்பட்டமைக்கும் இதுவே காரணம். புலம் பெயர்ந்த ஒரு முஸ்லீம் ஆய்வாளர் குறிப்பிட்டது போல "தமிழரும் சிங்களவரும் மோதின- ால் நாங்கள் நீந்துவோம்". "அவர்கள் ஐக்கியப்பட்டால் நாங்கள் மூழ்குவோம்" என்பதே அவர்களது அரசியலாகியது. வட- கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டால் இந்தச் சலுகைகள் எல்லாம் இல்லாது போகும் என அவர்கள் நினைக்கின்றனர்.

நான்காவது வடகிழக்கு இணைந்தால் தமது வீதாசாரம் குறைந்து தாம் அதிகாரமற்றவர்களாகிவிடுவோம் என்ற கருத்தும் முஸ்லீம்களிடம் உள்ளது. இதனை அவர்கள் நீண்டகாலமாகவே முன்வைக்கின்றனர். முஸ்லீம்களுக்கு தனியான அதிகார அலகு வழங்கப்பட்டால் இந்த அச்சங்களுக்கு இடமில்லை என்பதை ஏனோ அவர்கள் உணரவில்லை.

ஐந்தாவது கிழக்கில் முஸ்லீம்கள் இரண்டாவது பெரும்பான்மையாக உள்ளனர். அம்பாறையில் முதலாவது பெரும்பான்மை அவர்கள்தான். திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் பலர் இடம் பெயர்ந்ததால் முதலாவது நிலையை நோக்கி நகர்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தான் சிறுபான்மையாக உள்ளனர். இன்னமும் சில வருடங்களில் முழுகிழக்கிலும் பெரும்பான்மையாக நாம் வந்துவிடுவோம் எனவே கிழக்கின் அதிகாரம் தங்களிடமே நிலைத்து நிற்கும் என அவர்கள் நினைக்கின்றனர்.

ஆறாவது ஆயுதப் போராட்ட காலத்தில் ஏற்ப்பட்ட வன்முறைகள் காரணமாக கிழக்கில் இரு சமூகங்களும் ஒருவரை ஒருவர் நம்பத்தயாராக இல்லை. எதிர்ப்பு உணர்வு ஆழமாக வேரூன்றியிருக்கின்றது.

எனவே மேற்கூறிய காரணங்களினால் தற்போதைக்கு வட-கிழக்கு இணைப்பினை ஏற்றுக் கொள்ளும் நிலையில் முஸ்லீம்கள் இல்லை. அண்மைய காலங்களில் அவர்கள் மனம் மாறுவதற்கும் வாய்ப்புக்கள் இல்லை. ஆனால் கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை வட- கிழக்கு இணைப்பு என்பது மிக மிக அவசியமாகவுள்ளது. அவர்கள் இன அழிப்புக்குள்ளாவதைத் தடுக்க இதைத் தவிர வேறு ஒரு தெரிவும் இல்லை.

இந்த விடயத்தில் தான் தமிழ்த் தரப்பு மாற்று யோசனை நோக்கி நகர வேண்டிருக்கின்றது. அந்த மாற்று யோசனை என்பது வட-கிழக்கிலுள்ள தமிழ்ப்பிரதேசங்களை நிலத் தொடர்ச்சியற்ற வகையிலாவது இணைப்பது தான். ஒரு கிராம சேவையாளர் பிரிவும் தவறவிடப் படாமல் இவ் இணைப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். முஸ்லீம்கள் மனம்மாறி இணைப்புக்கு ஆதரவாக வரும் போது பின்னர் அவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

நிலத் தொடர்ச்சியற்ற ஒழுங்குமுறை உலகின் பல நாடுகளில் நடைமுறையில் உள்ளது. இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் இதற்கு நல்ல உதாரணம். அங்கு பாண்டிச் சேரியும், காரைக்காலும் மட்டும் தமிழ் நாட்டில் உள்ளன. "ஏனாம்" என்கின்ற பிரதேசம் ஆந்திராவில் உள்ளது. "மாஹி" என்ற பிரதேசம் கேரளாவில் உள்ளது. ஒப்பீட்டு ரீதியில் பார்ப்போமாயின் வட- கிழக்கு தமிழ்ப்பிரதேசங்கள் இவ்வளவிற்கு சேய்மையாக இல்லை.

எனவே தமிழ்த் தேசிய சக்திகள் உடனடியாக இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். நாம் தாமதிக்கின்ற ஒவ்வொருமணியும் கிழக்கை இழக்கும் நிலைக்கு உடந்தையாகிவிடும். ■

# 500 மில்லியன் ரூபாயில் 200 மில்லியனை செலவழிக்கலாம்

## "தௌஹித் ஜமாத் குறித்து பேசாதிருக்க அசாத் அலிக்கு வழங்கப்பட்ட சலுகை!"



இலங்கையில் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிற்கு, தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பின் தலைவர் மொஹமட் சஹ்ரான், நிபந்தனைகளுடனான உடன்படிக்கையின் பிரகாரம் உதவிகளை வழங்கியுள்ளார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் காலப் பகுதிகளில் தன்னுடன் உடன்படிக்கைகளை மேற்கொள் ளும் அரசியல் கட்சிகளுக்கே தாம் உதவி களை வழங்குவதாக தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பின் தலைவர் மொஹமட் சஹ்ரான் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிக ளில் மொஹமட் சஹ்ரான், மக்களை அச்சுறுத்தி தனது ஆளுகைக்குள் அவர் களை வைத்திருந்தார்.

மொஹமட் சஹ்ரான், தனது அதிகாரத் தைப் பயன்படுத்தி, கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலுள்ள மக்களை அச்சுறுத்தி வந்துள்ளதாகவும், அதனால் சஹ்ரானின் பேச்சுக்களுக்கு அந்த பகுதி மக்கள் செவி மடுத்து வந்துள்ளனர்.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மாத்திரமன்றி, மேலும் பல முஸ்லிம் அரசியல்வாதிகளும் மொஹமட் சஹ்ரானுடன் உடன்படிக்கைகளை கையெழுத்திட்டிருந்ததனர்.

காத்தான்குடி பயங்கரவாதி சஹ்ரானின் கோட்டையாக இருந்தது. சஹ்ரானுடன் ஹிஸ்புல்லா, கோத்தபாய மிகவும் நெருக்கமான உறவினை வைத்திருந்தனர்.

அப்துல் ராசிக் என்ற நபர் இன்னமும் வெளியில் சுதந்திரமாக உள்ளார். இவர் பொலிசாரின் பாதுகாப்பில் தான் உள்ளார். கொழும்பில் தான் வாழ்கின்றார். இவர் ஐ.எஸ் அமைப்பின் தலைவர் பாக்தாதியின் கருத்துக்களை நியாயப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார்.

இவர் நேரடியாக பயங்கரவாத தாக்குதலில் ஈடுபடாவிட்டாலும் கூட பயங்கரவாதி ஒருவரை ஆதரிப்பதும் பயங்கரவாதம் தான். இவர் வெளியில் இருக்கும் வரையில் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது.

உண்மையில் இவர்கள் குறித்து நான் பல தடவைகள் அரச தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளேன். தாக்குதல் நடத்த ஒரு வாரத்திற்கு முன்னரும் நான் ஏனைய எமது சமூகத்தினர், சிவில் அமைப்பினரை அழைத்துக் கொண்டு பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து உரிய காரணிகளை தெரிவித்தேன். எவரும் கருத்தில் கொள்ளவில்லை.

பொலிஸ்மா அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் கூட நான் கிழக்கில் ஒரு நிகழ்வில் வைத்து தெரிவித்தேன். ஆனால் குற்றவாளிகள் என எம்மை கருதினரே தவிர உண்மையான குற்றவாளிகளை கண்டறிய எந்த முயற்சியும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த சம்பவம் இடம்பெற்ற நாள் தொடக்கம் இன்றுவரை உள்ள அரசாங்கம் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். இந்த அடிப்படைவாதம் என்பது கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து வருவதாக ஏற்கனவே தெரிவித்துள்ளேன். அப்போதில் இருந்து இன்றுவரை ஐந்து பாதுகாப்பு செயலாளர்கள் கடமையாற்றி இருக்கின்றனர். அவர்களுக்கு நான் உரிய காரணிகளை வழங்கினேன். எவரும் கருத்தில் கொள்ளவில்லை. பொலிசில் பல முறைப்பாடுகளை நாம் செய்தோம். முன்னைய ஆட்சியாளர்கள் காலத்தில் காத்தான்குடியில் ஐ.எஸ் அமைப்பு பலமாக செயற்படுகின்றது என நான் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் தெரிவித்தேன்.

ஆனால் கோத்தபாயவுக்கும் தேசிய தௌஹித் ஜமாத் அமைப்புக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது.

நான் தௌஹித் ஜமாத் குறித்து பேசிய காரணத்தினால் தான் கைது செய்யப்பட்டேன். அதுமட்டும் அல்ல, இவர்கள் குறித்து வாய் திறக்க வேண்டாம் என எனக்கு அறிவுறுத்தினர்.

500 மில்லியன் ஷரூபாய்கள் பணமாக தருவதாக பேரம்பேசினர். தேர்தலில் களமிறங்குவதாக இருந்தாலும் இதில் 200 மில்லியனை செலவழித்துக் கொள்ளவும் ஆலோசனை வழங்கினர்.

கடந்த காலங்களில் காத்தான்குடியில் இடம்பெற்ற பல அசம்பாவிதங்கள் அனைத்திற்கும் சஹாரானே காரணமாக இருந்தார். இது குறித்து எமது முஸ்லிம் மக்கள் பல முறைப்பாடுகளை செய்தும் பொலிசார் சஹ்ரான் பக்கமே நின்றனர்.

சஹாரானை கைதுசெய்ய மக்கள் கிழக்கில் பாரிய ஆர்ப்பாட்டம் செய்தனர். இவை எல்லாம் இரகசியமான விடயங்கள் அல்ல. அனைவருக்கும் இது நன்றாகவே தெரியும்.

அதேபோல் தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பை தடை செய்ய வேண்டும் என கூறினோம். ஆனால் தேசிய தவ்ஹித் ஜமாத் அமைப்பும் பொலிசாரும் ஒன்றாகவே செயற்பட்டனர் என்றார். ■



# பல ஆண்டுகால பிரச்சினைகளும் சில நிமிட நேரச் சந்திப்புகளும்

அராலி குமாரசாமி

பயங்கரவாதத் தாக்குதலினால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைக்கு மத்தியில் எமது நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டதனால் இலங்கையின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக உலகிற்கு நற்செய்தியொன்று வழங் கப்பட்டுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் நரேந்திர மோடியிடம் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமராக இரண்டாவது முறையாக பதவி பிரமாணம் செய்து கொண்ட நரேந்திர மோடி, தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக மாலைதீவிற்கு சென்ற பின்னர் இலங்கைக்கும் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இவ் விஜயத்தின்போது, சுமார் ஐந்து மணி நேரம் இலங்கையில் தங்கியிருந்த இந்தியப் பிரதமர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்து



கலந்துரையாடல்களை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை, பிரதமர் ரணில் விக்ரமசிங்க வரவேற்றதைத் தொடர்ந்து கடும் பாதுகாப் புக்கு மத்தியில் அவர் கொழும்பை நோக்கிப் பயணமானார். இந்த விஜயத்தின் முதலாவது நிகழ்வாக, ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு சென்று, பயங்கரவாதத் தாக்குதலில் உயிர்நீத்த மக்களுக்கு தனது அஞ்சலியை செலுத்தினார். அந்த நிகழ்வில், பிரத மர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் சஜித் பிரேமதாஸ, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் உட்படப் பலர் கலந்துக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்த இந்திய பிரதமரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரவேற்றார். இராணுவ அணிவகுப்பு மரியாதை அவருக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்திய பிரதமருக்கும், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால் சிறிசேனவிற்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ஆந்தப் பேச்சுவார்த்தையின்போது 'பிரதமர் நரேந்திர மோடியின் இந்த விஜயத்தின் ஊடாக இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான நம்பிக்கை மற்றும் நட்புறவு மேலும் வலுவடைந்துள்ளது' என இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். மேலும் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், இந்திய பிரதமரின் இந்த விஜயத்தின் ஊடாக, இலங்கையின் பொருளாதார, வர்த்தக, சுற்றுலா துறைகளின் வளர்ச்சியை சாதகமாக மாற்ற முடியும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபாலா நம்பிக்கை வெளியிட்டார்.


இதற்கு பதிலளித்த பிரதமர் நரேந்திர மோடி, இது போன்ற விடயங்கள் தமது கடமை எனவும் கூறியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிடுகின்றது. அத்துடன் பயங்கரவாதத்தை முழுமையாக இல்லா தொழிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்புக்களை மேம்படுத்த வேண்டும் என இரு நாட்டு தலைவர்களும் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இலங்கை மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது உலகத் தலைவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியாவார். இந்த விஜயத்தில் அவர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசியிருந்தார். பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் இலங்கை எதிர் நோக்கியுள்ள நிலைமை குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நட்பு ரீதியில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, நாமல் இராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


அதனைத் தொடர்ந்து அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற் உறுப்பினர் களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர் பேச்சவார்த்தை நடத்தியுள்ளார் கலந்து ரையாடல்களை நடத்துவதற்கு ஒதுக்கப் பட்ட சுமார் 15 நிமிடங்கள் தமக்குப் போதுமானதாக இல்லை எனவும், இலங்கை தமிழ் பிரச்சினை குறித்து விரிவாக கலந்துரையாட வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும், தமக்கு அதற்கான சந்தர்ப்பத்தை புதுடெல்லியில் ஏற்படுத்தி தருமாறும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்டுக் கொண்டார். அதற்கு பதிலளித்த இந்திய பிரதமர், தான் விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உறுதியளித்ததாகத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். இந்தியப் பிரத மர் நரேந்திர மோடியின் விஜயம் இலங்கைக்கு ஒரு கௌரவத்தை வழங்கினாலும் அவர் அங்கு வாழும் மக்களின் பிரச்சினை தொடர்பில் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை என்பது அவரது நடவடிக்கையில் இருந்து தெரியவருவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் பாதுகாப்பு இருக்கிறது என்பதை மட்டுமே வெளிப்படுத்தி நிற்கின்ற பிரதமர் தனது விஜயத்தின்போது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக எதுவும் பேசவில்லை என்பது கவலை தரும் விடயமாகும். ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த பயணம் அமைந்ததாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். நல்லுறவை ஏற்படுத்த உதவியதாக மோடி தெரிவித்திருப்பது ஏற்கனவே உறவு நன்றாக இல்லை என்று அர்த்தப்படுத்துமோ? இல்லா விடில் தமிழ் மக்கள் விடயத்தில் இன்னும் நல்லுறவு ஏற்படவில்லை என்பதால் தான் நல்லுறவை ஏற்படுத்து வதற்கான இலங்கை விஜயம் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினாரோ தெரியவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க இந்தியப் பிரதமர் சென்ற போது மழை பெய்து கொண்டிருந்ததனால், இந்தியப் பிரதமரை குடையுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைத்து வந்திருந்தார். இது பற்றி சமூக வலைத்தளங்களில் தற்போது அதிகம் பேசப்பட்டு வருகிறது. ஒரே வாகனத்தில் வந்த நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு குடைக்குள் நடந்து சென்றுள்ளனர். இருவரும் நீண்ட காலமாக நண்பர்களாக உள்ள நிலையில், இரண்டு குடைகளை பிடிக்க இடம் போதாமையினால் "நாங்கள் இருவரும் ஒரே குடையில் செல்வோம்" என மோடி, ஜனாதிபதியி டம் கூறியதாகச் சொல்லப்படுகிறது.







கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பேசப்பட்டது விடயத்தையே அவர்கள் 2019 ஆம் ஆண்டும் பேசியதால்தான் என்னவோ இதைப் பழைய பேச்சு என்று பிரதமர் நரேந்திர மோடி காதில் வாங்காமல் போனாரோ தெரியவில்லை. இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடவில்லை. எங்களுக்காக நேரம் ஒதுக்கித் தருமாறும் இந்தியாவுக்கு நாங்கள் வந்து தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேச வேண்டியிருக்கிறது என்றும் கேட்டுள்ளனர். நிலைமை இப்படி இருக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தியப் பிரதமர் இந்தியா வரச்சொல்லி இருக்கிறார் அங்கு போய் பேசினால் தீர்வு கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்புகிறார்களா?.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பல தடவைகள் இந்தியா சென்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதன் மூலம் இந்தியா வின் நிலைப்பாடு நன்கு தெரிந்தும் தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றலாம் என்று பார்க்கிறார்கள்.

மைத்திரி அரசு தம்மை ஏமாற்றிவிட்டது என்று சொல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசு தம்மை ஏமாற்றிவிட்டது என்று சொல்ல முடியாத நிலை மையில் இந்தியா போகப் போகின்றார்கள் இவர்களை என்னவென்று சொல்ல. காலம் பதில் சொல்லும். ■



# மயானங்கள் இல்லாத ஊராகுமா?



பிறைவாணன்

யாழ்ப்பாணத்தில் உரும்பிராய் வடக்கு, மல்லாகம் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம், உரும்பிராய் வடக்கு சரஸ்வதி, கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக, உரும்பிராய் செல்வபுரம், கோண்டாவில், புத்தூர் மேற்கு கிந்துசிட்டி, திருநெல்வேலி பாற்பண்ணை போன்ற இடங்களில் மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையாக இருக்கும் மயானங்களை அப்புறப்படுத்தி வேறு இடங்களில் அவற்றை அமையுங்கள் என கோரிக்கை விடுத்து மக்கள் போராட்டங்கள் பல செய்துள்ளனர்.

ஒரு ஊரில் ஒரு மயானம் இருக்க வேண்டும். அந்த ஊரில் இருந்து மயானங்களை அகற்றி வேறு ஊருக்கு கொண்டு போக அந்த ஊர்க்காரர்கள் விடுவார்களா? அடுத்தது பல கிலோ மீற்றர் தாண்டி ஒரு வெளியில் மயானங்களை அமைத்தால் அந்த மயானங்களுக்கு இறந்த உடலை தகனம் செய்வதற்கு இவர்களால் கொண்டு செல்ல முடியுமா?

போன்ற பல காரணங்களால் மயானங்களை அகற்றுவது என்பது முடியாமல் இருக்கிறது.

மயானங்களை அகற்றுமாறு கோரி போராட்டங்களை நடத்துவதால் மயானங்களின் அருகில் இருக்கும் குடியிருப்பாளர்கள் அனைவரும் போராட வெளிக்கிட்டு விடுவார்கள். இதனால் மயானங்களை அகற்றாமல் மின்சார கருவியைப் பயன்படுத்தி இறந்த உடலங்களை தகனம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். இது சம்பந்தப்பட்ட அரச அலுவலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மயானங்களுக்கு ஆபத்து வந்துவிட்டது. மயானங்களை மூடிவிட்டால் அந்த மயானங்களைப் பயன்படுத்தி வந்த மக்கள் எங்கு போவர் என்ற கேள்விக்கு இன்றும் விடையில்லாமல் மயானங்களை மூடுமாறு கேட்கின்றனர். கேட்பவர்களுக்கும் மயானம் இல்லாமல் போகப் போகிறது என்ற செய்தி அவர்களுக்கும் காலப் போக்கில் தெரியவரும்.

மயானங்களைச் சூழ குடிமனைகள் அமைந்த இடங்களில் மயானங்கள் முதலில் வந்ததா? அல்லது குடிமனைகள் முதலில் வந்ததா? என்று பார்த்தால் மயானங்கள் தான் முதலில் வந்திருக்கின்றன. பின்னர் தான் குடிமனைகள் வந்திருக்கின்றன.

இப்படி நிலைமை இருக்கும் போது மயானங்களை மூடச் சொல்லி கேட்பவர்கள் காலப் போக்கில் தங்களுக்கும் மயானம் இல்லாமல் போகக் கூடிய சூழல் ஏற்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரதேச சபைகளிடம் மின்சார கருவி பூட்டுவதற்கு நிதி வசதியில்லாத காரணத்தால் சடலங்களை விறகைப் பயன்படுத்தி எரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அடுத்தது மயானங்களுக்கு அருகில் குடியிருப்புகள் தோன்றினால்



எங்கு கொண்டு போய் இறந்த உடலங்களை தகனம் செய்ய முடியும் .

மயானங்களுக்கு அருகில் குடியிருப்புகளை அமைத்துவிட்டு மயானங்களில் உடலங்களை எரிப்பதால் சுகாதார பாதிப்பு ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. மயானத்துக்கு அருகில் குடியிருப்புகளை அமைப்பதற்கு முதல் சிந்தித்திருக்க வேண்டும். யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு மக்கள் பிள்ளையார் கட்டு இந்து மயானத்தில் இறந்த உடலங்களை தகனம் செய்து வந்தனர். இருந்தும் அருகில் குடியேறிய மக்களுக்கு பிரச்சினை என்று கூறி அந்த மயானம் மூடப்பட்டுள்ளது. இந்த மயானத்தை பயன்படுத்திய மக்கள் வெளி ஊர்களில் உள்ள மயானங்களில் இறந்த உடலங்களை தகனம் செய்து வருகின்றனர்.

அந்த ஊர்களில் உள்ள மயானங்களில் இறந்த உடலங்களை தகனம் செய்வதற்கு இவர்களுக்கு தடை வந்தால் இவர்கள் எங்கு போவார்கள். மயானத்தின் அருகில் குடியேறியவர்கள் பதில் சொல்லவும்.

இந்த மயானத்தை அமைப்பதற்கு அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பெண் பல ஏக்கர் காணியை வழங்கியுள்ளார். இப்பொழுது மயானம் அமைப்பதற்கு வழங்கிய காணியில் ஒரு சில பரப்பளவு காணியை விட்டு விட்டு மிகுதியை அபகரித்து கல் வீடு தொடக்கம் ஆலயம் வரை கட்டியுள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு புன்னாலைக்கட்டுவன் ஜே-208 பிள்ளையார் கட்டு இந்து மயானத்துக்கு எதிராக குறித்த மயானப் பகுதியிலுள்ள மக்களால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் இறந்த உடலங்களை தகனம் செய்வதை தடுக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இங்கு குடியேறிய மக்கள் தான் மயானத்தை மூடச்சொல்லி நீதிமன்றம் சென்று அந்த மயானம் மூடுவதற்கு காரணமாக அமைந்துள்ளனர். அந்த மக்கள் இப்படி செயற்படுகின்றனர் என்றால் பிரதேச சபை என்ன செய்கிறது?

வழக்கை ஆராய்ந்த நீதவான் வலி. தெற்கு பிரதேச சபை செயலாளரை நீதிமன்றம் அழைத்த போது 6 மாத காலப் பகுதியில் குறித்த மயானத்தில் மின்சாரம் மூலம் தகனம் செய்யக் கூடிய வசதியை ஏற்படுத்துவதாக மன்றில் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் குறித்த காலப் பகுதி வரை விறகில் எரியூட்டுவதற்கான அனுமதியை மன்று வழங்கியது.

குறித்த காலப்பகுதி முடிவுற்றும் செயலாளரினால் மன்றில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மின்சார எரியூட்டல் கருவி பொருத்தப்படாமையினால் இறுதிச் சடங்கை எவ்வாறு செய்வதென மக்கள் கேள்வி எழுப்பினர்.

இந்தக் கேள்விக்கு மின்சார எரியூட்டல் கருவி பொருத்துவதாயின் 4 கோடி செலவாகும் என இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது கேள்விக்குறியாகவுள்ளது என செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பதிலை அன்றே நீதிமன்றில் செயலாளர் தெரிவித்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைத்திருக்கும். பிரதேச சபை நீதிமன்றில் மின்சார எரியூட்டல் கருவியை பொருத்துவோம் என்று வாக்குக் கொடுத்தது ஏன் என்று மக்கள் கேள்வி கேட்கின்றனர்.

இன்று மயான விவகாரம் தொடர்பாக பிரதேச சபையினர் தெரிவிக்கும் பதில் மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யத் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

மயானம் இல்லாத மக்கள் தான் பல துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். தமது மயானத்தை விடுவிக்கக் கோரி சுன்னாகம் பிரதேச சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டும் பலன் கிடைக்கவில்லை.

பிரதேச சபை தான் இந்தப் பிரச்சினைக்கு ஒருவழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த மக்கள் இறந்த உடலங்களை அருகில் உள்ள ஊர்களுக்கு கொண்டு சென்று தகனம் செய்யட்டும் என்று கண்டும் காணாமல் இருந்தால் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறும் என்பது உண்மை. ■

## மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருக்கும் மயானங்களில் சில



புன்னாலைக்கட்டுவன் வடக்கு, திடற்புலம்



உரும்பிராய் வடக்கு, சரஸ்வதி



கொக்குவில், மருத்துவபீட மைதான அருகு



கோண்டாவில்



புத்தூர் மேற்கு, கிந்துசிட்டி



திருநெல்வேலி, பாற்பண்ணை



உரும்பிராய், செல்வபுரம்



மல்லாகம் தெற்கு

# உங்கள் இரசனைப் பண்பை தூண்டித் துலங்க வைக்க...

செ.யோசப்பாலா
உளசமூகச்சீராளன்.

தினம் தினம் எம்மை சூழ்ந்து பல வகையான அழகியல் விசித்திரங்களை கடந்து வருகிறோம். எம் அருகே பல சுற்றுலாப்பயணிகளும் நம்நாட்டு கலைஞர்களும் ரசனைமிக்க சிறுவர்களும் நடமாடி தமது ரசனைகளை உணர்வால் மகிழ்வுற்றதுடன் புதுப்புது அர்த்தங்களை தேடலாக்கி மகிழ்கின்றார்கள். அதனருகே செல்லும் நாமுன் அதனை கண்டுகொள்ளவில்லை. ரசித்து மகிழ சந்தர்ப்பம் கொடுக்கமுயலவில்லை என மீட்டுப் பார்க்கும் போது எமது எண்ணங்கள் சிந்தனைகளில் எவற்றை நாம் முன்னுரிமை படுத்துகிறோம் என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

பல கொண்டாட்டங்கள், களியாட்டங்கள், கலை வெளிப்பாடுகளுக்கு நண்பர்களுடன் செல்லும் சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்தி மகிழ்ந்தோமானால் எமது எண்ணங்களும் ரசனைகளும் எமக்கு மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவதுடன் என் சூழலில் இருப்பவர்களுக்கும் மகிழ்வான சூழலை ஏற்படுத்த என் கருத்துக்களும் ஏற்புடையதாக அமையும். இதனை எமது செயல்களே வெளிப்படுத்தி ஊக்கப்படுத்த சந்தர்ப்பமாக அமையும். "சிந்தனை செய்ய மட்டும் மனிதன் சித்தமாய் இருந்தால் இவ்வுலகில் எவரும் எல்லாப் பிரச்சினைகளையும் எழுதில் தீர்க்க முயலும்" என்ற அறிஞர் நிக்கலிஸ் மார்ரே பட்லரின் கூற்று எமது கூழலில் ஏற்பட நாமே முயலவேண்டும்.

வீட்டிலுள்ள சிறுவர்களின் மகிழ்ச்சி ஒரு விளையாட்டுப் பொருளில் ஈடுபடும் போது அதனை பலவாறு மாற்றி சிந்திக்கத் தூண்டுவார்கள். ஆனால் ஒன்றுடனே மட்டும் அவர்களின் ரசனை அடங்கி விடுவதில்லை. மாற்றப்படும் ரசனைத்தன்மை சிந்தனை மாற்றங்கள் அடுத்த நிலைக்கு மேலும் வளர வாய்ப்புக்கள் உண்டு. இச்சிறுவர்கள் இசையை கலையை ரசிப்பதிலும், அதனை உள் உணர்வுகளோடு சங்கமித்து அசைவுகளால், கவனயீர்ப்புக்களால் புலனை செலுத்துவதும் கலை ரசனை வளர்ப்பதற்கு தூண்டுதலாகவே உள்ளது. இதனை உணராத பெற்றோர் பெரியோரின் ரசனை அற்ற தன்மையால் சிறுவர்களின் தன்மை மழுங்கடிக்கப்படுவதை உணத்தவறி விடுவார்கள்.

அழகிய தேசமே எம் தேசம். எமது சூழலும் அழகாக இருப்பதாலே தானே எத்தனை சுற்றுலாப் பயணிகள், எம்மவர் தேசத்துக்கு வருகைதந்து அனுபவிக்கிறார்கள். எமது குழந்தைகள் குடும்பத்தவர்கள் எமது இயற்கையின் அழகை ரசிக்க தவறும் சந்தர்ப்பங்களை மீட்டுப் பார்க்கவே நாம் முயலவேண்டும்.

சின்னஞ் சிறுவர்களின் கலை உணர்வுகளை... சமூக மட்டத்தில் குடும்பங்களில் தூண்டப்பட நாம் எமது எண்ணங்களில் ரசனை உணர்வுகளை வளர்த்தால் உருவாக்கமுடியும். எமது பிள்ளைகளை வளர்ச்சி என்பது கட்டாய கல்வி முறையில் மட்டுமல்ல ஆர்வமுடன் தேடி கற்று மகிழும் பல சந்தர்ப்ப சூழல்களை நாமாக உருவாக்குவது பொறுப்புள்ளோரின் பொறுப்பு மிக்க செயல்களாக மாறவேண்டும்.

"உண்மையான சிரிப்பு எம் உள்ளத்திலிருந்து எழுவது. அது ஏழனமல்ல, அன்பே அதன் ஆதாரம்" என்பார். தாமஸ் கார்லைல் என்ற அறிஞன். அந்த மகிழ்வான சிரிப்பு எங்கள் குடும்பங்களில் நிலைக்க விழாக்கள், கொண்டாட்டங்கள், சடங்குகள் சமூக மாற்றத்துக்கு ஏற்றதாக மகிழ அதன் விளக்கங்கள் சிறுவர் மனங்களில் பதிய ஆன்மீக நன்நெறிகளில் பங்கேற்கும் ரசனைமிக்க வழிகளை தூண்டினால் துலங்குவார்கள். அதுவே அழகுமிக்க குடும்ப, சமூக உறவை வளர்க்கும் மகிழ்வூட்டும் விழாக்களாகும். பங்கேற்கவைக்கும் கலை வெளிப்பாடுகளால் மன இறுக்கமின்றி மகிழ் தூண்டும் நிலைகள் வளர எங்கள் குடும்ப சூழல் சமூக பொது அமைப்பு சூழலால் சிறுவர் பெரியோர் நல்லுறவுப் பாலமாக அமையும்.

கடமைக்காக கொண்டாடப்படும் விழாக்கள், பரீட்சை மட்டும் நடாத்தி பரிசில் வழங்கும் ஆண்டு விழாக்கள் மாறாது. பெரியோரைக் கௌரவிக்க சிறுவர்களை பயன்படுத்தும் நிலை மாறி, சிறுவர் மனதில் தமது முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் திறமையை வெளிப்படுத்தத் தூண்டும் சந்தர்ப்பங்களை உருவாக்க முயல்வதே ஆரோக்கிய சிந்தனை திறன் மிக்க ரசனை பண்புகள் கலைகளாக நமது இசையில் ஆர்வமிக்க ஆன்மீக விழுமியங்களை உணர்ந்து வளர்க்கப்படும் முன்மாதிரிகளே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

"உன்னைச் சுத்தமாகவும் ஒளிமயமாகவும் வைத்துக்கொள். உலகைப் பார்க்க நீ பயன்படுத்த வேண்டிய சாளரம், நீயேதான்" அறிஞர் ஜாஜ் பெர்ணான்டோ இவை இளையோருக்கு விடும் அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

காலத்தை சொல்லி காலத்தை கடத்திய காலங்களை கரைத்து தவிர்த்து இளையோரின் தலைமைகள் கிராம, சமூக, குடும்பத்தில் பொறுப்பேற்று பொதுப்பணிகளில் ஈடுபடத்தூண்டப்பட்டால் எதிர்கால சமூக வழிகாட்டிகளாக நல்ல சிந்தனை ரசனைசூழலை உருவாக்க முடியும். முடங்கிக் கிடப்போர் எல்லோரும் முதியவர்களே, இளையோர்கள் எல்லோரும் துடிப்புடன் இயங்கும் சக்தி உடையவர்களே. சாட்டுக்கள் பல சொல்லியே சாவை எதிர்பார்த்து சனத்தொகைக்கு மனிதராக வாழாது. சுதந்திர வாழ்வை சுவைக்க வைக்கும் ரசனை மிக்க நல்ல தலைவர்களாக சாதிக்கத் துடிக்கும் இளையோரே நல்ல வழிகாட்டும் தலைவர்களாக உருவாகி உருவாக்க முன்வரவேண்டும். வரலாற்றுத் தலைவர்கள் கற்பித்த பாடமும் இதுவே.



இப்போது இந்த கிராமம் சிலரின் நினைவில் மட்டுமே வாழ்கிறது. இந்த கிராமம் குறித்து பசுமையான நினைவுகள் அந்த மக்களின் மனதில் இப்போதும் இருக்கிறது. அதனால்தான், ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே உயிர்பெறும் இந்த கிராமத்தை காண, முன்பு அங்கு வாழ்ந்த மக்கள் திரள்கிறார்கள்.

அது எந்த கிராமம்? அந்த கிராமத்திற்கு என்ன ஆனது? - விரிவான தகவல்களை

ஆனால், அவர்களுக்கு வேறு நிலமும், இழப்பீடும் வழங்கப்பட்டது.

பெரும் எதிர்பார்ப்புகளை கிளப்பிய திட்டம் அது. தெற்கு கோவாவின் குடிநீர் தேவை, விவசாயம் மற்றும் தொழிற்சாலை தேவைக்காக கட்டப்பட்ட அணை அது.

ஒரு நாளுக்கு 400 மில்லியன் லிட்டர் குடிநீர் மக்களுக்கு இந்த அணை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த கிராமம் குறித்து நினைவுகூரும்




வழங்குகிறார் கோவாவை சேர்ந்த பத்திரிகையாளர் சுப்ரியா வோரா.

இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இரு குன்றுகளுக்கு மத்தியில் சலவ்லிம் நதிக்கு மத்தியில் உள்ளது கர்டி எனும் கிராமம். ஒரு காலத்தில் தென் கிழக்கு கோவாவில் மிகவும் வளமாக இருந்த கிராமம் இது. அதன் வளம், அதன் செல்வாக்கு என அனைத்தும் கடந்த காலமாகிவிட்டது.

இனி இந்த கிராமம் எப்போதும் இருக்கப் போவதில்லை என 1986 ஆம் ஆண்டு அந்த மக்கள் முடிவுக்கு வந்தனர். இதற்கு காரணம் அந்தப் பகுதியில் கட்டப்பட்ட கோவாவின் முதல் அணை. ஆம், அந்த அணை கட்டப்பட்ட பின்பு, இந்த கிராமம் முழுவதுமாக நீரில் மூழ்கியது. அங்குள்ள மக்கள் வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தனர்.




ஆனால், மே மாதத்தில் தண்ணீர் வற்றும் போது, அங்கு ஒரு கிராமம் இருந்ததும் அங்கு மக்கள் வசித்தார்கள் என்பதற்கான தடயமும் வெளியே தெரியும்.

உடைந்த மண் வீடுகள், மரங்கள், கோயில் கட்டடங்கள் என அங்கு பெரும் மக்களின் வாழ்க்கை இருந்ததற்கான சாட்சியங்கள் வெளிப்படும்.

ஒரு காலத்தில் அந்த கிராமம் வளமாக இருந்திருக்கிறது. ஏறத்தாழ 3000 மக்கள் அங்கு வசித்திருக்கிறார்கள். தென்னை, முந்திரி, மாங்காய், பலா என விவசாயம் அங்கு உயிர்ப்புடன் நடந்திருக்கிறது. இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் அங்கு ஒற்றுமையாக வாழ்ந்திருக்கிறார்கள். அங்கு ஒரு கோயில், ஒரு தேவாலயம், மற்றும் இஸ்லாமிய வழிபாட்டு தலம் இருந்திருக்கிறது.

கிளாசிக்கல் பாடகர் மொகுபாய் குர்திகரின் சொந்த ஊர் இது. ஆனால், 1961ஆம் ஆண்டு போர்ச்சுகலிடமிருந்து கோவா விடுதலை பெற்ற பின் நிலைமை மாறியது.

இந்த கிராமம் குறித்த நினைவுகளை சுமந்திருக்கும் 75 வயதான கஜனன் குர்டிகர், "இந்த கிராமம் மூழ்கும் என்று எங்களிடம் கூறினார். ஆனால் எங்களின் தியாகம், பெரும் நன்மையை கொண்டு வரும்" என்றார்.

குர்டிகர் உள்ளிட்ட 600 குடும்பங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இனைகியோ, "இந்தப் புதிய கிராமத்திற்கு வந்தபோது எங்களிடம் எதுவுமே இல்லை" என்கிறார்.

அணை கட்டப்பட்ட போது 1982ஆம் ஆண்டு குடிபெயர்க்கப்பட்ட சில குடும்பங்களில் இவர் குடும்பமும் ஒன்று. அப்போது அவர் தற்காலிக வீடுகளில் தங்கவைக்கப்பட்டார். பின் சிதிலங்களை திரட்டி அதிலிருந்து தன் சொந்த வீட்டை கட்டினார். அதற்கு அவருக்கு ஐந்து ஆண்டுகள் தேவைப்பட்டது.

குருசரண் குர்டிகருக்கு தங்கள் நிலத்திலிருந்து குடிப்பெயர்ந்த போது பத்து வயது.

எனக்கு இன்னும் எங்கள் நிலத்திலிருந்து குடிபெயர்ந்த தருணங்கள் பசுமையாக நினைவில் இருக்கிறது என்கிறார் அவர். இதில் விசித்திரம் என்ன வென்றால் இவர்கள் எதற்காக தங்கள் வாழ்விடத்தை அளித்தார்களோ அதன் பலனை இவர்கள் அனுபவிக்கவே இல்லை. ஆம், கர்டி மக்களுக்கு வேறிடத்தில் நிலம் வழங்கப்பட்ட இடத்திற்கு இந்த அணையின் நீர் வந்து சேரவே இல்லை.

இப்போது குர்டிகர் வசிக்கும் வடம் பகுதியில் இரண்டு கிணறுகள் உள்ளன. ஏப்ரல், மே மாதங்களில் அந்த கிணறு வற்றிவிடும். அந்த சமயங்களில், குடிநீர் தேவைக்காக பெரும் பாலும் அரசின் தண்ணீர் தொட்டிகளையே சார்ந்து இருப்பதாக கூறுகிறார். மே மாதத்தில் அந்த அணை வற்றும் போது, சிதிலங்கள் தெரியும். அதனை காண, தமது நினைவுகளை மீட்டு எடுக்க மக்கள் கர்டி கிராமத்தில் திரள்வார்கள்.

கிறிஸ்தவர்கள் அங்கு மிச்சமாக தெரியும் தேவாலயத்திலும், இந்துக்கள் கோயிலிலும் தங்கள் வழிபாடுகளை மேற்கொள்வார்கள்.

கோவாவை சேர்ந்த சமூகவியலாளர் வெனிக்ஷா ஃபெர்ணாண்டஸ், "இன்று நம்பையை தூக்கிக் கொண்டு வேறு இடங்களுக்கு குடி பெயர்வது எளிது. ஆனால், கர்டியில் வாழ்ந்த மக்களுக்கு நிலம்தான் அடையாளம். அதனை துறப்பது எளிதல்ல. அதனால், ஒவ்வொரு ஆண்டும் தம் நிலத்திற்கு வருகிறார்கள்" என்கிறார்.

ஜெருசலேம் யாத்திரை-15

## பயண அனுபவங்கள்

- ஏ.ஜே.ஞானேந்திரன்




# கலிலேயக் கடல்


இங்கே முதலாம் நூற்றாண்டு காலத்தில் இருந்ததுபோல, ஓர் உணவகத்தை அமைத்திருக்கிறார்கள். இங்கேதான் நாம் எல்லோரும் மதிய உணவை உட்கொண்டோம். இங்கே இருவர் சுடச்சுட குப்பூஸ் என்ற ரொட்டிகளை சுட்டு அடுக்க, பெண்கள் அதை எடுத்து வந்து எமக்கு பரிமாறினார்கள். அதற்கு முன்பு எமக்கு சுவையான பருப்பு சூப் பரிமாறப்பட்டது. மட்பாண்டங்களே மேசையில் வைக்கப்பட்டிருந்தன. ஒலிவ் பழங்கள், சலாட், தொடக்கம் பெயர் சொல்லத் தெரியாத பல உபரி உணவுகள் இந்த ரொட்டியுடன் தொட்டுச் சாப்பிட, எமக்கு பரிமாறப்பட்டன. பொதுவாக அன்றைய நாட்களில் கட்டுப்படியாகாது என்பதால் மாமிசம் இவற்றுடன் பரிமாறப்படுவதில்லை. ஆனால் விஷேட நாட்களில் மட்டும் கோழி பரிமாறப்படும். எமக்கும்கோழி பரிமாறப்பட்டது. நாம் மொத்தமாக கொழும்பில் பணம் செலுத்தி விட்டமை காரணமாக, எங்கு சாப்பிட்டாலும், இங்கு நின்ற பத்து நாட்களிலும் அது "இலவசமாகவே" கிடைத்தது. இந்த உணவை ஒருவர் சாப்பிடுவதானால் எவ்வளவு செலவாகும் என்று விசாரித்தில் தலைக்கு 65 இஸ்ரவேல் புது ஷெக்கல்கள் (சுமாராக 3200ரூபா ) என்று அறியக் கிடைத்தது. இங்கு புழக்கத்திலுள்ள பணத்தை புதிய ஷெக்கல் என்றே அழைக்கிறார்கள். ஒரு ஷெக்கல் சுமாராக 50ரூபா பெறுமதியானது. வளரும் இஸ்ரவேலின் பொருளாதாரத்தில், ஷெக்கல் ஒரு பலமான நாணயமாக சந்தையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.



கிறிஸ்து பிறந்து 2000 வருடங்களுக்கு பின்னர், கிறிஸ்து இளம்வயதில் நடமாடி வளர்ந்த நசரேத் கிராமத்தை எம் முன்னே தத்ரூபமாக சிருஷ்டித்து இருக்கிறார்கள். கிறிஸ்துவின் காலத்தில் இருந்தபடி ஒலிவ் மரங்கள் ஆங்காங்கே வளர்ந்து நிற்க, பயிர்களுக்கு நீர்பாய்ச்சும் அன்றைய முறையை அங்கே கொண்டு வந்து, அதே மேடும் பள்ளமுமான கற்பாதைகளை அப்படியே விட்டுவிட்டு, "தந்தை" சூசை தன் தொழிலில் உபயோகித்த ஆயுதங்கள் வரை கொண்டு சென்று நிறுத்துகிறார்கள் இந்தக் கிராம அமைப்பாளர்கள் எந்தத் தொழில் இலாபத்தையும் கருத்தில் கொள்ளாமல், அன்றைய அசல் கிராமத்தை எம் கண்முன்னே நிறுத்துவதையே முழுநோக்கமாக கொண்டு இந்த அமைப்பு இயங்குகின்றது. இங்கு அனுமதி இலவசம். இங்கு எஞ்சியிருக்கும் அன்றைய கல் வீடுகளின் அறைகளுக்குள் நுழைந்து அவர்கள் உபயோகித்திலிருந்த பல்வேறு பொருட்களை நேரில் கண்டு வியந்தோம். வீட்டுக்கு வீடு அருவிகளிலிருந்து நீரை வரவழைப்பதற்காக, அந்தக் காலத்தில் அவர்கள் செய்திருந்த பொறி முறைகள் எம்மை வியப்பின் உச்சிக்கு அழைத்துச் சென்றன... இவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்வி கற்றிருந்தார்கள்? ஆச்சரியப்பட வைக்கும் கேள்வி...

**இதயவடிவிலான கலிலேயக் கடல்**

கலிலேயக் கடல் (Sea of Galilee) என்றும் கெனசரேத்து ஏரி (Lake of Gennesaret) என்றும் அழைக்கப்படுகின்ற பெரும் நீர்த்தேக்கம் இஸ்ரவேல் நாட்டில் உள்ளது. இந்தக் கடலிலும் பயணிக்கும் அனுபவம் எமக்குக் கிடைத்தது. மனித இதயம் போன்ற வடிவம் கொண்ட இந்த ஏரிப் பகுதியில்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இறைப்பணி பெரும்பாலும் நிகழ்ந்தது. (கலிலேயப் பிராந்தியத்தின் ஒரு குக்கிராமந்தான் பெத்லகேம்) பைபிள் வரலாற்றில் இந்த ஏரி சிறப்பான பங்கு வகிக்கிறது. கெனசரேத்து ஏரி இஸ்ரவேல் நாட்டில் நல்ல தண்ணீர் கொண்ட ஏரிகளுள் மிகப் பெரியதாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு பணிசெய்த காலத்திலேயே கலிலேயக் கடல் மிகவும் பேர்போன இடமாக இருந்தது. "கடலோர நெடுஞ்சாலை" (Via Maris) என்னும் பெயர்கொண்ட வணிகப் பாதை அவ்வழியே சென்று, எகிப்து நாட்டையும் வடக்கு அரசுகளையும் இணைத்தது. அந்த ஏரிக்கரையில் உரோமர் பல நகர்களை நிறுவினர். கதாரா (Gadara), ஹிப்போஸ் (Hippos), திபேரியாஸ் (Tiberias) என்னும் அந்நகரங்களில் வாணிகம் செழித்தது.




இந்தப் பிரபல்யமான கடலில் ஒரு பெரிய கப்பலில் நாம் ஒரு குழுவாகப் பயணஞ் செய்தது மறக்க முடியாத ஒரு அனுபவமாக அமைந்தது.. யேசுவின் வாழ்க்கையில், பல வழிகளில் பின்னிப் பிணைந்த இந்தக் கடல் படகுப் பயணம் ஆனந்த வயப்பட்டு, இசை, பாடல்களுடன் கழிந்தது. இயேசு பலமுறை இக்கடலுக்கு வந்துள்ளார். இந்த ஏரிக்கரையில் மீனவர் குடியிருப்புகள் பல இருந்தன. அங்கு வாணிகம் சிறப்பாக நடைபெற்றது. கலிலேயக் கடலருகில் அமைந்த ஒரு மலையில்தான் இயேசு ஒரு நீண்ட சொற்பொழிவு ஆற்றியதாக மத்தேயு நற்செய்தியாளர் குறித்துள்ளார். இது மலைப் பிரசங்கம் என்ற பெயரால் அறியப்படுகின்றது. இயேசு தம் அதிசய வல்லமையைப் பயன்படுத்தி இருமுறை பெருமளவில் மீன்கள் வலைகளில் பிடிபடச்செய்தார் என்று பைபிள் கூறுகின்றது. முதல் புதுமையை லூக்காவும் இரண்டாம் புதுமையை யோவானும் குறித்துள்ளனர். இயேசு கலிலேயக் கடல்மீது நடந்தார் என்னும் செய்தியை நற்செய்தியாளர் பதிவு செய்துள்ளனர் கலிலேயக் கடலில் ஏற்பட்ட புயலை இயேசு அடக்கிய நிகழ்ச்சியையும் நற்செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் புயலை அடக்கிய புதுமைச் சம்பவத்தை பகிரும்போது, சில வார்த்தைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். நமக்கெல்லாம் தெரிந்த ஓர் ஆங்கிலப் பழமொழி: **A joy shared is doubled> a sorrow shared is halved.** அதாவது, இன்பத்தைப் பகிர்ந்தரல், இரட்டிப்பாகும் துன்பத்தைப் பகிர்ந்தால் பாதியாகக் குறையும். பாரங்கள் பாதியான, அல்லது பாரங்களே இல்லாத மனதைப் படுக்கைக்குச் சுமந்து சென்றால், சீக்கிரம் தூக்கம் வரும். புயல் வீசியது, இயேசு தூங்கிக்கொண்டிருந்தார். புயலையும் மீறி, சீடர்கள் எழுப்பிய கூப்பாடு, இயேசுவை விழித்தெழ செய்தது. இயேசு எழுந்தார், புயலை அடக்கினார். அதன் பிறகு, தன் சீடர்களைப் பார்த்து, "ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?" என்று கேட்டார். இயேசு, தன் சீடர்களிடம் கேட்ட இக்கேள்வி, புயலையும், நம்பிக்கையையும் சேர்த்துப் பார்க்க ஒரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறது. புயல் வீசும் நேரத்தில் நம் நம்பிக்கை எங்கே போகிறது? ஆழ் மனதில் அதுவும் தூங்கிக் கொண்டிருக்கிறதா? அல்லது, எழுந்து நின்று சத்தம் போட்டு இறைவனை அழைக்கிறதா? அல்லது புயல் வரும்போதெல்லாம் நம்பிக்கை நமக்கு 'பைபை' காட்டிவிட்டு, நடுக்கடலில் நம்மைத் தத்தளிக்க விட்டுவிடுகிறதா? சற்று சிந்தித்துப் பாருங்களேன்.

**தூய பேதுரு மீன்**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஏரியில் மீன்பிடிக்கும் தொழில் செழித்தோங்கி வந்துள்ளது. 230 படகுகள் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்ததாக முதல் நூற்றாண்டு வரலாற்றாசிரியர் ஃபிளாவியுஸ் ஜொசிஃபஸ் என்பவர் கூறுகிறார். இந்த ஏரியில் காணப்படும் திலாப்பியா மீனுக்கு தூய பேதுரு மீன் (St. Peter's Fish) என்னும் சிறப்புப் பெயர் உண்டு. திபேரியாஸ் உணவகத்தில் பரிமாறப்படும் திலேப்பியா (புனித பேதுரு மீன்). கலிலேயக் கடலருகில் பாலைநிலத்தில் இயேசு ஐயாயிரம் பேருக்கு அதிசயமான விதத்தில் உணவளித்தார் என்னும் செய்தியும் நற்செய்தியில் காணப்படுகிறது . இந்த மீனையே உணவகத்தில் மதிய உணவாக எடுத்துக் கொண்டோம் என்று இதற்கு முன்னைய அத்தியாயங்களில் நான் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். பழைய ஏற்பாட்டின் பல பகுதிகளிலும் இப்பெயர் கினரேத்துக் கடல் (Kinnereth/Chinnereth) என்றுள்ளது (கின்னர் என்னும் எபிரேயச் சொல்லுக்கு யாழ்என்று பொருள். இந்த ஏரி யாழ் வடிவில் உள்ளதால் அப்பெயர் பெற்றிருக்கலாம்.)

கலிலேயக் கடல் வடக்கு இஸ்ரவேலில் அமைந்துள்ளது. ஆபிரிக்க மற்றும் அராபிய நிலத்தட்டுகள் பிரிவதால் ஏற்பட்டுள்ள யோர்தான் பிளவுப் பள்ளத்தாக்கில் இந்த ஏரி உள்ளது. எனவே, அதில் நில நடுக்கம் ஏற்படுவது உண்டு முற்காலத்தில் எரிமலைலக் கொந்தளிப்பும் அங்கு நிகழ்ந்ததுண்டு.




**பயணிப்போம்**

துன்னாலைச் செல்வம்



# சாட்சியங்கள் வெளிப்படுத்தும் ஓட்டைகள்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன்னால் பலர் சாட்சியமளித்துக் கொண்டு வருகின்றனர். அரச திணைக்களங்களில் முக்கிய பதவிகளில் வகித்த பலரிடம் சாட்சியங்களை பெறப்பட்டு வருகின்றது.அவஉகள் பதவிகளை வகுத்த போது தமது கதிரைகளைக் காப்பாற்றுவதற்காக வாய் பேசாதிருந்தவஉகள் இன்னு பதவியிலிருந்து நீக்கப்பட்டபோது அல்லது விலக நிர்பந்திக்கப்பட்டதையடுத்து வாய் திறந்திருக்கின்றனர். இவர்கள் பதவி நிலையில் இருந்த போது எந்த நடவடிக்கைகளையும் ஜனாதிபதியின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாத சூழலில் இவர்கள் தாக்குதல் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்காதது தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்.தற்போது விசாரணைக் கமிஷனின் முன்பாகச் சாட்சியமளிக்க நேரிட்ட நிலையில் உண்மையைச் சொல்ல முற்பட்டிருக்கிறார்கள்.

சாட்சி 1



***முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர***

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணையை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் என்னைக் கலந்து கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார.

கடைசியாக 2018 ஒக்ரோபர் 23 ஆம் திகதி நடந்த தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலேயே நான் கலந்து கொண்டிருந்தேன். அதற்குப் பின்னர், எந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலும் நான் பங்கேற்கவில்லை.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்று ஜனாதிபதி எனக்கு அறிவுறுத்தியிருந்தார். பாதுகாப்புச் செயலர் ஊடாகவே அவர் இந்த தகவலை எனக்கு அவர் அறிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளிற்கு எனது தவறுகளே காரணம் என நான் ஒப்புக் கொண்டால் எனக்கு வெளிநாட்டு தூதுவர் பதவியை வழங்குவதற்கான யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன் வைத்தார்.

குண்டுவெடிப்புகளிற்கு எனது தவறே காரணம் என்பதை ஏற்றுக்கொண்டால் விசாரணை குழு பின்னர் என்மீது எந்த தவறுகளும் இல்லை என தெரிவிக்கும் எனவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

எனது தொழில் வாழ்க்கையில் நான் அவ்வாறான பதவியை விரும்பியதும் இல்லை, நான் தவறான விதத்தில் நடந்துகொண்டேன் என என்மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதும் இல்லை.

பொலிஸ் மா அதிபர் புலனாய்வுத் தகவல்களை ஜனாதிபதியிடம் பரிமாறும் ஒரு ஏற்பாடு இருக்கவில்லை. தேசிய புலனாய்வுத்துறை பணிப்பாளர் நேரடியாக அந்த தகவல்களை ஜனாதிபதியிடம் வழங்கிவந்தார்.

பாதுகாப்பு செயலாளர் புலனாய்வுத் தகவல்கள் எதனையும் ஜனாதிபதியிடம் கூறினால், அதை புலனாய்வுத்துறை பணிப்பாளர் நிலந்த, ஏற்கனவே தம்மிடம் கூறிவிட்டார் என்று ஜனாதிபதி குறிப்பிடுவார் என்று பாதுகாப்பு செயலாளர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்.

சஹ்ரானின் சகாக்களால் செய்யப்பட்டதாக சொல்லப்படும் காத்தான்குடி மோட்டார் சைக்கிள் குண்டுவெடிப்பு தொடர்பாக ஏப்ரல் 18 ஆம் திகதி எனக்கு புலனாய்வுத் துறை கடிதம் மூலம் அறிவித்தது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்து எனக்கு குறிப்பாக எந்த தகவலும் சொல்லப்படவில்லை. பொதுவான அச்சுறுத்தல் இருப்பதாகவே சொல்லப்பட்டது. உடனடி தாக்குதல் குறித்து என்னிடம் எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் தாக்குதலை தடுக்க தவறிவிட்டேன் என நான் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளேன்.

ஏப்ரல் 2018 ற்கு பின்னர் சஹ்ரான் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. 2018 ஜூனில் நீதிமன்ற பிடியாணை பெறப்பட்டது. இன்ரபோல் பொலிஸ் உதவி பெறப்பட்டது.

ஏப்ரல் 20ஆம் திகதி காலை 6.30 மணி தொடக்கம் 8 மணிக்குள் எனக்கு தேசிய புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்தவிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "நாளை மிகவும் ஆபத்தானது. எதுவும் நடக்கலாம் " என்று புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்தவால் என்னிடம் சொல்லப்பட்டது.

அதேபோல் ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 6.45 மணி தொடக்கம் 7.15 மணிக்குள் அவரிடம் இருந்து அழைப்பு வந்தது. ஆனால் இப்படியான தகவல்களை ஜனாதிபதிக்கு சொல்லும் நடைமுறை இருக்காதபடியால் என்னால் அப்படி கூற முடியாமல் போனது.

சனிக்கிழமை இரவு எனக்கு தகவல் கிடைத்த பின்னர் உடனடியாக எல்லா பிரதி பொலிஸ் மா அதிபர்மார்களுக்கும் அறிவித்தேன். அவசரகாலம் பிறப்பிக்கப்பட வில்லை. ஊரடங்கு சட்டம் பிறப்பிக்க எனக்கு அதிகாரமில்லை. அவசரகால சட்டத்தை பிறப்பிக்க என்னால் தனியாக முடியாது.

எந்த விசாரணைக்குழுவிடம் சென்றாலும் நான் குற்றவாளியாவேன் என்றும் ஓய்வூதியம் இன்றி வீடு செல்லப்போகிறீர்களா? அல்லது தவறை ஏற்றுக்கொண்டு பதவி விலகுகிறீர்களா? என ஜனாதிபதி என்னிடம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி இதனை மிகவும் தயவுடன் கூறினார். சுமார் நான்கு முறை இது பற்றி வினவினார்.

இதன்போது என்னிடம் இருந்த ஆவணங்களை ஜனாதிபதிக்கு காண்பித்தேன்.



அவற்றை ஜனாதிபதி மிகவும் உன்னிப்பாக பார்த்தார். எனது 35 ஆண்டுகால பொலிஸ் சேவையில் எனது பெயரை கெடுத்துக் கொண்டதில்லை.


நான் திருடன் இல்லை .
கொள்ளைக்காரன் இல்லை. நான் பொலிஸ் துறையை
பயன்படுத்தி பணம் சம்பாதிக்கவில்லை.

ஜனாதிபதியுடன் 8.45 வரை உரையாடினேன். எனது பெற்றோருக்கு சொத்துக்கள் இருந்த போதிலும் எனக்கு என்று ஒரு இடம் கூட இல்லை என ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்.

எவ்வாறாயினும் ஏப்ரல் 25 ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதி அழைப்பொன்றை விடுத்து பதவி விலகல் கடிதத்தை வழங்காதது தொடர்பில் கோபமாக விசாரித்து என்னை 29 ஆம் திகதி முதல் கட்டாய விடுமுறையில் அனுப்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்தியரத்ன என்னிடம் தெரிவித்தாஉ.

சாட்சி 2



***பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ***

அரச புலனாய்வுப் பிரிவு எனக்குக் கீழ் இருந்த போதிலும், அதன் அனைத்துச் செயற்பாடுகளையும், ஜனாதிபதியே மேற்கொண்டார், செயலற்ற அதிகாரியாகவே செயற்பட்டு வந்தேன்.

தான் வெளிநாட்டில் இருந்ததால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் தடுக்க முடியாமைக்கான பொறுப்பை ஏற்க மறுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இதற்கான பொறுப்பை ஏற்றுப் பதவி விலகுமாறும் பதிலாக, தூதுவர் பதவியொன்றைப் பெற்றுத்தருவதாகவும், கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள. பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு தெரிவித்தார்.

தாக்குதல்கள் தொடர்பிலான தகவல்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக, ஜனாதிபதியிடம் நேரம் ஒதுக்கித் தருமாறு பலமுறை கோரியிருந்த போதிலும், அவர் அதற்கு ஒரு நாள் கூட நேரம் ஒதுக்கவில்லை.

பிரதமர், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோர் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு 2018 நவம்பர் 13 ஆம் திகதி முதல் அழைக்கப்படவில்லை. அவர்களை அழைக்க வேண்டாமென ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார்.

இரண்டு தடவைகள் நான் புலனாய்வு தகவல்களை ஜனாதிபதிக்கு விளக்கிக் கூற முயன்றேன். ஆனால் அரச புலனாய்வுப் பணிப்பாளர் தம்மிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டதாக ஜனாதிபதி என்னிடம் சொன்னார். நான் பதவியில் இருந்த ஐந்து மாத காலத்தில் புலனாய்வுத் தகவல்களை ஜனாதிபதிக்கு விபரிக்கும் நடைமுறை இருந்ததில்லை.

அரச புலனாய்வுத் துறை பணிப்பாளருக்கும் ஜனாதிபதிக்கும் நேரடித் தொடர்பு இருந்தது. நான்கு வருட காலம் ஜனாதிபதிக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கி வருவதாக புலனாய்வுப் பணிப்பாளர் ஒரு தடவை என்னிடம் கூறியிருந்தார்.

பாதுகாப்பு செயலாளரான நான் எனது அமைச்சரை சந்திக்க கூட முடியாத நிலையில் இருந்தேன். அவருக்கு அதற்கான நேரம் இருக்கவில்லை. ஒரு கையொப்பம் பெறவே மூன்று மணி நேரம் காத்திருக்க வேண்டியேற்பட்டது.

ஏப்ரல் 9 ஆம் திகதியில் இருந்தே அச்சுறுத்தல் இருந்ததால் வழமைபோல அந்த தகவலையும் புலனாய்வுப் பிரிவு ஜனாதிபதிக்கு கூறியிருக்குமென நான் யூகித்தேன். தாக்குதலுக்கு பின்னர் பிரதமர் என்னை சந்திக்க அழைத்தாலும் அவரை சந்திக்க செல்ல ஜனாதிபதி என்னை அனுமதிக்கவில்லை.

"பூஜித் ஜயசுந்தரை ஏன் விலகச் சொல்கிறீர்கள், அப்படியானால், இதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய அனைவரும் விலக வேண்டுமல்லவா, அதனால் நானும் பதவி விலகுகிறேன்" என்று ஜனாதிபதியிடம் கூறி, இராஜினாமா கடிதத்தைக் கையளித்த போது, அவர் அதைப் புன்முறுவலுடன் பெற்றுக்கொண்டார்.

தாக்குதலுக்கு முன்னைய நாள் ஏப்ரல் 20 ம் திகதி எனக்கு வட்சம் தகவல் கிடைத்துள்ளது. தாக்குதலுக்கு முன்னைய நாள் இரவு 7.30 அல்லது அண்மித்த நேரத்தில் புலனாய்வுத் தலைவர் என்னை தொலைபேசியில் அழைத்து, வட்சப்பில் தகவல் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக கூறினார், அது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமானது என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேசிய பாதுகாப்பு சபையை உரிய காலத்தில், உரிய வகையில் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளார்.

2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் திகதி நியமிக்கப்பட்டடேன், நான் பதவி விலகும் வரை நான்கு தடவைகள் மாத்திரமே தேசிய பாதுகாப்பு சபையை ஜனாதிபதி கூட்டியுள்ளார்.

இவ்வாறு கூட்டப்படும் தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டங்களுக்கு பிரதமர், பாதுகாப்பு

ராஜாங்க அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டாம் என எனக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

பாதுகாப்பு செயலாளர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எனக்கு எந்தவித சுயாதீன அதிகாரங்களையும் வழங்க வில்லை. ஜனாதிபதியை சந்திப்பதற்கு கூட குறைந்தது இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதேவேளை, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு தொடர்பில் அரச புலனாய்வு பிரிவி னால் சில சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த அமைப்பு குறித்து பாதுகாப்பு சபையில் ஆராயப்படுவதை விடுத்து, பிரபல போதைப்பொருள் வர்த்தகரான மாகந்துர மதுஷ் குறித்தே தனது பதவி காலத்தில் நடந்த நான்கு கூட்டங்களின் போதும் ஆராயப்பட்டு வந்தது.

அதேநேரம் தாக்குதல் நடந்த அன்று காலை 7.30-8 மணியளவில் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி தன்னை தொலைபேசியில் அழைத்து, கொழும்பு நகரத்தில் மெதடிஸ்த தேவாலயங்கள் எத்தனை இருக்கின்றன என்று வினவியிருந்தார்.

அது ஏன் என்று தான் அவரிடம் வினவிய போது கத்தோலிக தேவாலயங்களுக்கு அல்ல மெதடிஸ்த தேவாலயங்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட இருப்பதாக புலனாய்வுப் பிரிவின் பிரதானி கூறியுள்ளார்.

பின்னர் கொழும்பு நகரத்தில் உள்ள மெதடிஸ்த தேவாலயங்கள் தொடர்பில் அவருக்கு தகவல் வழங்கியுள்ளேன் என்று சாட்சியமளித்தார்.

**சாட்சி 3**



**தேசிய புலனாய்வுப் பணியகத்தின் தலைவர் சிசிர மெண்டிஸ்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பி ருந்தே, தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடத்தப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல், 2019 ஏப்ரல் 8ஆம் திகதி அரச புலனாய்வு சேவை தலைவர் நிலந்த ஜெயவர்த்தனவினால் எனக்கு வழங்கப்பட்டது.

முற்பகல் 11 மணிக்கு அந்தக் கடிதத்தை திறந்து பார்த்தேன். அந்த தகவலை அரச புலனாய்வு சேவை எங்கிருந்து பெற்றது என்று எனக்குத் தெரியாது. நிலந்த ஜெயவர்த்தனவின் கடிதத்தில் அதுபற்றிக் கூறப்பட்டிருக்கவில்லை.



அதனைப் பார்த்த பின்னர், பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோவுடன் கலந்துரையாட முனைந்தேன்.

ஆனால் இந்திய பாதுகாப்பு செயலாளர் கொழும்பு வந்திருந்ததால் அவர் வேலைகளில் மூழ்கியிருந்தார். அவர் களுக்கிடையில் முன்னரே கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பிற்பகல் 3 மணியளவில், பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்துப் பேச எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று நான் பெற்றுக் கொண்ட அந்த தகவலை வாய்மொழியாக அவரிடம் கூறினேன். நான் அந்த தகவலை வழங்கும் வரை அவர் அதுபற்றி அறிந்திருக்கவில்லை என்று எனக்குத் தோன்றியது.



இந்த விடயம் தொடர்பாக, ஏப்ரல் 9ஆம் திகதி வாராந்த புலனாய்வு ஒருங்கிணைப்பு கூட்டத்தில், கலந் துரையாட முடியும் என்று பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. எனினும், அந்தக் கூட்டத் தில், தீவிரவாத தாக்குதல் குறித்த தகவலுக்கு முன்னுரிமை கொடுக்கப் படவில்லை.

அரச புலனாய்வுச் சேவையின் தலைவரால் அனுப்பப்பட்ட கடிதம் எனது மேசையில் இருந்தது. நான், பொலிஸ் மா அதிபருக்கும், அரச புலனாய்வுச் சேவை தலைவருக்கும் இடையில் அமர்ந்திருந்தேன். அந்தக் கூட்டம் முடியும் கட்டத்தில், தீவிரவாத தாக்குதல் பற்றிய தகவல் குறித்து விவாதிக்க வேண்டும் என்று அவர்களிடம் நான் கூறினேன்.

அன்று (ஏப்ரல் 9ஆம் திகதி) தீவிரவாத தாக்குதல் திட்டம் பற்றிய புலனாய்வு தகவல் குறித்து பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பி னேன். அதில், இந்த தகவலுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதையும் கடிதத்தின் மேல் பகுதியில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் பொலிஸ் மா அதிபர் அதற்கு பதில் அளிக்கவில்லை. ஏப்ரல் 21ஆம் திகதி வரை, பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த எவருமே என்னுடன், அந்த தகவலுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடப்பதற்கு முன்னதாக, 2019 பெப்ரவரி 19ஆம் திகதி தான், தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் கடைசியாக இடம்பெற்றிருந்தது.

2019 பெப்ரவரி 19ஆம் திகதிக்கும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற மறுநாளான, ஏப்ரல் 22ஆம் நாளுக்கும் இடையில் தேசிய பாதுகாப்புச்சபையின் கூட்டங்கள் நடக்கவில்லை.

பெப்ரவரி 19ஆம் திகதிக்கு முன்னதாக, 2019 ஜனவரி 14ஆம் திகதி தேசிய பாதுகாப்புச் சபை கூட்டம் இடம்பெற்றிருந்தது.

2018ஆம் ஆண்டில், தேசிய பாதுகாப்புச் சபை ஜனவரி, 5, பெப்ரவரி 19, மார்ச் 05, மே 02, ஜூலை 10, ஒக்ரோபர் 23, நவம்பர் 13, டிசெம்பர் 3 ஆகிய திகதிகளில் தான் கூடியது.

இந்தக் கூட்டங்களின் போது, சிலமுறை அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் நிலந்த ஜெயவர்த்தன, சஹ்ரான் காசிம் மற்றும் அவரது கூட்டாளிகளின் வெறுப்புப் பேச்சுகள் மற்றும் அடிப்படைவாதம் தொடர்பாக பேசியிருக்கிறார்.

ஐ.எஸ் அமைப்பின் அச்சுறுத்தல்கள் தொடர்பாக, தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத் தில் பலமுறை கலந்துரையாடப்பட்டது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் காசிம் தொடர்பாகவும், விவாதிக்கப்பட்டது. 2015 ஒக்ரோபர் 6ஆம் திகதி முதல்முறையாக சஹ்ரான் தொடர்பாக, பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டிருந்தது.

2018 நவம்பருக்குப் பின்னர் தேசிய பாது காப்புச் சபைக் கூட்டங்களில் பொலிஸ் மா அதிபர் பங்கேற்கவில்லை.

வழக்கமாக தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு, கூட்டம் தொடர்பான நாள் மற்றும் நேரம் பற்றிய தகவல் பாதுகாப்புச் செயலர் மூலமே அனுப்பப்படும்.

நவம்பர் 2018இற்குப் பின்னர், தேசிய பாதுகாப்புச் சபைக்கான கூட்டம் என்று தகவல் அளிக்கப்படுவதில்லை. இருந்தாலும், சிறப்புக் கூட்டம் என்றே தகவல் அனுப்பப்பட்டது.

2019 ஜனவரியில் பெருமளவு வெடிபொருள் கள் வன்னாத்தவில் பிரதேசத்தில் கைப்பற்றப் பட்ட போது, தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்தில் அதுபற்றி விவாதிக்கப்பட்டது.

அப்போது அதுபற்றி குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரித்துக் கொண்டிருந்தது. அந்த



விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் வலியுறுத் தப்பட்டது என்றும் அவர் சாட்சியம் அளித்தார்.

**சாட்சி 4**

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட**

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களை விடுவிப்பதற்கு யார் அழுத்தம் கொடுத்தாலும் விடுவிக்க மாட்டோம். பயங் கரவாதத்தை பூண்டோடு ஒழிக்கும் நீண்ட காலத் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெ டுத்திருக்கிறது.

நாட்டின் மீது திடீர் பயங்கரவாதத் தாக்கு தல் நடத்தும் ஆபத்து 99 சதவீதத்தால் முடிவிற்கு வந்திருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட உளவுத் தகவல்கள் 2014ஆம் ஆண்டு முதல் பதிவாகியிருக்கின்றன.

எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துதல், வெளி நாடுகளுடனான புலனாய்வு தகவல்களை மேம்படுத்துதல், தொழில்நுட்ப வசதிகளை அதிகரித்தல், கைதானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் உட்பட பல திட்டங்கள் முன்னெடுக் கப்பட வேண்டும்.

இதில் சில திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. அண்மையில் மினுவாங்கொட பிரதே சத்தில் இடம்பெற்ற வன்முறை செயற்பாடுகளு டன் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வந்தவர்களும் சம்பந்தப்பட்டுள் ளமை பற்றிய தகவல் கிடைத்திருக்கின்றன.

குறிப்பிட்ட அடிப்படைவாத குழு தொடர் பான தகவல்களை வழங்கும் போது உளவுப் பிரிவுகளிடமிருந்து எதுவித தாமதமும் ஏற்பட வில்லை. உளவுப் பிரிவின் சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டமைக்காக ஒட்டுமொத்த உளவுப் பிரிவும் சீர்குலைவதற்கு எதுவித வாய்ப்பும் இல்லை.

பாதுகாப்புக் குழு ஒவ்வொரு புதன்கிழமையும் கூட வேண்டும். அவசரகாலச் சட்டம் நடைமுறைப் படுத்துவது நல்ல விடயமாகும்.

வெளிநாட்டவர்களிடமிருந்து இலங்கையர் களுக்குக் கிடைக்கும் பணம் மற்றும் அவை பயன்படுத்தப் பட்டுள்ள விதம் குறித்து கட்டாயம் கண்டறியப்பட வேண்டும். என்று சாட்சியம் அளித்தார். சாட்சியங்கள் வழங்கியவர்கள் தமது பதவி நிலையில் நடவடிக்கையை எடுக்கக் கூடியதாக இருந்தும் நடவடிக்கை களை எடுக்க முடியாமல் இருந்ததை காண முடிந்தது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கர வாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்த பாராளுமன்ற தெரிவுக் குழுவின் விசாரணை நாட்டின் தேசிய பாது காப்புக்கு எந்தவிதத்திலும் அச்சுறுத்தலாக அமை யாது என முன்னாள் இராணுவத் தளபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் களுக்கு முன்னதாக புலனாய்வு எச்சரிக்கை கள் குறித்து, ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப் பட்டதாக வெளியாகியுள்ள செய்திகளை ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தீவிரவாத தாக்குதல்கள் தொடர்பாக, ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முன்கூட் டியே எந்த அதிகாரியும் தகவல்களை வழங் கியிருக்கவில்லை. பொலிஸ் மா அதிபர் மற்றும் மூத்த பொலிஸ் அதிகாரிகள் பங்கேற்றிருந்த- ஏப்ரல் 8ஆம் திகதி நடந்த மாதாந்த பாதுகாப்புக் கூட்டத்தில் கூட, அதுபற்றி கூறப்படவில்லை. தேசிய பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப் பட்ட விடயங்கள், அதிகாரபூர்வமற்ற முறை யில் ஊடகங்களில் செய்திகளாக வெளிவந்த நிலையில், தேசிய பாதுகாப்புக் குழு உருவாக் கப்பட்டது.

இந்த தேசிய பாதுகாப்புக் குழு வாரத்தில் இரண்டு தடவைகள் கூட்டப்பட்டது. ஜனாதிபதியும் வாரம் ஒருமுறை இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

நட்பு நாடு ஒன்றினால் வழங்கப்பட்ட புல னாய்வு எச்சரிக்கை தொடர்பாக, பாதுகாப்புச் செயலாளரோ, பொலிஸ் மா அதிபரோ, அல்லது வேறு எந்த அதிகாரியோ, ஜனாதிபதிக்குத் தெரிவித்திருக்கவில்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே தெரிந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறிக்கு உள்ளாகியுள்ளது என்பது சாட்சியங்களில் இருந்து தெரிகிறது. இனிவரும் காலங்களில் பாதுகாப்பு குறித்து சாட்சியங்களில் தெரிவித்திருக்கும் குறைபாடு களை நீக்குவார்கள் ஆயின் எதிர்காலத்தில் பாதுகாப்பான நாடாக திகழ முடியும் என்பதற்கு மறுகருத்தில்லை. இந்த சாட்சியங்களுக்கு தீர்வு எட்டப்பட வேண்டும் இல்லாது போயின் பயங்கரவாத தாக்குதலை முறியடிப்பது என்பது கேள்விக் குறியாக அமையும் என்பது உண்மை. ■

சிறுகதை

சுஜாதா



# ஒரு இலட்சம் புத்தகங்கள்

கடந்த வார தொடர்ச்சி

"நீங்க என்ன எழுதறதா சொன்னீங்க?"

"அந்தப் புத்தகங்களை எரிச்சதைப்பற்றித்தாங்க! ஒரு லட்சம் புத்தகங்க! அத்தனை வார்த்தைகளும் எரிஞ்சுபோய், ராத்திரி பூரா வெளிச்சமா இருந்ததை! ஒருத்தர் மட்டும் சொன்னாரு எழுதுங்கனு' ஆனா, அப்படியே உங்க தங்கச்சி றேப்பையும் எழுதுங்க... அவங்க கலர் ட்ரான்ஸ்பரன்ஸி இருந்தா கொடுங்க, அட்டையில போடுவோம்... கொஞ்சம் ஹ்யூமன் இன்ட்ரஸ்ட் இருக்கும்னாருங்க! அவர் பேர் சொல்ல விரும்பலை. எனக்கு என் சொந்த சோகத்தை எழுத விருப்பம் இல்லை. அவளை என் கண் எதிரிலேயே துகிலுரிச்சாங்க! முதல்ல பக்கத்து வீட்ல சிங்களக் குடும்பத்தில்தாங்க அடைக்கலம் கொடுத்தாங்க. நாள் பூரா கக்கூஸ்ல ஒளிஞ்சிக்கிட்டு இருந்தது! அவங்க உயிருக்கே ஆபத்து வந்திரும்போல நிலையில பின்பக்கமா ஓடிப்போயிருச்சுங்க. சந்துலவெச்சுப் பிடிச்சுத் தெருவுல... நடுத் தெருவுல... என் கண் முன்னாலயே! கண் முன்னாலயே..." அவன் இப்போது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதான்.

"ரொம்பப் பரிதாபங்க."

கொஞ்ச நேரம் அழுதுவிட்டு "எனக்கு இதைச் சொல்லி அனுதாபம் தேடிக்க விருப்பம் இல்லைங்க. இந்த மாதிரி வன்முறைங்க உங்க ஊர்லயும் நிறைய நடக்குது. இங்கயும் றேப்புக்குப் பஞ்சம் இல்லை. ஆனா, அந்தப் புத்தகங்களை எரிச்சது, அது என்னவோ ஒரு சரித்திர சம்பவமாத்தான் எனக்குத் தெரியுது. அந்த நெருப்புல இருந்த வெறுப்பு நிச்சயம் சர்வதேசக் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியதுங்க..." சட்டையில் முழங்கைப் பகுதியில் தன் முகத்தைச் சரியாகத் துடைத்துக்கொண்டு, "எனக்கு ஒரு நாட்டு 'குடிமகன்'கிறது யாருங்கறதைப் பற்றி ஆதாரமா சந்தேகங்கள் வருதுங்க. சிங்களவர்கள் தமிழர்கள் இரண்டு பேரும் இந்தியாவுல இருந்து வந்தவங்க. அவங்க வங்காளம் ஒரிஸ்ஸாவில் இருந்து வந்த ஆரியர்களாம். நாங்க ஒண்ட வந்த கள்ளத் தோணிங்களாம். சக்கிலியங்களாம்! இதைஎல்லாம் சொல்ல வேண்டாம்? ஆறு லட்சம் பேர் எங்க போவோங்க? என்ன செய்வோங்க? இதெல்லாம் சொல்ல வேண்டாமா?"

டாக்டர் மூக்கைச் சொறிந்துகொண்டார்: "இவ்வளவு விவரமாச் சொல்ல வேண்டாங்க. ஏன்னா, இது இலக்கியக் கூட்டம். இதில் அரசியலை நுழைக்கிறது நல்லால்லை. ஒண்ணு செய்யுங்க..."

"அரசியல் இல்லைங்க. மனித உரிமைப் பிரச்சினை இல்லையா?

'சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடீ-கிளியே!
செம்மை மறந்தாரடீ!'னு

பாரதி பாடலையா? இலங்கைத் தமிழர்களைச் சகோதரர்கள்னுதானே நீங்க எல்லாரும் சொல்றீங்க?"

"அதுவும் ஒரு விதத்துல வாஸ்தவம்தான். இருந்தாலும்..."

"எனக்கு இதைவிட்டா வேற வாய்ப்புக் கிடையாதுங்க. ரத்தினாபுரத்துல நடந்ததைச் சொன்னா, கண்ல ரத்தம் வரும். அதெல்லாம் நான் சொல்லப்போறது இல்லை. ஒரு லட்சம் புத்தகங்களை எரிச்சாங்க. அதுக்குப் பதில் ஒரே ஒரு புத்தகத்தை மேடையில எரிக்கப்போறேன்!"

"என்ன புத்தகம்?" என்றார் கவலையோடு.

"இந்த மாநாட்டு மலரை!"

"எதுக்குங்க அதெல்லாம்..?"

"பாரதி சொன்ன எதையும் செய்யாம ஏர் கண்டிசன் ஹோட்டல்ல சாக்லேட் கேக் சாப்ட்டுக்கிட்டு மாநாடு போடறது எனக்கு என்னவோ பேத்தலாப் படுது. அதனோட சிகரம்தான் இந்த வெளியீடு. இதை மேடையில எரிச்சுட்டு, பாரதி சொன்னதை நடைமுறையில் செய்து காண்பிங்கனு சொல்லப்போறேன். 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'னு அவன் சொன்னது கான்க்ரீட் பாலம் இல்லை. முதல்ல மனப்பாலம் அமைங்க! அப்பதான் பளிச்சுனு எல்லார் மனசிலயும் பதியும். நேரமாயிடுச்சுங்க. ரெண்டு மணிக்குல்ல கூட்டம்?" அவன் எழுந்து வணங்கிவிட்டுச் சென்றான்.

'செல்வரத்தினம்...' டாக்டர் அவன் போன திக்கைத் திகைப்பில் பார்த்துக்கொண்டு இருந்தார். சற்று நேரம் யோசித்தார். நிகழ்ச்சி நிரலைப் பார்த்தார். இரண்டாவதாகப் பேசுவது 'செல்வரத்தினம், ஶ்ரீலங்கா' என்றிருந்தது. யோசித்தார். நாய்க்குட்டி போல் இருந்த டெலிபோனை எடுத்தார். மதுரைக்கு டிரங்க்கால் போட்டார். "பீப்பி கால். டாக்டர் மணிமேகலை..."

பத்து நிமிஷத்தில் கால் வந்தது.

"மணி! நாந்தான்."

"என்ன, விசாரிச்சீங்களா? கிடைச்சிருச்சா?"

"ஏறக்குறைய கிடைச்ச மாதிரிதான். செக்ரெட்டரியேட்லயே விசாரிச்சுட்டேன். அமைச்சர் கையெழுத்து ஒண்ணுதான் பாக்கியாம்."

"அப்ப இனிப்பு செய்துர வேண்டியதுதான். இந்தக் கணத்துல உங்க கூட இருக்க..."

"மணி! ஒரு சின்ன சிக்கல்..."

"என்னது... அருணாசலம் மறுபடி பாயறாரா?"

"அதில்லை மணி! இன்னிக்குக் கூட்டத்துல அமைச்சர் வராரு. எனக்கு முன்னால ஒரு சிலோன்காரன் பேசறதா இருக்கு. நாம யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மகாநாட்டுல சந்திச்சிருக்கோம். அவன் பேசறான்."

"பேசட்டுமே. உங்களுக்கு என்ன?"

"அதில்லை மணிமேகலை. அவன் சமீபத்திய கலகத்துல ரொம்ப இழந்து போய் ஒரு வெறுப்புல இருக்கான். ஏறக்குறைய தீவிரவாதியாக் கிறுக்குப் புடிச்ச பயலா இருக்கான்."

"என்ன செய்யப்போறான்?"

"யாழ்ப்பாணத்துல லட்சம் புத்தகங்களை எரிச்சாங்களாம். அதுக்குப் பதிலா மேடையில விழா மலரை எரிச்சுக் காட்டப்போறேங்கறான். கேக்கறதுக்கே விரசமா இருக்குது. எனக்கு என்னடான்னா, கூட்டத்துல கலாட்டா ஆகி, எங்கயாவது எனக்குச் சந்தர்ப்பம் வர்றதுக்குள் கலைஞ்சு போச்சுன்னா, அமைச்சர் வந்து..."

"த்ரீ மினிட்ஸ் ப்ளீஸ்!"

"எக்ஸ்டென்ஷன் பண்ணுங்க."

"என்ன, கேக்குதா?"

"கேக்குது... கேக்குது. இத பாருங்க. உங்க பேச்சை இன்னிக்கு அமைச்சர் கேக்க வேண்டியது ரொம்ப முக்கியம். நீங்க முன்னாடி பேசிடுங்களேன்."

"எப்படி? நிகழ்ச்சி நிரல்ல மாறுதல் செய்யணுமே! தலைமை தாங்கறதால, இறுதியுரைன்னா நானு?"

கொஞ்ச நேரம் மதுரை யோசித்தது.

"என்ன செய்யச் சொல்றீங்க?"

"எப்படியாவது உங்க அண்ணன்கிட்ட அவசரமா போன் பண்ணிச் சொல்லிடு..."

"அதைத்தான் நானும் யோசிச்சுக்கிட்டு இருந்தேன்... வெச்சுருங்க."

"எப்படியாவது..."

"வெச்சிருங்கன்னு சொன்னனில்லையா? அதிக நேரம் இல்லை. ஒரு டிமாண்ட் கால் போட்டுர்றேன்."

"சரி மணிமேகலை!"

"கவலைப்படாதீங்க. பேச்சு நல்லா பேசுங்க. கிடைச்சா மாதிரிதான்னு அண்ணனும் சொல்லியிருக்காரு. அமைச்சர் உங்க பேச்சைக் கேட்டுட்டாப் போதும்னாரு..."

டெலிபோனை வைத்துவிட்டு டாக்டர் சற்றுத் திருப்தியுடன் எழுந்தார். மணிமேகலை செய்து காட்டிவிடுவாள். இவ்வளவு செய்யக் கூடியவள் இது என்ன? இப்போதே அவள் விரல்கள் தொலைபேசியில் செயல்பட்டுக் கொண்டு இருக்கும். அவள் சக்தி!

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் மதியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி

இரண்டு மணிக்குக் கூட்டம் துவங்கியது. எதிரே ஹால் நிரம்பியிருந்தது. வெள்ளைக்கார முகங்கள் முதல் வரிசையில் பளிச்சென்று தெரிந்தன. பட்டுப்புடவை உடுத்திய நங்கை மைக்கைத் தொட்டுப் பார்த்துவிட்டு 'எண்ணிய முடிதல் வேண்டும், நல்லதே எண்ணல் வேண்டும்' என்று இனிமையாகப் பாடினாள். மேடையில் பேச இருப்பவர்கள் வரிசையில் ஓரத்தில் செல்வரத்தினம் உட்கார்ந்து இருந்தான். டாக்டரைப் பார்த்துப் புத்தகத்தை உயர்த்திக் காட்டினான். கவலையாக இருந்தது. என்ன! ஒன்றுமே செய்ய முடியவில்லையா? இரு இரு பார்க்கலாம்.

அமைச்சர் இன்னும் வரவில்லை. எல்லோரும் வாயிலையே பார்த்துக்கொண்டு இருக்க, வரவேற்புரைஞர், "தலைவர் அவர்களே! உலகெங்கிலும் இருந்து வந்திருக்கும் தங்கத் தமிழர்களே!" என்று துவங்க, சலசலப்பு தொடர, அமைச்சர் அங்கும் இங்கும் வணங்கிக்கொண்டு நடுவில் நடந்து வந்தார். டாக்டரைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டுத் தன் இருக்கையில் உட்கார்ந்துகொண்டு, உடனே தன் முழுக்கைச் சட்டையை உருவி கடிகாரம் பார்த்தார். டாக்டர் அருகில்தான் உட்கார்ந்திருந்தார்.

இப்போது கேட்கலாமா? இது சந்தர்ப்பமா? இல்லை... இல்லை. அவர் கேட்கும் வரை காத்திருப்போம்.

பின்னால் பார்த்தார். இன்னும் இருந்தான். கவலை சற்று அதிகமாகியது.

"முதற்கண் பிஜி தீவில் இருந்து வந்திருக்கும் ஜார்ஜ் மார்த்தாண்டம் அவர்கள் பேசுவார்" என்று அறிவித்துவிட்டு உட்கார்ந்தார்.

"ரெஸ்பெக்டட் அண்ட் ஹானரபிள் மினிஸ்டர் அண்ட் ஃ பெலோ டெலிகேட்ஸ்! ஐ'ம் எ தர்ட் ஜெனரேஷன் டமிலியன் அண்ட் ஐ'ம் ஸாரி ஐ'ம் நாட் ஏபிள் டு ஸ்பீக் இன் டமில். பட் தி கிரேட் ஸ/ப்ரமண்ய பாரதி..."

டாக்டர் தன்னை அறியாமல் பின்னால் பார்க்க... போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு காகிதத்தைப் பின் வரிசை ஓரத்தில் இருந்தவரிடம் காட்டி ஏதோ கேட்க, அவர் செல்வரத்தினத்தைக் காட்ட, இன்ஸ்பெக்டர் செல்வரத்தினத்தின் பின் நழுவி வந்து தாழ்ந்த குரலில் ஏதோ சொல்ல, செல்வரத்தினம் கலவரத்துடன் உடனே எழுந்து அவருடன் செல்வதைப் பார்த்தார்.

பெரிதாக மூச்சுவிட்டுக்கொண்டார். மணிமேகலை மணிமேகலைதான்! ஒரு மணி நேரத்தில் சாதித்துவிட்டாள். அவருக்குள் புன்னகை ஒன்று மலர்ந்தது.

"அடுத்துப் பேசவிருந்த ஶ்ரீலங்காவைச் சேர்ந்த திரு. செல்வரத்தினம் அவர்களை மேடையில் காணாததால், சோவியத் நாட்டைச் சேர்ந்த கத்தரீனா ஐவனோவாவை அழைக்கிறேன்..."

தினமணி நாளிதழில் மறுதினம் செய்தி வந்திருந்தது:

டாக்டர் நல்லுசாமி தன் தலைமை உரையின்போது, "'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று பாரதி சொன்னது கான்க்ரீட் பாலத்தை அல்ல் மனப் பாலத்தை..." என்றார். அமைச்சர் தன் உரையில் உள்ள புதிதாகத் துவக்கப்போகும் பாரதி பல்கலைக்கழகத்துக்கு டாக்டர் நல்லுசாமி துணைவேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற செய்தியை அறிவித்தார்.

செல்வரத்தினத்தின் விசா ரத்து செய்யப்பட்டு இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தாய்நாடு திரும்பிச் செல்லும்படி, கட்டளையிடப்பட்ட செய்தி நாளிதழ்கள் எதிலும் வரவில்லை!



# ஒற்றைத் தேச கொள்கைக்காக போராடிய கிரிஷ் கர்னாட் என்ற அற்புதமான பன்முகக் கலைஞர் - சில குறிப்புக்கள்

நாடக ஆசிரியர், நடிகர், இயக்குனர், இலக்கிய வாதி, தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் என பல முகங்கள் கொண்ட கிரிஷ் கர்னாட், தனது 81 ஆவது வயதில் கடந்த 10 ஆம் திகதி காலமானார். தமிழ் திரைப்படங்களில் வில்லன் கதாபாத்திரமாக வலம் வந்த இவர், வில்லன் நடிகர் என்ற வட்டத்திற்குள் சுருக்கிவிடக் கூடியவர் அல்ல, இந்திய சினிமா உலகில் ஒரு குறிப்பிடத் தகுந்த இடத்தைப் பெற்றவர்.

பத்ம ஸ்ரீ, பத்ம பூஷன் போன்ற உயர் விருது களையும், பிலிம் பேர் போன்ற திரைத்துறைகள் சார்ந்து பல விருதுக ளும் பெற்றவர். இதிகாச, வரலாற்று கதைகளை நவீன சிக்கல்களோடு தொடர்புபடுத்தி நிறைய நாடகங்களை எழுதியவர். இந்திய இலக்கிய உலகில் மிகப்பெரிய அங்கீகாரமாக கருதப்படும் ஞான பீட விருதினை பெற்ற எழுத்தாளர்.

மஹாராஷ்டிராவில் உள்ள மாதேரன் என்னும் மலைப் பிரதேசத்தில் பிறந்தவர். பள்ளிப்பருவம் வரை மராட்டிய மாநிலத்தில் படித்த கிரிஷ் பின்பு கர்நாடகாவிற்கு வந்தவர். கர்நாடக பல்கலைக்கழகத்தில் கணிதம் மற்றும் விபரவி புள்ளியலில் இளங்கலைப்பட்டமும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தத்துவப்படிப்பில் முதுகலைப்பட்டமும் பெற்றார்.

1963ஆம் ஆண்டில் ஒக்ஸ் போர்ட் யூனியனின் தலை வராக இருந்தார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பதிப்பகத்தில் எழுத்தாளராகவும் இருந்தார். கர்நாடகாவிற்கு வந்த பிறகு நாடக குழுக்களோடு இணைந்து செயற்பட ஆரம் பித்த இவர், கன்னட மொழியில் பல நாடகங்களை எழுதியுள்ளார். 1961இல் தனது 23வது வயதில் யயாதி என்னும் நாடகத்தினை எழுதி வெளியிட்டார். இவரது திப்பு சுல்தான் கதை இன்று வரை புகழ் பெற்றதாய் இருக்கிறது. இவரது எழுத்துக்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1970 இல், சம்ஸ்காரா என்னும் கன்னட சினிமா வில் தொடங்கியது இவரது திரைப்பயணம். அப்படத்தின் திரைக்கதை ஆசிரியராகவும் இருந்தார் கிரிஷ் கர்னாட். திரைப்படம் குடியரசுத்தலைவரின் தங்கத் தாமரை விருதினைப் பெற்றது. அதன் பிறகு பல தென்னிந்திய மொழி களிலும், இந்தி திரைப்படங்களிலும் நடித்துள்ளார். தமிழில், ரட்சகன், நான் அடிமை இல்லை, காதலன், மின்சாரக் கனவு மற்றும் சில படங்களில் நடித்துள்ளார்.

இந்தியில் 2012ல் வெளி யான ஏக்தா டைகர் திரைப் படத்தில் டாகடர் செனாய் என்னும் பெயரில் தலைமை உளவுத் துறை அதிகாரியாக நடித்து இருந்தார், அப்படத்தின் இரண்டாம் பாகமான டைகர் ஜிந்தா ஹை 2017ல் வெளியானது. அதிலும் டாக்டர் செனாய் ஆக நடித்துள்ளார் கிரிஷ் கர்னாட், இதுவே இவரது கடைசித் திரைப்படம் ஆனது.





கிரிஷ் கர்னாட், ஒற்றை தேசக் கொள்கைகளுக்கு எதிரானவர். இந்துத்துவா அமைப்புகளையும், செயல்பாடுகளையும் தொடர்ந்து விமர்சித்து வந்தவர். இந்தியா என்பது பல வேறு பண்பாடுகளையும், பல மொழி பேசும் மக்களையும் கொண்டது, அந்த பன்முக தன்மையினையும், மொழிகளையும் இழக்க முடியாது என்ற கருத்தினை வலியுறுத்தி வந்தார். எழுத்தாளர் கல்புர்கி கொலையினைத் தொடர்ந்து, கருத்துரி மைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். கௌரி லங்கேஷ் கொலை செய்யப்பட பொழுது, இவரும் வலதுசாரி அமைப்புகளால் குறிவைக்கப் பட்டிருந்தார் என்று கூறப்பட்டது.

வலது சாரி இந்துத்துவ அமைப்புகள், இந்துத்து வத்திற்கு எதிராகச் செயல்படுகின்ற எழுத்தாளர்களை குறிவைத்துள்ள தாகவும், அதில் முக்கியமாக இடம் பெற்றுள்ள நபர் கிரிஷ் கர்னாட் எனவும் செய்திகள் வெளியாகின. ஆனால், அச்சுறுத்தல்களுக்கு நான் பயப்பட மாட்டேன் என்று கூறும் விதமாக, கௌரி லங்கேஷின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டத்திற்கு "Me Too Urban Naxal" என்று பொறிக்கப்பட்ட அட்டையினை கழுத்தில் அணிந்து கலந்து கொண்டார்.

கிரிஷ் கர்னாட் வாழ்ந்த சிர்ஸியில் வசிக்கும், செயல்பாட்டாளர் பாண்டு ரங்கே ஹெக்டே , கிரிஷ் கர்னாட்டின் எழுத்துக்கள் குறித்து பிபிசி தமிழிடம் பகிர்ந்து கொண்டார். கிரிஷ் கர்னாட், எப்பொழுதும் தனது எழுத்துப் பயணத்தின் அடித்தளம் அமைந்த இடம் இதுதான் என்று சிர்ஸியினை பற்றி கூறுவார். இங்குள்ள வட்டார நாடக குழுக்களின் மூலமாகவே அவரது நாடக பயணங்கள் வலுவடைந்தது. அவரது எழுத்துக்கள் புதிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்து இருக்கும்.

வரலாற்று புதினங்கள், நாட்டார் வழக்குகளில் உள்ள கதாபாத்திரங்களை எடுத்து, நவீன சூழல்களில் பொருத்தி ஆழமான கருத்துக்களை எளிய வடிவில், மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வல்லவர். அவரது எழுத்துக்கள் மிக எளிமையானவை, எளிய மனிதர்கள் பயன்படுத்தும் மொழியினையே அதிகம் பயன்படுத்துவார். பிராந்திய மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதில் வலிமையான கருத்துடையவர் கிரிஷ் கர்னாட். அவர், மிக சிறப்பான ஆங்கிலப் புலமையுடையவர் எனினும், பெரும்பான்மை படைப்புகள் கன்னடத்தில் தான் இருக்கும். மராத்தி சமேதானத்திலும் தலைவராக இருந்துள்ளார்.

பண்பாட்டு பன்முகத்தன்மையும், பன்மொழித்தன் மையும் தான் இந்தியாவின் அடித்தளமாய் இருக்க வேண்டும் என்று கிரிஷ் கர்னாட் அடிக்கடி கூறுவார் என்கிறார் பாண்டு ரங்கே ஹெக்டே. கிரிஷ் கர்னாட்டின் மறைவிற்கு கர்னாடக அரசு ஒரு நாள் விடுமுறை யும், மூன்று நாள்கள் அரசுவிடுமுறைத் துக்கமும் அறிவித்துள்ளது. ■



# அந்த ஒரு நிமிடம்...

எஸ்.கணபதி





பஸ் யன்னலினூடாகத் தலையை நீட்டி அவள் அவனைப் பார்த்து ஒரு முறை சிரித்துக் கொண்டாள்.

பஸ் புறப்படத் தயாரானபோதுதான் அவளுக்கு அந்த ஞாபகம் வந்தது. "சீ முருங்கைக் காய்க் கட்டைத் திண்ணை யிலை வைச்சிட்டு வந்துவிட்டன்." தன்னைத்தானே எண்ணிச் சினந்து கொண்டாள். மறு நாள் தான் அவள் வீடு திரும்புவாள். அது வரைக்கும் வைத்தது வைத்தபடியே திண்ணையில் இருக்கும். ஆனால் இந்த அகோரமான வெய்யிலுக்கு வாடிப் போகலாம். "வந்து பார்க்கலாம்" என மனதைச் சமாதானப்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை.

முன்பு மாதிரி எல்லாம் இப்போது கிடையாது. வயது போகப் போக ஞாபக மறதி அடிக்கடி வருகிறது. ஒரு பொருளை வைத்த இடம் ஞாபகத்துக்கு வராமல் பட்டபாட்டை என்னென்று சொல்ல? இப்படித்தான் ஒரு நாள் தலைவாசல் திறப்பை கிணற்றடியில் வைத்துவிட்டு மறந்து போக........ அன்று போன போன இடங்களெல்லாம் போய் தேடிய பின்புதான் கிணற்றடியில் வைத்துவிட்டுக் கால் கழுவியது ஞாபகத்திற்கு வந்தது. அவள் தன்னைத் தானே எண்ணி வெட்கப்பட்டுக் கொண்டாள்.

"ராசம்" என்று அவளை ஊரார் அழைத்தாலும் அவள் முழுப்பெயர் இராசம்மா. திருமண எழுத்தின் போதுதான் தனது பெயர் இராசம்மா என்பது அவளுக்கே தெரியவந்தது. அதுவரை ராசம் என்றுதான் தனது பெயரை அவள் சொல்லி வந்திருக்கிறாள். இளவயதிலே கணவனை இழந்ததால் தனிக்கட்டையாக வாழப் பழகிக் கொண்டவள் ராசம். ஒரு சிறிய மண் வீடு. அதைச் சுற்றிச் சிறிய நிலப்பரப்பு. வீட்டின் பின் புறத்தில் ஆடுகளுக்கெனச் சிறிய கொட்டில். அதற்கு அப்பால் நாலைந்து முருங்கை மரங்கள். வேலியில் கதியால்களோடு ஒட்டி வளர்ந்த பப்பாமரங்கள். முற்றத்தில் தென்னை, மா, பலா, வாழை என்பனவற்றோடு வீட்டின் கிழக்கெல் லையில் ஒரு புளிய மரம் என வரும்படிகளுக்குக் குறைவில்லை.

சித்திரையில் காற்றுத் தொடங்கிவிடும். கூடவே கோயில் திருவிழாக்களும் ஒன்றன்பின் ஒன்றாய் வந்துவிடுவதால் பிரசாதத்துக்குக் குறைவிருக்காது. சில கோயில்களில் அன்னதானமும் நடை பெறும். எப்படியோ பொழுது கழிந்து விடும். "அவர் இல்லை எண்டதுதான் ஒரு குறை" என்று ராசம் அடிக்கடி சொல்லித் துன்பப்படுவாள். பிள்ளைகள் இருந்தால் கூட அவளது வாழ்க்கையின் வடிவம் சற்று மாறியிருக்கலாம்!

எண்ணங்கள் பலவாறாய் வந்து போக..... பேரிரைச்சலோடு பஸ் பயணித்துக் கொண்டிருந்தது. "பஸ்ஸிலை ஏத்தி விட வந்தவனுக்குச் செலவுக்கு ஏதாவது கையிலை குடுத்திட்டு வந்திருக்கலாம்" சமயம் கடந்து வந்த சிந்தனை. அவளை அலைக் கழித்துக் கொண்டது. "அங்கை இஞ்சை போய் அலைக் கழியாதை. இரணைமடுச் சந்தியிலை வந்திறங்கி நிண்டு கொண்டு ரெலிபோன் பண்ணு.அதிலை எங்கடை ஓட்டோ வரும். ஏறி வா" என்று தான் அவள் சினேகிதி பூமணி சொல்லி இருக்கிறாள். பூமணியின் பேத்திக்குச் சாமத்தியச் சடங்கு. அதற்காகத்தான் ராசம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறாள்.

"பூமணிக்கு விசர். இவ்வளவு அமளிக்கை என்னை ரெலிபோன் பண்ணச் சொல்லி இருக்கிறாள். அவளை மினைக்கெடுத்தக் குடாது. நான் போன் பண்ணுற நேரம் ஓட்டோ அங்கை நிக்குமோ தெரியாது! நாளைக்குச் சடங்கெண்ட படியாலை அவைக்கு எத்தினை வேலையள் இருக்கும்! அதாலை பொழுது படாட்டில் நானா ஒரு ஓட்டோவைப் பிடிச்சுக் கொண்டு போவம். இருட்டினால் பூமணிக்கு போன் செய்வம்" என்று தனக்குள் ராசம் தீர்மானித்துக் கொண்டாள்.

**மாலை 4 மணி 58 நிமிடம்**

பஸ் சாரதி பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்படுத்தினான். எல்லோரும் எழுந்து நின்று தெருவைப் பார்த்தனர். நீளமான சாரைப் பாம் பொன்று வீதியைக் கடந்து சென்று கொண்டிருந்தது. அது போனதும் பஸ் மீண்டும் புறப்பட்டது.

**மாலை 5 மணி 11 நிமிடம்**

பஸ் வேகமாக ஓட ஆரம்பித்தது. இப்படிப் போனால் இன்னும் பத்துப் பதினைந்து நிமிடங்களில் ராசம் இறங்க வேண்டிய இடம் வந்துவிடும். பொழுது இன்னும் முற்றாகப் பட்டுப்போகவில்லை. வெளிச்சம் தாராளமாக இருந்தது. பஸ் நின்றதும் ஓரிரண்டு பேர் இறங்கினார்கள். ராசமும் தனது பணயப் பொதிகளை எடுத்து இறங்க ஆயத்தமானாள்.

**மாலை 5 மணி 22 நிமிடம் 32 செக்கன்கள்.**

பஸ் நின்றதும் பொதிகளோடு இறங்கியவள் அந்த பஸ்தரிப்பு நிலையத்திற்குச் சற்றுத் தூரத்தே தென்பட்ட தேநீர் கடைப்பக்கமாகச் சென்று ஒரு தண்ணீர்ப் போத்தலை வாங்கிக் கொண்டாள். நா வறண்டு போயிருந்தது. பூமணி வீட்டில் வரவேற்புத் தடல்புடலாக இருக்கும். போனதும் கட்டாயமாகப் பூமணி கோபித்துக் கொள்வாள். போன் பண்ணாமல் வந்ததற்கு. ஆனால் அதைச் சமாளிக்கலாம்.

**மாலை 5 மணி 28 நிமிடம் 10 செக்கன்கள்.**

ஓட்டோ ஒன்றின் பக்கமாக அவள் நின்றிருந்தாள். "எங்கை போவேணும்?" சாரதி வினாவினான். ஊற்றுக் குளத்துக்கு அடுத்த பெரியநகருக்குப் போவேணும்" ராசம் சொல்ல முன்னர் "எங்கை சடங்கு வீட்டுக்கே?" ராசத்தின் கண்கள் அகல விரிந்தன. "ஓம்" என ராசம் தலையாட்ட அவளிடமிருந்த பொதிகளை அவன் வாங்கி ஓட்டோக்குள் வைத்தான். "ஏறுங்கோ போகலாம். இப்பவும் ஓராக்களைத்தான் அங்கை கொண்டு போய் விட்டிட்டு வாறன்" கட்டணத்தைப் பேச அவன் இடம் தரவில்லை. ஓட்டோ ஓடத்தொடங் கியது.

**மாலை 5 மணி 48 நிமிடம். 30 செக்கன்கள்.**

செப்பனிடப்படாத கிரவல் சாலையில் ஓட்டோ சென்று கொண்டிருந்தது. மதகு ஒன்று உடைத்தபடி செப்பனிடும் பணிகள் நடந்து கொண்டிருந்தன. அந்த இடத்தில் மாத்திரம் ஓட்டோ சகடையைப் போல ஆடி யசைந்து செல்ல வேண்டி இருந்தது. ஓட்டோவைச் செலுத்தியபடி அவன் ராசத்தைத் திரும்பிப் பார்த்தான். அவனிடமிருந்து சாராய வாடை வீசியதை அவள் மோப்பமிட்டுக் கொண்டாள். "வழக்கமா வன்னியிலை உள்ளவை இப்பிடித்தான். எந்த நேரமும் பூசினபடிதான்" அவள் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

**மாலை 5 மணி 55 நிமிடம். 00 செக்கன்கள்.**

அகலமான தெருவிலிருந்து இடப்பக்கமாகத் தென்பட்ட ஒரு ஒடுங்கிய பாதைக்குள் ஓட்டோ பிரவேசித்தது. "இதாலைபோறது கொஞ்சம் கிட்ட" என்றான் சாரதி. ராசம் மௌனமாக இருந்தாள். அந்தத் தெருவினுள் அரை மைல் தூரம் சென்றதும் அவன் ஓட்டோவை நிறுத்தினான். அந்த ஓட்டோ முன் கண்ணாடிக்குக் கீழே இருந்த பெட்டியை திறந்து ஒரு சிறிய போத்தலைக் கையில் எடுத்தான். அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தப் போத்தலை அழுத்தியபடி ராசத்தின் முகத்தில் விசிறினான். அவள் மூர்ச்சையற்றுப் போனாள்.

**மாலை 6 மணி 30 நிமிடம்**

"கொஞ்ச சேரத்திலை வந்திடுவன் எண்டு சொன்னவளை இன்னும் காணேல்லை" என்றவாறு ராசத்தின் போன் இலக்கத்திற்குத் பூமணி தொடர்பை ஏற்படுத்தினாள். போன் செயலிழந்து போயிருந்தது. மீண்டும்... மீண்டும் முயற்சி செய்தாள். தொடர்பு இருக்கவில்லை. தனது ஓட்டோவில் ஏறி ஏ9 சாலைக்கு வந்த பூமணி பலரிடம் விசாரித்தாள். தேநீர்க்கடைக்காரர் மட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பஸ்ஸில் இறங்கிய பெண் ஒருத்தி தனது கடையில் வந்து தண்ணீர்ப் போத்தல் ஒன்றை வாங்கிக் கொண்டு சாராயக்கடைப் பக்கமாகப் போனதாகச் சொன்னார். சாராயக் கடைக்கு அப்பால் வண்டிலில் வைத்து வடைவிற்கும் வடைவியாபாரி ஊருக்கு முன்பின் அறிமுகமில்லாத ஓட்டோ ஒன்றில் ஏறி ஒரு பெண் சென்றதைத் தான் கண்டதாகச் சொன்னான். அந்தப் பெண் தேநீர்க்கடைப் பக்கமாக இருந்து வந்தவள் என்றதையும் அவன் உறுதிப்படுத்தினான்.

**மாலை 6 மணி 50 நிமிடம் 55 செக்கன்கள்.**

பல இடங்களுக்குச் சென்று தேடியதும் எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை. கடைசியாகப் பூமணி பொலிஸ/க்குச் சென்று முறைப்பாட்டைச் செய்தாள். "போங்கள் விடிந்ததும் பார்க்கலாம்" என்றனர் பொலிஸார். பூமணிக்கு உறக்கமற்றுக் கழிந்த இரவின் பின்னால்... அந்த நாள் விடியாததாக விழந்து கொண்டது.


**மறு நாள் காலை 6 மணி 58 நிமிடம்**

"மதவடிக் காட்டுக்கை ஆரோ ஒரு பொம்பிளையை மேடர் பண்ணிப் போட்டுக் கிடக்காம்." வேட்டைக்குப் போனவை வந்து சொன்னதா வடைக்காறன் வந்து சொல்லிவிட்டுப்போனான்.

ராசத்தின் உடம்பை வெள்ளைத் துணியால் போத்திருந்தனர். நீதிபதி விசாரித்துக் கொண்டிருந்தார்.

"காதிலை கழுத்திலை இருந்ததைக் கழட்டிக் கொண்டு ஆளை விட்டிருக்கலாம். உப்பிடிச் சின்னாபின்னப் படுத்தின மிருகத்தைச் சும்மா விடப்பிடாது" - அந்த ஊர் அரசியல்வாதி ஒருவர் சொல்லிக் கொண்டு சென்றார்.

"காட்டுக்குள் உருக்குலைந்த பெண்ணின் சடலம் கண்டுபிடிப்பு. ஓட்டோ சாரதியைத் தேடிப் பொலிஸார் வலைவிரிப்பு" அன்றை தினச் செய்தித் தாளில் காணப்பட்ட செய்தி இது.



வாழ்க்கை என்பது
ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதிருங்கள்
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்
ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்

திரு.அப்துல் கலாம்

# எம்மவர் இன்னல் சுமந்த

## கூத்துருவ நாடகங்களின் நூல் வடிவம்

**"மனதின் செம்மையையும் அறிவியலின் விருத்தியையும் பிறருக்குத் தருகின்றபோது அதன் பெறுமதிகள் உங்களதாகும்." மகாகவி ரவீந்திரநாத் தாகூர்.**



யோ.ஜோண்சன் ராஜ்குமார்.

கலைப்படைப்புக்களை காலப்பதிவுகளாக வெளிக்கொணர்ந்து அவற்றில் பெரு வெற்றி பெற்றவர் யோ.ஜோண்சன் ராஜ்குமார். நாடறிந்த நாடகவிய லாளர், எழுத்தாளர், விமர்சகர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எனப் பல தளங்களில் முனைப்புடன் செயற்பட்டு வருபவர். ஈழத் தவர்களுடன் இரண்டறக் கலந்துள்ள பாரம்பரிய கலை யான நாட்டுக்கூத்தில் அதீத ஆர்வம் கொண்ட அண்ணாவியார் யோ.ஜோண்சன் ராஜ்குமார் 25 வருடங்களாக கலைத்துறையை இறுக அணைத்துக்கொண்டு செயலாற்றி வருபவர்.

மிகப்பெரும் அரங்க ஆளுமையான இவர் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநராக மிக நீண்டகாலமாக பணியாற்றி வருகிறார். கடந்த காலங்களில் கலைப்பயணங்களை தான் சார்ந்த ஆளுமைகளுடன் மேற்கொண்டு கனதியான கலைப்படைப்புக்களை புலம்பெயர்ந்தோர் தேசங்களில் அரங்கேற்றியவர். கலைச்செழுமை மிக்க காவலூரில் பிறந்த இவர் சிறுவயதுமுதல் தனது தாய்வழி உறவுகள் மூலமாக கூத்துக்கலைக்குள் ஈர்க்கப்பட்டவர். பின் நாட்களில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளார் ஈழத்தின் மிகச்சிறந்த அரங்காளன் அமரர் பிரான்சிஸ் ஜெனம் ஆகியோரால் புடம்போடப்பட்டவர்.

இவரது அரங்குசார் செயற்பாடுகளுக்கு அப்பால் எழுத்துப்பணி பற்றி விபரிப்பதே இப்பத்தியின் நோக்க மாகவுள்ளது. இரண்டு தடவைகள் அரச சாகித்திய விருது பெற்ற படைப்புக்களிற்கு சொந்தக்காரரான இவர் மிகக்குறுகிய காலத்தில் 7 நூல்களை வெளியிட்டவர். இவற்றுள் மூன்று நூல்களுக்கு தொகுப்பாசிரியராக இருந்தவர். இதன் மூலமாக தான் சார்ந்த ஆளுமை களின் தோழமையை அழகாக்கினார்.

யோ.ஜோண்சன் ராஜ்குமார் அவர்கள் எழுதி நெறி யாள்கை செய்த கூத்துருவ நாடகங்கள் சிறுவர் நாடகங்களே நூலுருப்பெற்றுள்ளன. இந்நூல்கள் தனியே கட்டுரை அமைப்பாக அமையவில்லை. கதை கதைமாந்தர்களின் காட்சி அமைப்பு மற்றும் விபரிப்பு ராகதாள அளிக்கை முறை என அரங்காற்றுகையின் பிரதிபலிப்பையே நூல்களில் அவதானிக்க முடியும். இந்நூல்களைக் கொண்டு துறைசார்ந்தவர்கள் அரங்காற்றுகை செய்யும் வகையில் பொதுமைப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலை வடிவங்கள் ஆற்றுகையுடன் நின்றுவிடாமல் அவை ஆவணமாக வேண்டும். நூல்வடிவில் ஆவணமாகும் போது காலங்கடந்தும் எம் மவர்களால் அவற்றைப் பயன்படுத்த முடியும். நூல்களாக இருப்பதனால் இவற்றைப் பரவலாக்குவதுடன் காலநீட்சியில் பாதுகாப்பாகவும் பேணமுடியும் என தனது நூலாக்க முயற்சிகள் தொடர்பாக யோ.ஜோண்சன் ராஜ்குமார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இவரது நூல்களாக கம்பன் மகன் (நாட்டுக்கூத்து) கொல் ஈனும் கொற்றம் (கூத்துருவ நாடகம்) அமைதிப் பூங்கா சிறுவர் நாடகத் தொகுப்பு, அற்றைத் திங்கள் (கூத்துருவ நாடகம்) அகியவற்றைக் குறிப்பிடமுடியும். தென்மோடி நாட்டுக்கூத்து இசை மெட்டுக்கள், சர்வதேச கலைப்பாலம் - 3, ஈழத்து அரங்கில் பிரான்ஸிஸ் ஜெனம் - தன்மையும் படர்க்கையும் ஆகிய மூன்று நூல்களின் தொகுப்பாசிரியராகவும் எழுத்துப் பணியாற்றி யவர். நாற்பது வரையான ஆய்வுக்கட்டுரைகளையும், 20 இற்கு மேற்பட்ட சிறுவர் நாடகங்களையும், 10 சிறுகதைகளையும் எழுதியுள்ள யோ.ஜோண்சன் ராஜ்குமார். இவற்றுடன் நூலுருப் பெறாது பல நாட்டுக்கூத்துக்களையும் எழுதியுள்ளார். தொடர்ந்தும் எழுதி வருகின்றார். இதிகாச புராணங்கள் பாரம்பரிய வரலாறுகளை தற்கால நிகழ்வுகள், சம்பவங்களுடன் இணைத்து கூத்துருவ நாடகங்களாக எழுதி நெறியாள்கை செய்வதில் வல்லவரான இவர் இதன் மூலமாக வரலாற் றைப் பதிவாக்கும் பெரும் பணியை செய்தவர் தொடர்ந்தும் செய்து வருகிறார்.

2005 ஆம் ஆண்டு வெளிவந்த கொல்லினும் கொற்றம் கூத்துருவ நாடகத்திலே இராமாயணத்தில் கும்பகர்ணன் வதைபடலம் கதைக்கருவாக எடுத்தாளப் படுகின்றது. போர்க்களத்தில் தர்மமற்ற போர் வெல்வதில்லை என்ற கருத்து மேலோங்க கதை இங்கிதமாக சொல்லப்படுகின்றது.

***நீதி மறந்த போர் நானிலந்தனில் வெல்லுமோ - அந்தப் பேதை***
***சீதை தன்னை விட்டுவிட்டால் பகை நீளுமோ***

என்ற கவிவரி ஈழத்தவர்களின் பிரச்சினைக்கான தீர்வை சூசகமாக வெளிப்படுத்துவதாக உள்ளது.

***தருமமே தவறும் போர்கள் வென்றதில்லை***
***வையகத்தில்***
***கர்வமே துறந்து நீயும் கொன்றிடுஞ் சமர் விடுப்பாய்***
***சர்வமே உறையும் தேவன் கர்வமே அறிவான் கோனாய்***
***போர்தவிர்! பகை தொலை! சீதையைச் சிறைவிடு.***

எம்மவர்களின் உரிமைக்கான தர்மயுத்தம் இவ்வாறான வரிகள் மூலமாக கச்சிதமாகக் கையாளப்பட்டுள்ளது.

இவற்றின் பின்னால் எமது வரலாற்று வாழ்வியல் நீண்டு செல்லும்.

2010 ஆம் ஆண்டு வெளிவந்த அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகம் முல்லைக்கு தேர் ஈர்ந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றை எடுத்தியம்புகின்றது. குறுநில மன்னனான பாரி மீது மூவேந்தர்கள் இணைந்து பெரும் போர் தொடுப்பதும் யுத்தம் சன்னதமாடுவதும் மன்னன் கொல்லப்பட மக்கள் அகதியாவதும் யதார்த்த நிலையுடன் கதை நகர்த்தப்படுகின்றது.

காவலூர் இ.விஜேந்திரன்

***ஐயகோ நேர் நின்று சமர் செய்யத் திராணியற்றவர்***
***சூழ்ச்சியால் என்னுயிர் குடித்தனரே***
***பேராற்றல் மிக்க பறம்பு மலைத் தேசமே***
***நின் அடியில் சாவதையிட்டு மகிழ்வடைகின்றேன்***


எனப் பாரிமன்னன் கூறி உயிர் துறப்பது எம்மவர்க்ளின் கடந்தகாலங்கள் கண்முன் விரிவதாக அமைகின்றது.

***அழுதவிழி காயவில்லை***
***அமுத மொழி காணவில்லை – அவர்***
***அரசிழந்தார் சொந்தத் தரிசிழந்தார்***
***தந்தை தனையிழந்து அகதியானார்***

என நீளும் வரிகள் மிகப்பெரும் துயர் சுமந்தவர் களையும் அமுதமொழி தொலைத்த தமிழ் இனத்தின் அழுத விழிகளையும் வெளிப்படுத்துவதுடன் இன்றுவரை தொடரும் அவலம் நிறைந்த அகதி வாழ்வையும் நிதர்சனமாக்கியுள்ளது.

2018 இல் கனடா தாய்வீடு பத்திரிகை யின் நாடக விழாவில் அரங்குகண்டு 2019 இல் யாழ்ப்பாணத்தில் அரங்கேறவுள்ள செம்மாத்தா என்ற கூத்துருவ நாடகம் சமகால சாட்சியப் பதிவாக உள்ளது.

வீரத்தமிழ் பெண்ணான செம்மாத்தா அந்நிய ஆட்சியாளர்களுக்கு கப்பம் செலுத்த மறுக்கிறாள். இதனால் குழப்பமடைந்த மேலைத்தேச ஆட்சியாளர்கள் அதர்மம் மேலோங்க பெரும் போர் தொடுத்தனர். செம்மாத்தாவின் போர்த்திறனால் அவர்கள் தோல்வியுற்றனர். பின்னர் தமிழன் ஒருவன் ஊடாக செம்மாத்தாவுடன் நல்லுறவைப் பேணி அவன் மூலமாக வஞ்சகமாக செம்மாத்தா சிறைபிடிக்கப்படுகிறாள். இதன் பின்னர் அவள் வாழ்வியல்













பதிவுசெய்யப்பட வில்லை.

இவ்வாறான கதை ஓட்டம் காணாமல் போனவர்களை யும் இறுதி யுத்தத்தில் உறவுகள் முன்னிலையில் சிறைப்பிடிக்கப் பட்டவர்களையும் ஞாபகப்படுகின் றதே என எண்ணும் வகையில் கதை சொல்லப் பட்டுள்ளது.

2013 இல் வெளிவந்த அமைதிப் பூங்கா சிறுவர் நாடகத் தொகுப்பு பாடசாலை மாண வர்களின் தமிழ்த் தினப் போட்டிகளை அடிப்படையாகக் கொண்டு அரங்கு கண்டவைகளின் தொகுப்பாகும். இதிலுள்ள 10 நாடகங்களும் சமகால பேசு பொருளை கருவாகக் கொண்ட கதைகளாக உள்ளன.

கொல்ஈனும் கொற்றம் கூத்துருவ நாடகம் வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதையும் அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகம் வடக்கு மாகாண சாகித்திய விருதுடன் அரச சாகித்திய விருதையும் அமைதிப் பூங்கா சிறுவர் நாடகத் தொகுப்பு வடக்கு மாகாண சாகித்தி விருதுடன் அரச சாகித்திய விருதையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருத்தமான அட்டை வடிவமைப்புடன் சிறப்பாக அச்சிடப்பட்டுள்ள ஒவ்வொரு நூல்களும் மிகப் பெறுமதி யானவை. காலத்தின் தேவையறிந்து எம்மினத்தின் இன்னல்களை கடந்த காலத் துன்பியலை, தற்கால நெருக்குதலை காவியங்களுடன் ஒன்றித்து கச்சிதமாக பதிவு செய்துள்ளார் நூலாசிரியர். இவை முடிவல்ல எம்மினத்தின் பல சாட்சிகளின் பதிவுகளாக நீட்சி பெறும்.



# ஊடுருவி உலகநாதன்

விவசாயியிடம் உற்பத்தி செய்த மரக்கறிப் பொருள்களை குறைந்த விலைக்கு வாங்கி கூடிய விலைக்கு விற்கும் வியாபாரி கூடிய இலாபம் அடையும் போது விவசாயி இலாபமே அடையவில்லை என்றால் மரக்கறிப் பொருள்கள் உற்பத்தி செய்வதை நிறுத்துவதைவிட அவனால் வேறு என்ன செய்ய முடியும்.

எத்தனை பேர் இன்றைக்கு உற்பத்தி செய்த பொருள்களை சந்தையில் தமக்கு இலாபம் கிடைக்கும் அளவில் விற்கமுடியா மல் போனதால் அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதையே நிறுத்திவிட்டனர் என்று தெரியுமா?

இதை விற்பனையாளர்கள் அறிவார் களோ என்று சந்தையில் மரக்கறி விற்கப் போன வியாபாரி ஒருவர் மாட்டுக்குத் தான் கீரையை போடவேண்டும். உந்த விலைக்கு சந்தையில் கீரையை கொடுத்து விட்டு வருவது சந்தைக்கு போய் வாற மோட்டார் சைக்கிளின் பெற்றோலின் செலவைக் கூட எடுக்க முடியாமல் இருக்கிறது என்று புறுபுறுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

அதே சந்தைக்கு மரக்கறி வாங்க வந்த உலகநாதன் அவரைப் பார்த்ததும் என்ன நடந்து உனக்குள்ளே புறுபுறுத்துக் கொண்டு வாறாய் என்று விவரீதம் நடந்தது போல விசாரித்துள்ளார்.

ஒன்றுமில்லை அண்ணை வியாபாரி மாரை நினைத்தால் தான் கோபம் கோபமாக வருகுது நான் பட்ட கஷ்ரம் போதும் எனது பிள்ளைகள் படித்து முடித்துவிட்டினம் என்றால் என்னோடை இந்த விவசாயத் தொழில் போய் தொலையட்டும் என்று அவர் சினக்க உலக நாதன் சொல்லத் தொடங்கினார்.

உனது பிள்ளைகள் படித்து அரச வேலை எடுத்தால் என்ன எடுக்காவிட்டால் என்ன விவசாயத்தை எல்லோரும் செய்ய வேண்டும் அப்பொழுது தான் உணவுப் பொருள்களுக் குத் தட்டுப்பாடு நிலவாது.

விவசாயிக்கும் வியாபாரிக்கும் இடையே இணைப்பாக இருந்து ஒப்பந்தம், வியாபாரம் முதலியவற்றைச் சுமுகமாக முடித்துத் தரும் தொழிலைச் செய்பவர் தரகர் ஆகும். 'வீட்டுத் தரகர்' 'மாட்டுத் தரகர்' 'கல்யாணத் தரகர்' என்று தரகர்கள் இல்லாமல் வியாபாரமே நடைபெறாது.

பெறுமதி வாய்ந்த பொருள்களை விற்கவோ வாங்கவோ தரகர் வேணும். தரகர் இல்லை என்றால் பொருளின் பெறுமதியும் தெரியாமல் போய்விடும்.

ஆனால் இன்று சிறிய பொருள்களையும் விற்பதற்கு தரகர் வேணும். அந்தளவுக்கு தரகரிடம் விற்பவர்கள் போய் விழுகிறார்களோ அல்லது தமது வலைக்கு விற்பவர்களை விழவைக்கிறார்களோ என்று தான் தெரியாமல் இருக்கிறது.

ஆரம்ப காலங்களில் தரகர்களுக்கு மவுசு இருக்கவில்லை. காலப் போக்கில் மாற்றம் கண்டு இப்பொழுது தரகுத் தொழில் பெரும் பணம் சம்பாதிக்கும் தொழிலாக மாறிவிட்டது. பொருள் இருக்கிறதோ இல்லையோ தரகர் இல்லாத ஊர் இல்லை.

ஒரு பொருளை விற்கிற வனோ வாங்கிறவனோ பெரிய அளவில் இலாபம் அடைந்து கிடையாது விற்றுக் கொடுக்கும் தரகர் தான் இலாபம் அடைகி றான்.

யாழில் பெரிய சந்தை என்ற பெயரை மட்டுமே வைத்திருக்கும் சந்தைக்கு அண்மையில் உற்பத்தி செய்த கீரையை விற்பதற்கு கொண்டு சென்ற பல விவசாயிகள் அநியாய விலைக்கு அதாவது ஒரு பிடி கீரை 15 ரூபாய்க்கு வியாபாரியிடம் கீரையைக் கொடுத்துவிட்டு சென்றுள்ளனர்.

அங்கே வியாபாரிகள் ஒரு கீரைப் பிடியை 40 ரூபாய்க்கு விற்கிறார்களாம் என்றால் கீரையில் யாருக்கு இலாபம் என்றால் வியாபாரிக்குத் தான். உற்பத்தியில் ஈடுபடாமல் இலாபம் ஈட்டுகிறார் என்றால் நட்டப்படுவது விவசாயி.

சந்தையில் விவசாயி நின்று விற்பனையில் ஈடுபட்டால் அவர்களை பின்னுக்கு இடம்கொடுத்துவிட்டு முன்னுக்கு இடம்பிடித்து வியாபாரிகள் விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

விலை நிர்ணயம் என்பது ஒரு தரப்பு மட்டும் இலாபம் ஈட்டுவதற்காக மட்டும் அல்ல சம்பந்தப்பட்ட எல்லோரும் பயனடையக் கூடியதாக இருக்க வேண்டும். இதில் விவசாயிதான் மற்றவர்களை விட கூடிய இலாபம் பெற வேண்டும். இதனை இந்த சந்தை அறியாமல் அல்ல இருந்தும் திருகு தாளம் தான்.

விவசாயி நட்டப்பட்டால் கீரை உற்பத்தி செய்வதை கைவிடுவார்களாயின் கீரை யின் விலை அதிகரிக்கும். பாதிக்கப்படுவது மக்கள். இதனை அந்த சந்தையோ வியா பாரிகளோ சம்பந்தப்பட்ட பிரதேச சபையோ கருத்தில் எடுப்பார்களா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

சந்தை என்றால் விவசாயியும் வியா பாரியும் தரகரும் உழைக்கக் கூடிய இடமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சந்தை என்ற பெயருக்கே மவுசு இருக்கும்.

விவசாயியும் வியாபாரியும் நுகர்வோரும் தான் இங்கு முதன்மையானவர்கள் அதற்குப் பிறகுதான் தரகர்.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக தீர்க்கமான முடிவினை சம்பந்தப்பட்ட தரப்பினர் எடுப்பார்கள் என்று விவசாயிகள் நம்பினார்கள். அது நடக்கவில்லை.

நாங்கள் யார் அதற்காகத் தானே பதவியில் இருக்கிறம் என்று கொலர் தூக்கினவர்கள் இதுவரை வரவில்லை. பிறகு இவர்கள் யாரை எதிர்பார்ப்பது.

அடிக்கடி கூட்டம் கூடுவார்கள் கேட்டால் சந்தை அபிவிருத்திக் கூட்டம் என்று சொல்லுவார்கள் கூடிப் பேசிற முடிவுகளில் ஒன்று கூட இந்த விவசாயிகள் பயனடை கின்ற செயற்பாடாக இருக்குமா? என உலகநாதன் விவசாயிகளின் வேதனையை அள்ளிக் கொட்ட


அண்ணை இது மோசடி பகல் கொள்ளை என்று அவர் சீறம்கொள்ள

பகல் கொள்ளையோ இரவுக் கொள்ளையோ சம்பந்தப்பட்ட தரப்பினர் வராததைப் பார்க்கின்ற போது விவசாயிகள் பக்கம் பார்வை இல்லை என்பது மட்டும் தெரிகிறது என்று சொன்ன உலகநாதன்

விவசாயிகளுக்கோர் சந்தை திறக்கப்பட்டால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை நேரடியாகவே நுகர்வோருக்கு விற்கக் கூடிய வாய்ப்பு வரும்.

விவசாயிகளுக்கு பயனைத் தருவது மட்டுமல்ல பல உற்பத்திப் பொருள்கள் சந்தை நோக்கி வரும் என்பது உண்மை.

பகுதி IV




இனமுரண்பாடுகள் பற்றிய ஆய்வுகள் அண்மைக் காலமாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. குறிப்பாக இன ரீதியாகவும், மத ரீதியாகவும் தம்மை அடையாளம் காணும் ஒவ்வொரு, வெவ்வேறு மக்கள் குழுக்களால் திர் திடீரென முரண்பாடுகள் அதிகமாகி வருவதை உலகம் சந்திக்கின்றது. சூடானில் அராபியரும், கென்யாவில் கிதவுமும், சிம்பாப்வேயில் சேரனாவும், நைஜீரியாவில் பூலானி இனத்தவரும் தம்மின மேலாதிக்கம் மூலம் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட முயலுகின்றனர். இந்நிலை சிறுபான்மை இனங்களின் விரக்தியைத் தூண்டி கலவரங்களுக்கும் கொரில்லா யுத்ததிற்கும் மட்டுமல்ல, உள்நாட்டு யுத்ததிற்கும் இட்டுச் செல்லும். இம்முரண்பாடுகள் தேசிய ஒருங்கமைப்பிற்கு ஒரு தடையாக அமைவது மட்டுமன்றி அரசியல் உறுதிப்பாடின்மைக்கான ஒரு மூலமாகவும் விளங்கும். மேற்கூறப்பட்ட சில வளர்முக நாடுகளைப் போன்று இலங்கையும் 1948ல் சுதந்திரம் பெற்றதில் இருந்து இன முரண்பாட்டின் கோர விளைவுகளை அனுபவித்து வருகின்றது.

இலங்கையில் காணப்படும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடை-யிலான இனமுரண்பாடு சமூகரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாட்டை கூறுபடுத்தியுள்ளதுடன், தேசத்தின் உளப்பதிவிலும் ஆழமான வடுக்களை விதைத்துள்ளது. என்றென்றும் ஆழமாகி வருகின்ற இனப்பிரிவின் விளைவாக வன்செயல் மட்டம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. அவை இச் சிறுதீவை அதிர்ச்செய்து இயல்பான வாழ்வை சிதிலமடையச் செய்துள்ளன.

இலங்கையின் இனமுரண்பாடானது படிப்படியாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளாலும், மனித உரிமை மீறல்களாலும், மூர்க்கத்தனமான வன்முறையாக வளர்ந்துள்ளது. இன மோதல் 1983ல் தொடங்கியதாக பொதுவாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இவ் இனமுரண்பாட்டால் தோற்றுவிக்கப்பட்ட வன்முறை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆழமாக ஊடுருவியது. முரண்பாடுகளுக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு முயற்சியும் வன்முறைத் தீயை எண்ணெய் விட்டு வளர்ப்பதாகத் தோன்றுவதனால் இத்தீர்வானது அடிக்கடி தனது சோகம் நிறைந்த அதன் சொந்த வரலாற்றைத் திரும்பப் பார்ப்பதே அதன் தலைவிதியாகிவிட்டது. சிங்கள பௌத்தம் என்ற கொள்கை சிங்களவர் அல்லாத ஏனைய மக்களை அந்நியர் என்றும், சிறுபான்மையினர் என்றும் பிரித்து வைத்தது. இதற்காக இம் மக்களை இலங்கைத்தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர் , சோனகர், கிறிஸ்தவர் எனப் பிரித்து வைத்தனர். கடந்த காலத்தினை சற்றுத் திரும்பி பார்ப்போமானால் ஆளும் சிங்கள் வர்க்கத்தினரால் இவர்களது உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு இருப்பதை அவதானிக்க முடியும். உரிமைகளிற்காக இவர்கள் வாதாடும் போதெல்லாம் அரச வன்முறையினால் தாக்கப்பட்டுப் பீதின் காரணமாக அடக்கப்பட்டவர்களாக இருப்பதனையும் காணமு-டியும்.

1970களில் சிங்கள பௌத்த கருத்தினால் குறிப்பாகக் காலனித்துவ ஆட்சிக் காலகட்டத்தைச் சேர்ந்த அனகாரிகதர்மபாலவினதும், பிறரதும் கருத்துக்கள் 1992 ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிங்கள பௌத்த மேலாண்மை சட்டபூர்வமாக்கப்பட்டதால் அரசியல் யாப்பின் படி இலங்கை சிங்கள தீபமாகவும், தர்மதீபமாகவும் பௌத்தத்தை பாதுகாக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் (சிங்களவர்களின்) நாடாக மாறியது.

சிங்கள பௌத்த கருத்தியல் சிங்களவர்கள் மத்தியில் தவறான நினைவூட்டல்களில் வழிநடாத்திச் சென்றதனை நோக்கமுடியும். நாட்டின் பெரும்பான்மை இனத்தின் வரலாற்றை விபரிப்பதற்காகக் கொள்ளும் புராண பதிவேடாகிய மஹாவம்சத்தின் முற்பகுதியில் அடங்கும் கற்பனை விளக்கங்களும், புனைக்கதைகளுமே இவ்வித பழமைக் கொள்கைப் போக்குகளிற்கு ஆதாரமாக இருந்தன. குறிப்பாக மஹாநாம தேரோவால் தொகுக்கப்பட்ட இலங்கையின் "பூர்வ சரிதம்" எனக் கூறப்பட்ட மஹாவம்ச நூலே இலங்கையின் இனப்பிரச்சினைகள் அனைத்துக்குமான ஆதி மூல காரணமாகும். அதனாலேயே இன்று வரை இது ஒரு சர்ச்சைக்குரிய நூலாகக் கருதப்படுகின்றது. சிங்கள பௌத்தர்களின் தவறான திரிவுபடுத்தப்பட்ட கருத்தியல்களின் முக்கிய அம்சங்களைப் பின்வருமாறு சுருங்கக் கூறமுடியும்.

- வரலாற்றுப் பணிக்காகத் தேர்ந்த மக்கள் தாமெனவும், பண்டைய சிறப்புகளைக் கொண்ட இனத்தவர் எனவும் தம்மைக் கூறிக்கொண்டமை.
- சிங்களவர் இப்பிரதேசத்தில் சிறுப்பான்மையினர், பூகோளப் பரப்பில் இங்குமட்டுமே வாழ்பவர்கள், அதற்கு ஆபத்து வந்ததுள்ளது எனவும் எண்ணிக் கொண்டமை.
- சிங்களவர்கள் நீண்ட காலமாகவே கிராமியப் பொருளாதாரத்தில் தம் சாதாரண விவசாய உற்பத்தியாளர் எனவும், பூமியின் மைந்தர்கள், உண்மையான மதம், ஒழுக்கம், சமாதானத்திலும், நம்பிக்கை உடையவர்கள் என்றும் பிற இனத்தவர்கள் பல்வேறு விதமாக ஒடுக்கவும், சுரண்டவும் இடமளித்த அப்பாவிகள் எனவும் தன்னுணர்வு கொண்டமை.
- சிங்களவர் அல்லாதவரும், பௌத்தரல்லாதவரும் எதிரிகள் என்ற பார்வை பிறர் இரத்தத்திலும், மதத்திலும் அந்நியர், தந்திரசாலிகள் பேராசையான உலோபிகள் எல்லாத் துறைகளிலும் அதர்ம முறையில் போட்டியிடுவோர் , அப்பாவிச் சிங்கள மக்களின் வேலை வாய்ப்புகள், வாணிபம், கல்வி வாய்ப்புகளை பறித்தெடுப்போர் என்ற பார்வை.


(தொடரும்)

# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 3



(கடந்தவாரத் தொடர்ச்சி ...)

திருமணம் என்னும் ஆக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்குப் பின் பெண்களுக்குக் கிடைக்கும் பாத்திரங்களின் பெயர் மனைவி. அப்புறம் அம்மா. அதன்பிறகு பாட்டி யாகலாம். திருமணத்திற்கு முன் ஒரு பெண்ணின் பாத்திரமாக இருப்பது மகள். மகள் என்னும் பாத்திரமாக ஒரு குடும்பத்தில் இருக்கும் அவளுடைய திறமைகளையும் சுதந்திரத்
தையும் தடுப்பவர்கள் குறைவு. மகளாக இருக்கும்போது அவள் மாணவியாக இருக்கிறாள். மாணவப்பருவத்தில் போட்டி களில் கலந்துகொள்ளலாம். விரும்பிய நூல் களைப் படிக்கலாம். திராவிடச் செல்வியாகப் பலவற்றையும் படித்தாள் பலபோட்டிகளி லும் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றி ருக்கிறாள். அத்தோடு தனது அறிவின் மூலம் அந்த ஊரின் பொதுவெளிக்குத் தேவை யான செயல்பாடுகளில் ஈடுபடலாம். அப்படித் துள்ளித் திரிந்த பெண்ணுக்கு ஊரார் தந்த பெயர் பொசலு.



அ.ராமசாமி

வேறுபாடுகளை உருவாக்கும் நிகழ்வாக இருப்பது திருமணம். திருமணம் என்னும் நிகழ்வே பெண் ணொருத்தி யைக் குடும்பப் பொறுப்புள்ள வளாக மாற்றுகிறது என்று மரபான நம்பிக்கைகளும் சமூகத்தின் இருப்பும் சொல்லிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் நடப்பில் பெண்ணின் திறமை களையும் அழகையும் அறிவையும் அழித்துத் தொலைத்துவிடத் தூண்டும் ஒன்றாக இருக்கிறது என்பதைத் துல்லியமாக எழுதிக் காட்டியுள்ளார் கவிதா சொர்ணவல்லி.

அம்மாவின் பெயர் கதையை நம்பகத் தன்மை கொண்ட கதையாக வாசிப்பவர் களுக்குத் தருவதற்குக் கவிதா சொர்ண வல்லி உருவாக்கிய சொல்முறை முன்னி லைக் கூற்று முறை. முன்னிலைக் கூற்று முறையில் சொல்லப்படும் கதைகளில் சொல்லப்படுபவரும் சொல்பவரும் சம அளவில் இடம்பெறும்போது இரண்டு பாத்திரங்களும் அதன தன் இயல்பைக் காட்டுபவர்களாக அமைவார்கள். அப்படியில்லாமல் சொல்பவர்களின் இருப்பைக் குறைத்துக் கொண்டு சொல்லப்படும் பாத்திரத்தை விரிவாக எழுதிக் காட்டுவதும் உண்டு. பெண் எழுத்துகளில் பலரிடம் இந்தத் தன்மை உண்டு.

அப்படி எழுதும்போது எழுதும் பெண்க ளின் கோணம் எழுதப்படும் பெண்களின் பாத்திரங்களை லட்சியப்பாத்திரங்களாகவே எதிர்நிலைப்பாத்திரங்களாகவே ஆக்கிவிடு வதுண்டு. அத்தகைய பாத்திரங்களின் மீது நம்பகத்தன்மையற்ற பாத்திரங்கள் என்ற குற்றச்சாட்டு எழும்போது மறுத்துச் சொல்ல கதைகளில் அகச்சான்றுகள் எவையும் இருக்காது. கவிதா சொர்ணவல்லி முன்னி லைக் கூற்று முறையில் சிறப்பான கதை களை எழுதுபவர் என்பதற்கு இன்னொரு கதையையும் காட்ட முடியும். அந்தக் கதை யின் தலைப்பு டிரங்குப் பெட்டி புகைப்பட பெண். அந்தக் கதையைப் பொன் வாசுதே வன் தொகுத்த விளிம்புக்கு அப்பால் (மே.2017) தொகுப்பில் வாசிக்கலாம். புதிய படைப்பாளிகளின் சிறுகதைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ள அந்தக் கதையும் கதை நிகழும் வெளியாலும், கதையின் ரகசியத்தை மூடி வைத்தி ருக்கும் பொருளாக டிரங்குப் பெட்டியைக் கொண்டிருக்கிறது என்பது சுவாரசியமான ஒன்று.

சாதிய வேறுபாடுகள் கூர்மையாக வெளிப் படும் ... சாதிக்கலவரங்களைக் கொண்டாடும் திருநெல்வேலி மாவட்டப் பின்னணியில் அந்தக் கதை நாலாஞ்சேரிப் பையன், மேலத் தெருக்காரப் பெண்ணொருத்தியைக் காதலித் துத் தோல்வியுற்ற துன்பியல் கதையைச் சொல்கிறது. அந்தக் கதையைச் சொல்லும் பெண்ணாக இருப்பவள் அந்தப் பையனின் ... வள்ளி மச்சானின் முறைப்பெண்ணாக இருப்பவள். நகரத்துப் பள்ளிகளிலும் கல்லூரி களிலும் படித்தாலும் கோடை விடுமுறைக்குத் தாமிரபரணிக் கரைக் கிராமத்துக்குப் போய் வருபவள். இப்போது அமெரிக்காவில் இருக் கும் அவளது நண்பனோடு 'பேஸ்புக் சாட்டில்' பேசும் நவீனப்பெண். தனது பேவரைட்டான 'மெரில் ஸ்ட்ரீப்' நடித்த " ப்ரிட்ஜெஸ் ஆஃப் மேடிசன் கவுன்ட்டி" படம் பார்த்தபோது தனது வள்ளி மச்சானின் கதை நினைவுக்கு வந்த தாகச் சொல்லுகிறாள்.

முன்னர் சொன்னதுபோல் முன்னிலைக் கதை கூற்றுமுறையின் நம்பகத்தன்மையை 'சாதிய மனம் கொண்டோர் உண்டாக்கும் அச்ச உணர்வின் தீவிரத்தையும் சாதிய வெளிகளில் நிலவும் வேறுபாடுகளையும் இந்தக் கதையிலும் வாசிக்கலாம்.

*முற்றும்* ■

# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்



கற்க கசடறக் கற்க. கற்றபின் நிற்க அதற்குத் தக... எவராவது அப்படி நிற்கிறார்களா? என்றால் இல்லை.இராமயணத்திலே ஓரிடத்தில் சொல்லப்படுகின்ற விடயம் என்னவெனில், அனுமானுக்கு அவர் பலம் என்ன வென்று தெரி யாமல் அவர் நின்றாராம். அப்போது இராமன் அனுமானுக்கு அவர் பலம் என்னவென்று தெரியப்படுத்தி அவரை சிரஞ்சீவி மலையை தூக்கிவரவிட்டதாகக் கதை சொல்லப்படுகிறது. அதேபோல எம்முடைய மைத்திரியும் தனது பலம் என்னவென்று அறியாது இருக்கிறாரோ! நிறைவேற்று அதிகாரத்தின் முழுமை யான பொருள் என்ன வென்று அவர் அறியாமல் இருப்பதால்தான் இத்தனை குழப்பமும் என்று சொல்லப்படுகிறது. மைத்திரி மந்திரியாகவே இருந்திருக்கலாம். பிரதம மந்திரியாக இருப்பது கூட நல்லதில்லை என்று சொல்கிறார்கள் பெரியவர்கள்.

மஹிந்தாவை பிரதமராக்கியபோது தனது பலத்தை உபயோகித்து நீதி மன்றத்தின் அடியை வாங்கியவர் அவர் அல்லவா! பின்பு அவர் செய்ய வேண்டிய முக்கியமான விடயங்களில் கோட்டை விட்டுவிட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது. உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பைப் பற்றிய விசா ரணைக்குச் செல்ல வேண்டாம் என்று அதற்குரியவர்களைக் கேட்டுக் கொண்டதிலிருந்தும், அது தொடர் பானவர்களுடன் பேசிய பேரத்திலிருந்தும் அவர் அரசியல் இயலாமை வெளிப்படுகி றதே! ஏன் இத்தனை குழப்பங்கள் அவருக்கு? அவருக்கு நல்ல ஆலோசனை வழங்குபவர்கள் பற்றாக் குறை இருப்பதா கவே எனக்குத் தோன்றுகிறது. நல்ல ஆலோசகர்கள் அவரைச் சுற்றி இருப்பார் களானால் எத்துணை அழகாக அவரை வழி நடத்தலாம்? அவர் தற்போது பாதை தவறிய தனது கால்கள் விரும்பியபடி நடக்கிறாரா? தெரியவில்லையே!

இல்லாவிடில் உலக அரசியலுக்குள் சிக்குண்டு தவிக்கிறாரா தெரியவில்லை. சில சமயங்களில் விலாங்கு மீன் போன்று அவர் நடப்பதாகவே தெரிகிறது. சம்பந்தா சம்பந்த மில்லாமலல் சிங்கப்பூர் ஓடுகி றார். சீனா ஓடுகிறார். அதிரடியாகச் சட்டங்களை இயற்றுகிறார். எதற்குத் தடை போடுவதென்று அவர் நடப்பு. கண்ணைத் தொட்டுக் கோபம். காலைத் தொட்டுக் கோபம் என்று சிறு பிள்ளைகள் விளை யாடுவதைப் போலப் பிரதமருடன் அடிக்கடி மோதுகிறார். கேட்டால் அவர் அதற்குச் சொல்லும் காரணங்கள் வேடிக்கையாகத் தெரிகி றது.சிறுபான்மை மக்களை மட்டுமல்ல, பெரும்பான்மை மக்களில் இருக்கின்ற புத்தி ஜீவிகளுக்குள்ளும் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிற தாக இவர் பேச்சு இருக்கிறது.

எனக்கு புத்தி தெரிந்த நாட்கள் தொட்டு இலங்கை அரசியலை வேடிக்கையாக்கிய பெருமை மைத்திரி அவர்களையே சாருகி றது. அர்த்தமற்ற பேச்சு, முன்னுக்குப் பின் முரணான பேச்சு, உறுதியற்ற நடவடிக்கை கள், சட்டத்துடன் மோதல், சிறுபான்மையினரின் நம்பிக்கையைத் தகர்த் தெறியும் விதத்தில் அதிரடி நடவடிக்கை. இதைச் செய்ய மாட்டார் என்று மக்கள் எதிர்பார்த்து நிற்கும்போது , அதைச் செய்து மக்களின் அவநம்பிக்கையைப் பெறுவதில் கில்லாடியாக இருக்கிறார். மக்களைக் காப்பாற்றுபவராக அவரைத் தெரியவில்லை. மாறாக யாரோ ஒருவரின் எடுபிடியாக இருக்கிறாரோ? என்ற ஐயுறவையும் மக்களுக்கு ஏற்படுத்தி விடுகிறார் அவர்.

அவர்தான் அப்படி என்றால்! நாடா ளுமன்றத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளிலும் பல பிளவுகள் தெரிகி றது. அவரவர் தான் தோன்றித் தன மாக அறிக்கை விடுகிறார்கள். நியா யம் பேசுகிறார்கள். சமய பீடங்களை உசுப்பிவிடுவதைப் போல கட்சிகளின் மேலிடத்து உத்தரவில்லாமல் அறிக்கை விடுவதும், சந்திப்பும் நடைபெறுகி றது. மதத்தை கவசமாக்கி இலகுவாக மக்களை ஏமாற்றலாம் என்ற அவர்கள் அனுபவந்தான் அவர்களை இது போன்று செயற்பட வைக்கிறதோ? என்றும் என்னை எண்ணச் செய்கிறது.

எப்பொழுதும் நாட்டில் நடக்கின்ற கூத்துகளை நாம் பார்த்துக் கொண்டிருக் காமல் எம்மைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரு தலைமையை உருவாக்க வேண்டும் என்றது இந்த வயிரமுத்துவின் வேண்டு கோள். முஸ்லிம்கள் அவர்களுக்கு என்று ஒரு அரசியலை வைத்து நடக்கிறார்கள். அதனால்தான் அரசோடு பேசுகிறார்கள். சேருகிறார்கள். பிரிகிறார்கள். பதவிக்கு அவ்வப்போது வருகின்ற அரசாங்கத்தோடு கைகோர்த்து ஆட்சி அமைத்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் அப்படிப் பட்ட பச்சோந்தி அரசி யலைச் செய்யுமாறு நான் எம்மவரைக் கேட்டவில்லை. மாறாக ஒரு நல்ல தலைமை. ஆரோக்கியமான தலைமை. பொய் சொல்லாத தலைமை. மக்களை ஏமாற்றுகின்ற சாணக்கியமுள்ளவர் களைப் புறந்தள்ளிவிட்டு, கட்சியிலிருந்து அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, தரமான உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் கட்சி ஒன்றினை உருவாக்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

நான் சிறுவனாக இருந்தபோது அப்போது பல தமிழரசுக் கட்சிக் கூட்டங்களையும், தமிழ் காங்கிரஸ் கூட்டங்களையும் பார்த்திருக்கிறேன். அப்போதும் அவர்கள் ஆளை ஆள் திட்டுவதும், நையாண்டி பண்ணுவதும், துரோகி என்று முத்திரை குத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந் தனர். அப்போது அரசோடு இணைந்திருந்த மக்களை, அரசியல் வாதிகளைத் துரோகி என்று முத்திரை குத்துவதைப் போல மேடைப் பேச்சுக்களை பேசி மக்களை அவர்களுக்குஎதிராக அணி திரட்டினர். பின்பு கூட்டணியானதும் தலைவர் அமிர்தலிங்கத்தின் மனைவி யாரும் மக்கள் உணர்ச்சிவசப்படும்படி பேசுவார். திருவிழாவில் பாட்டுக் கச்சேரி நடத்துகின்ற குழுவினர் மக்களுக்கு விருப்பமான பாடலை பாடுவதைப்போல அவரும் தமிழ் பாடலைப் பாடுவார். மக்களும் உணர்ச்சிவசப்பட்டு மேடை ஏறி சுவர பிளேட்டினால் தமது மணிக்கட்டைக் கீறி தலைவர்களுக்கு இரத்தில் திலகமிட்டதைப் பார்த்திருக்கிறேன். அது பற்றி இன்று சிந்திக்கிறேன். எனவே அது போன்றவைகளை மீண்டும் நடைபெறச் செய்யாமல், கண்ணியமாக எம்மை வழி நடத்தக் கூடிய தலைமை ஒன்று உருவாக வேண்டும் என்று இந்த வயிரமுத்து விரும்புகிறார். இது நடக்குமா?மக்களே! எமது தலைவர்களே என்ன சொல்லுகிறீர்கள்? ■

பகுதி II



# பாரபட்சங்களுக்கு எதிரான போராட்டம்

## மூன்றாம் பாலினத்தவர் பற்றிய ஒரு சிறப்பு நேர்காணல்

(கடந்தவாரத் தொடர்ச்சி......)

**இந்தச் சமூகத்திற்காக எவ்வாறான விடயங்களை நீங்கள் இழக்க நேரிட்டது? அதனை உங்கள் சொந்த அனுபவத்தினூடாகச் சொல்வது இதற்கு மிகவும் இயல்பாகவும், பொருத் தமாகவும் இருக்குமென்று எண்ணுகிறேன்.**

என்னைப் பற்றியும் என்னுடைய சமூகத்தைப் பற்றியும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக நான் ஆண் என்கிற தோற்றத்தை உபயோகப்படுத்தியிருக்கிறேன். உதாரணமாக் காவல் நிலையங்களுக்குப் போய் பேசும்

போது ஆண் என்கிற தோற்றத்திலே நான் போய்ப் பேசுவதால்தான் அவர்கள் என்னோடு வெளிப்படையா கப் பேச முடிகிறது. ஏனெனில் திருநங்கைககளைப் பாலியல் தேவைகளுக்காக மற்றவர்கள் உபயோகப் படுத்துகிறார்கள் என்பதாக ஒரு தவறான நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. அப்போது நான் போய் அதைப் பற்றிப் பேசும் போதும் நானும் திருநங்கை தான் என்று அவர்களுக்குத் தெரியப்படுத்தும் போதும் அவர்கள் அதிசயித்துப் போகிறார்கள். மேலும் அவர்கள் நம்பிக்கைகள் பிழையானது என்றதையும் புரிந்து கொள்கிறார்கள். இந்த மாதிரி சூழ்நிலைகளிலே தான் என்னுடைய உணர்வுகளைத் தியாகம் பண்ணி நான் ஆண் என்கிற தோற்றத்தில் போவது எனக்கொரு நன்மையாக இருக்கிறது அதனால் என்னோடு பேசுகிற வர்கள் மாற்றுப்பாலினம் தொடர்பான தங்களுடைய சந்தேகங்களை என்னிடம் வெளிப்படையாகவே கேட்க முடிகிறது உண்மையிலே எனக்குத் தாடி வளர்ப்பதில் அதிக விருப்பம் இல்லை அது என்னோட உணர்வுகளுக்கு முரணானது நான் தங்கியிருக்கிற வீட்டில் இருக்கிறவர்களுக்கு என்னத்தேடி மாற்றுப் பாலினத்தவர்கள் வருவதை விரும்புவதில்லை. நான் தாடி இல்லாமல் திருநங்கையாகவே இருக்கிறதையும் விரும்புகிறதில்லை. அந்த மாதிரியான நிலமைகளிலே தான் நான் என்னுடைய உணர்வுகளைத் தியாகம் செய்ய வேண்டிய நிலை உருவாகிறது.

**தேன்மொழி என்பதற்கான அடையாளங்கள் முன்னர் வேறானது.**

**தற்போது அவைகளை மாற்ற முற்படும் போது எவ்வாறான சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. சட்ட ரீதியான மாற்றத்திற்கு எப்படியான அனும திகள் இங்கு வழக்கத்தில் இருக்கிறது?உங்களுக்கு அதில் ஏதாவது பிரச்சினைகள் உண்டா?**

என்னுடைய அடையாள அட்டயை மாற்று வதற்கான நடைமுறைகளை இப்போது நான் செய்துகொண்டிருக்கிறேன் ஆவணங்கள் எல்லா வற்றையும் கொடுத்திருக்கிறேன். அவர்கள் என்னிடம் கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் இவை எல்லாவற்றையும் மாற்றினாலும் என்னுடைய வெளித்தோற்றம் காரணமாக இந்த மாற்றம் முழுமை யானது என்று சொல்ல முடியாது. நான் இப்ப படித்துக் கொண்டிருக்கிறேன். அத்துடன் வேலையும் செய்கிறேன்.

சமூகம் சார்ந்த நடவடிக்கைகளிலேயும் ஈடுபடுகிறேன். ஆனாலும் முழுமையான மாற்றத்திற்கு நான் இன்னும் வரவில்லை அதனால் என்னால் இன்னும் முழுமையாக அதற்காக் குரல் கொடுக்க முடியவில்லை என்னுடைய கடமைகள் முடியும் வரைக்கும் எனக்கான சிகிச்சை களைத் தள்ளிப்போட்டிருக்கிறேன். மனித உரிமைகள் சம்பந்தான கோப்புகள் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டி ருப்பதால் அரசாங்கம் சார்பில் பிரச்சினைகள் இல்லை பெண் என்று எங்களுடைய ஆவணங்களில் மாற்றித் தருகிறார்கள். திருநங்கைகள் என்ற அங்கீகாரத்தை அல்ல. ஆண் பெண் என்கிற பெருவாரியான அடையா ளத்தில் ஒன்றைத்தான். அதாவது பெண் ஆணாக மாறினால் ஆண் என்றும் ஆண் பெண்ணாக மாறி னால் பெண் என்றும் அடையாளம் தருகிறார்கள். இது எங்களைப் பொறுத்த வரைக்கும் வரவேற்கத்தக்க விடயம் தான்.

**இந்த மாதிரியானதொரு பாரபட்சம் சமுகத்திற்குள்ள நிலவுகிற போது அவர்களுக்கிடையில் அது பற்றிய புரிதல் தேவையானது தானே? இந்தப் பாரபட்சங்களுக்கெதிராக என்ன மாதிரியான நடவழக்கைகளைச் செய்கிறீர்கள்.**

ஆம்! சமூகத்திற்குள் இது பற்றிய விழிப்புணர்வு தேவை தான். தங்களுடைய குடும்பம், தாங்கள் வேலை செய்யும் இடங்கள் எனத் தங்களைச் சுற்றி இருக்கிறவர்களிடமே ஒரு சரியான புரிதல் இன்னும் இல்லாததால் அவர்கள் தங்களை வெளிப்படுத்தப் பயப்படுகிறார்கள். சமூக அங்கீகாரம் என்றது கிடைக்கவேண்டும். அதுகிடைக்காதோ என்கிற பயம் தான் இவை எல்லாவற்றிற்குமே காரணம். இந்தப் பாரபட்சங்கள் எங்களுக்குள்ளேயும் இருந்திருக்கு அதாவது அந்தப் பாரபட்சம் சாதாரணமானதாக இருந்திருக்கு அவர் படித்தவர் இவர் படிக்காதவர் அவர் நல்லா கதைப்பார் இவர் கதைக்கமாட்டார் என இப்படியான பாரபட்சங்கள் எங்களுக்குள்ளேயே இருக்கிறது என்றாலும் இவை எல்லாவற்றையும்


**அனுதர்ஷி லிங்கநாதன்,**
விரிவுரையாளர், ஊடக கற்றைகள்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

விடச் சமூகம் எங்களில் காட்டுகிற பாரப்ட்சம் இருக்கிறதே அது தான் பெரியது அதாவது ஆண்கள் ஆண் என்றும் பெண்கள் பெண் என்றும் எம்மை ஏற்றுக்கொள்வதில்லை பிறகு கொஞ்சம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது.இப்போது எங்களை ஏற்றுக்கொள்கிறார்கள். நாங்களும் பெண்தான் என்று சமூகம் காட்டுகின்ற பாரபட்சத்திற்கு எதிராக நான் தனியாக நின்று போராடுவதை விட என்னைப்போன்ற ஆட்களை என்னோடு இணைத்துக் கொண்டு போராடும் போது அது பலமாக இருக்கும் என்றது தான் என்னுடைய இந்த முயற்சிக்கு பின்னாலி ருக்கும் காரணம். எனத் தனது நேர்காணலை முடித்திருக்கிறார். தேன்மொழி

அவர்கள் யாழ்பாணச் சங்கம் என்ற பெயரில் பால்புதுமையினருக்கான சங்கம் ஒன்றை நிறுவியுள் ளனர். அதில் இருபத்தாறு பேர் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். அதனூடக அவர்கள் தமது உரிமை களுக்காகப் போராடுவதுடன் பால்புதுமையினருக்கான சட்ட ரீதியான உதவிகள், மருத்துவ ரீதியான உதவிகள் மற்றும் வதிவிடவசதிகள் போன்றவற்றை வழங்க விருப்பதாகச் சொல்கிறார் தேன்தொழி. அதுமட்டுமல் லாமல் பால்புதுமையினரிற்கான திறன் விருத்திச் செயற்பாடுகளையும், பொருளாதார ரீதியான வலுவூட்டல் செயற்பாடுகளையும் மேற்கொள்வதாகவும் அவர் சொல்லி இருக்கிறார். ■



## பாய் விரித்துப் படுத்தால் நோய் விலகிப் போகும்



பாய் விரித்து உறங்குவதால் கிடைக்கும் நன்மைகள்...........

1.பொதுவாக தரையில் பாய் விரித்து நாம் தரையில் உறங்குவதே ஒரு சிறந்த "யோகாசனம்" எனலாம்.

2.பிறந்த குழந்தைகளை பாயில் உறங்க வைப்பதால் அதன் முதுகெலும்பு நேர்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு இளம் வயது கூண் முதுகு விழுவதை தடுக்கிறது. கல்வி கற்க்கும் மாணவ மாணவிகளுக்கு இளம் வயது முதுகுவலி வராமலும் தடுக்கும்.

3.கர்ப்பினி பெண்கள் பாயில் உறங்குவது சுக பிரசவத்திற்கு உதவிடும். பாயில் படுக்கையில் பெண்களுக்கு இடுப்பு எலும்பு விரிகிறது. இடுப்பு எலும்பு விரிந்தாலே சத்திரசிகிச்சை இல்லாத சுக பிரசவம்தான்.

4.மூட்டுவலி,முதுகுவலி,தோள்பட்டை தசை பிடிப்பு போன்ற பிரச்சினை உள்ளவருக்கு பாயில் உறங்குவதே ஒரு சிறந்த தீர்வாகும்.

5.பாயில் இரு கால் விரித்து மல்லாக்க படுக்கையில் உடலின் எங்கும் இரத்த ஓட்டம் சீராக பாய்கிறது. ஞாபக சக்தியை அதிகமாக தருகிறது. பாயில் தலையணை இல்லாமல் உறங்குவதே சாலச் சிறந்தது.

6.ஆண்கள் பாயில் படுக்கையில் அவர்களின் மார்பகம் மற்றும் தசைகள் தளர்ந்து விரியும்.

7.பாய் உடல்சூட்டை உள்வாங்கக் கூடியது.

8.பெரியோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சீர்வரிசைசாமான்கள் கொடுக்கையில் பாய் இல்லாமல் ஒரு சீர்வரிசையே கிடையாது எனலாம்.

9.ஒரு பாய் மூன்று ஆண்டுகள் வரை அதன் தன்மையை இழக்காது.

10.கட்டிலில் விரித்து உறங்கும் பஞ்சு மெத்தையை விட வெறும் தரையில் பாய் விரித்து உறங்குவதால்

'உடல் உஷ்ணம் அடைவதையும்...'

'உடலின் வளர்ச்சியையும்...'

'ஞாபக சக்தியையும்...'

'மன அமைதியையும்...'

'நீண்ட உடல் மற்றும் மன ஆரோக்கியத்தையும் தருகிறது.....'

பாய் என்ற தலைப்பில் நம் கவிஞர் மகாஹவி அவர்கள் எழுதிய குறுங் கவிதையொன்று நினைவுக்கு வருகிறது.

**பாய்**
**பாயை விரித்து**
**படுத்தனன் ஒருவன்**
**– மற்றவன்**
**ஒய்தல் அறியா உளத்தினோடு**
**தோணியொன் றேறினன்**
**துணிந்து**
**பாய் விரித்து**
**ஆழிபல தாண்டினனே.**

■ பௌத்த பீடங்களின் ஆலோசனைப்படி ஆட்சி செய்யப் போவதாக பிரதமர் ரணில் கூறியிருக்கிறாரே!

● விரைவில் காவியுடை தரித்து ரணில் விக்கிரமசிங்க தேரராக ஈறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கலைச்செல்வன், யாழ்ப்பாணம்.

■ சம்பந்தன் ஐயா கூட்டத்தை டெல்லி வருமாறு இந்தியப் பிரதமர் மோடி அழைத்திருக்கிறாரே!

● அழைப்பா? கட்டளையா? எதுவானாலும் சிரமேற் கொண்டு செயற்பட வேண்டியது அவர்களின் கடமை. கட்டளை பீடம் டெல்லி தானே!.

பிரதீப், அச்சவேலி.

■ விடுதலைப் புலிகளை அழித்தது தவறு என்று கூறுமளவிற்கு ஞானசாரதேரருக்கு சிறையில் ஞானம் பிறந்து விட்டதே!.



● எங்கள் ஔவைப்பாட்டி ஒரு பாடல் பாடி வைத்திட்டு போயிருக்கிறார். படித்துப் பாருங்கள். நாக்கு நுனிகள் நறுந்தேறும் நெஞ்சகத்து நீக்கரிய நஞ்சும் குடிகொண்ட தீக்குணத்தோன் இன்சொல் உரைக்கின்றான் என்றவனை நம்பாதே என் கொலினும் செய்வானிடர்.

பாரதி, பரந்தன்.

■ இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கையின் தற்போதைய நிலை என்ன?



● அயலாதிக்க வல்லாதிக்க சக்திகளின் அரசியல் சூதாட்டத்தில் அலைபடும் சொத்தாகவுள்ளது.

பாமா, உடுப்பிட்டி.

■ பஞ்சமா பாதகங்கள் எவை?

● லஞ்சம் பெறல், ஊழல் செய்தல், கட்சி தாவல், கொள்கை மாறல், அறிக்கை விடல் இன்று பஞ்சமா பாதகங்கள் இவைதான்.

உதயன், துன்னாலை.

■ இலட்சியவாதி எப்போது மனச்சோர்வு அடைகின்றான்?

● அறிவாளிகள் என உலா வருவோரால் தான் அலட்சியம் செய்யப்படும் போது.

மதனி, குருநகர்.

■ ஒரு மனிதன் எப்போது தன்னைத் தானே அமானப்படுத்திக் கொள்கின்றான்?

● அரசியல்வாதிகளின் ஆவேசம் பேச்சில் உணர்ச்சிவசப்பட்டு கைதட்டி ரசிக்கும் போது.

வாகீசன், ஏழாலை.

■ எமது விளையாட்டு வீரர்கள் ஏன் பெரிய அளவில் சாதனைகளை நிகழ்த்த முடியாதுள்ளனர்?

● தங்களிடையே திறமையை வளர்க்க முடியாமல்



பார்க்க அதிகம் படிக்காத வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கே மதிப்பு அதிகம். கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்தில மேய்க்கவேணும் என்பது அந்தக் காலம். கார் கழுவினாலும் கனடாவில் கழுவவேணும் என்பது இந்தக்காலம்.



பிருந்தா, யாழ்ப்பாணம்.

■ கடின உழைப்பு மட்டும் போதுமா



துஷ்யந்தன், அல்லப்பிட்டி.

■ இலங்கைக்கு உதவ இஸ்ரேலின் 'யமாம்' பொலிஸார் வரவேற்கப்படுகின்றனராமே!

● முன்பு தமிழர் போராட்டத்தை அடக்க 'மொசாட்' வந்தனர். இப்போ ஐஸ்லாமிய ஐ.எஸ் அமைப்பினரை ஒடுக்க யமாம் வரப்போகின்றனர் – பௌத்த சிங்களப் பேரினவாதத்தை

# அங்கதன் பதில்கள்

பொறாமையை வளர்த்து வருவதால்,

ரவி, ஒட்டுமடம்.

■ வளம் மிக்க நாடுகளிலும் வறுமை தாண்டவமாட காரணம் என்ன?

● உழைப்பாளிகளின் உழைப்பு வளம் முதலாளிகளால் சுரண்டப்படுவதை காரணம்.

கலை, மட்டக்களப்பு.

■ பேச்சாளர்கள் பலர் நல்ல செயலாளர்களாக இருப்பதில்லையே? ஏன்?


● நமது தமிழ் அரசியல் சவாதிகளை மட்டும் வைத்துக்கொண்ட இந்த முடிவுக்கு வருவது தவறு.

பகீதா, கிளிநொச்சி.

■ விஞ்ஞானிகள் என்ன செய்கிறார்கள்? மெஞ்ஞானிகள் என்ன செய்கிறார்கள்?

● விஞ்ஞானிகள் மானிட மேம்பாட்டுக்காக சிந்திக்கிறார்கள். மெஞ்ஞானிகள் செத்த ஆன்மா முன்னேற்றத்துக்காக சிந்திக்கிறார்கள்.

நிக்ஷன், உருத்திரபுரம்.



■ பொதுபல சேன – சிவசேனை ஒப்பிடுக...!


● இரண்டுமே காவியுடை தரித்த மதவாதிகளின் அணிகள் தான். ஒன்றுக்கு அரச ஆதரவு பலம். மற்றதற்கு அயலக ஆதரவு பலம். அவ்வளவு தான்...

அபிஷன், வவுனியா.

■ யாழ்ப்பாணத்தில் புத்தகக் கண்காட்சி நடக்கப்போகிறதாமே!

● வர்த்தகக் கண்காட்சி, புடவைக் கண்காட்சி, நகைக்கண்காட்சி போன்ற நிகழ்வுகளுக்கு சேரும் கூட்டங்களில் ஒரு பகுதியேனும் இக்கண்காட்சிக்கு வந்தால் எமது மக்களின் அறிவுத்தேடல் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்புண்டு.

கிருத்திகா, பருத்தித்துறை.




■ யாழ்ப்பாணத்தில் மாப்பிள்ளை மார்களின் மாக்கற் நிலவரம் எப்படி உள்ளது?

● நன்கு படித்த உள்ளூர் மாப்பிள்ளைகளிலும்

■ ஒருவன் வெற்றிபெற... அதிஷ்டம் தேவையில்லையா?

● கடின உழைப்பு ஒருவனிடம் இருக்கிறதென்றால் அவன் அதிஷ்டசாலி தானே!

சுரேஷ், திருகோணமலை.

■ ஒரு பொய்யை திருப்பத் திருப்பச் சொன்னால் அது உண்மையாகி விடுமா?

● அப்படித்தான் நமது தமிழ் அரசியல் தலைவர்கள் நம்புகின்றனர்... அதனால் தான் விரைவில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்ற ஒரே சாத்தியமற்ற, பொய்யைத் திரும்ப திரும்ப உளறி வருகிறார்கள்.

சித்திரா, உடுத்துறை.



■ பணக்காரன் முட்டாளாக இருந்தால்? சுயலநமியா இருந்தால் என்ன நடக்கும்?


● முட்டா ளாக இருப்பது ஆபத்து, சுயநலமியாக இருப்பது பேராபத்து.

எட்வின், யாழ்ப்பாணம்.

■ கொழும்பு அரசு ஐ.நாவையே அர்த்தறாக ஆக்கிவிடும் என கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் இடித்துரைத்திருக்கிறாரே!

● இதனை ஜெனிவா மனித உரிமைக் கூட்டத் தொடரில் அடித்துரைத்தி ருந்தால் அற்புதமா இருந்தி ருக்குமே! சாக்காட்டுக் குரல் பை ஏதாது பாருங்கோ!

வாணதி, வவுனியா.



■ வடமாகாணத்தில் வாகன விபத்துக்கள் மிகவும் அதிகமாகி வருகிறதே!

● சாரி சாரியாக வரும் வாகனதாரிகளின் வேகப்பாய்ச்சல் பாதசாரிகளை பந்தாடாமல் என்ன செய்யும்? வீதி விபத்து விதிக்கப்பட்ட விதியாகிவிட்டது.

ஒடுக்க மட்டும் ஒருவரும் வரமாட்டினம்.

ஞானேந்திரம், கைதடி.

■ தமிழினத்தை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என தனது கடைசி காலத்தில் தந்தை செல்வா சொன்னாராமே!

● அவருக்குத் தன்து அரசியல் வாழ்வுகளில் எவ்வளவு அசைக்க முடியாத அவநம்பிக்கை பாருங்கோ..! அப்படிச் சொல்லியிருந்தால் அவர் ஒரு தீர்க்கதரிசி தான்.


மயில்வாகனம், ஊர்காவத்துறை

■ ஔவையாருக்கும் பாரதியாருக்கும் உள்ள வித்தியாசம்?

● பாட்டி – திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றவர். பாரதியோ சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்றவர்.



வேந்தன், யாழ்ப்பாணம்.



அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.

பெயர் :..............................

முகவரி :..............................

..............................

தொலைபேசி இல. ..............................








# உதைபந்தால் உலகை வலம்வருபவர்

**இரா - வின்**

உலகம் முழுவதும் பலகோடி ரசிகர்களைக் கொண்டுள்ள ஒரே விளையாட்டு உதைபந்தாட்டம். உதைபந்தாட்ட ரசிகர்கள் இல்லாத நாடே இல்லையென்று கூறுமளவுக்கு மிகத்தீவிரமான ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு. உலகக்கோப்பை உதைபந்தாட்ட போட்டி என்பது உல்கத்திலுள்ள உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு மாபெரும் விருந்து. வீரர்களின் அட்டகாசம், ஆவேச ஆட்டங்களைக் கான ரசிகர்கள் அலையெனத் திரள்வர் இந்நிலை உள்ளூர் மைதானங்கள் முதல் உலக மைதானங்கள் வரை நீண்டு செல்லும்.

உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியானது 2022 ஆம் ஆண்டு 22 முறையாக கட்டாரில் நடைபெறவுள்ளது. மிகப்பலம் பொருந்திய அணிகள் பங்கு கொள்கின்ற இப்போட்டிகளில் இலங்கை அணியும் தன் பலத்தினைப் பரிசீலிக்கவுள்ளது. இலங்கை உதைபந்தாட்ட அணி சார்பாக வடபுலத்தைச் சேர்ந்த 3 வீரர்களும் பங்குகொள்ளவுள்ளனர். இதனை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் உறுதிப்படுத்தி செய்திக்குறிப்பையும் வெளியிட்டுள்ளது.

தமிழர்களின் தனிப்பெரும் திறமை உலக அரங்கில் உதைபந்தாட்டத்தின் மூலமாக நிலைநாட்டப்படவுள்ளது. வடபுலத்தைச் சேர்ந்த 3 வீரர்களில் ஒருவரை அக்கினிக் குஞ்சுகள் ஊடாக அறிமுகம் செய்வதில் நாம் பெருமையடைகின்றோம். யாழ்ப்பாணம் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மரியதாஸ் நிதர்சன் உதைபந்தாட்டப் போட்டிகளில் அதிரடி காட்டக்கூடிய மிகச்சிறந்த மத்தியகள வீரர்.

நாவாந்துறை பல சிறப்புக்களையும், தனித்துவங்களையும் கொண்ட நெய்தல் நிலப்பிரதேசம். இங்கு கலைகளிற்கும் கால்ப்பந்தாட்டத்திற்கும் எந்தக்காலத்திலும் குறைவிருக்காது. இரண்டு துறைகளிலும் பெரும் ஜாம்பவான்களை உகந்தளித்த பெரும் சாதனைகளுக்கு சொந்தமானவர்களைக் கொண்டுள்ள இடம். கடந்த காலங்களில் இலங்கை கால்பந்தாட்ட தேசிய அணியில் வடபுலத்தைச் சேர்ந்த வீரர்கள் இடம்பெற்றிருந்தனர். ஆனால் இதற்கு சற்று மேலே சென்று உலகக்கோப்பை கால்பந்தாட்ட போட்டிகளில் விளையாடுவதற்கு தெரிவாகியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

இம்மாபெரும் வரலாற்றுச் சாதனையில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழக வீரரான புலாஸ், வரிதி டயமன்ஸ் விளையாட்டுக்கழக வீரரான யூட் சுபான் இவர்களுடன் மரியதாஸ் நிதர்சன்.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைக் கற்ற நிதர்சன் பாடசாலை சார்பாக பல போட்டிகளில் பங்குகொண்டதுடன் அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர். பாடசாலை உதைபந்தாட்ட அணித் தலைவராகவும் செயற்பட்ட நிதர்சன் உயர்கல்வியை யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் மேற்கொண்டவர். இக்கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் மிகவும் நம்பிக்கைக்குரிய வீரராக தன்னை



அடையாளப்படுத்தியவர்.

கல்லூரி அணி தேசிய அளவில் பெற்ற பல வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் பெரும் பங்காற்றிய இவர் சமகாலத்திலேயே அதாவது தனது 17 ஆவது வயதில் சென்மேரிஸ் அணி வீரராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

உதைபந்தாட்டக் கிராமம் என்று சொல்லக்கூடிய இடத்தில் அதன் சூழல் மற்றும் பின்புலத்தில் வாழ்ந்தமையும் உலக அரங்கில் தேசிய அணிசார்பாக பங்குகொள்வதற்கு காரணம் என நிதர்சனின் தாயார் திருமதி மரியதாஸ் அவர்கள் குறிப்பிடுகிறார். நிதர்சனின் குடும்பம் சென் மேரிஸ் உதைபந்தாட்ட அணியுடன் நீண்ட பெரும் தொடர்பைக் கொண்டுள்ளது.

நிதர்சனின் அப்பா மரியதாஸ் அவர்கள் சிறந்த உதைபந்தாட்ட வீரர். யாழ்ப்பாணம் தெரிவு அணியில் இடம்பெற்ற மரியதாஸ் 1977 இல் இந்தியாவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பங்குகொண்ட பெருமைக்குரியவர். நாடுகடந்த போட்டிகளில் தந்தையார் பங்குகொண்ட தொடர்ச்சியில் நிதர்சனின் பயணம் என்றுகூடச் சொல்லலாம். இவரது இரண்டு சகோதரர்களும் சென் மேரிஸ் உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர்கள். தொடர்ந்தும் விளையாடி வருகின்றனர்.

25 வயதான நிதர்சன் உதைபந்தாட்ட போட்டிகளில் இறுதி நேரத்தில் வெற்றியைத் தீர்மானிக்கும் நாயகனாக தன்னுடைய அதிரடி மற்றும் ஆவேச ஆட்டங்களினால் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார். இதனை இவரது ரசிகர்கள் மட்டுமன்றி எதிரணி வீரர்களும் பல இடங்களில் ஏற்றுக்கொண்டுள்ளனர். மத்தியவரிசை வீரரான இவர் வலது முன்கள வீரராகவும் இடது முன்கள வீரராகவும் சிறப்பாக ஆடகூடியவர். போட்டிகளில் பலமான நீண்ட உதைகள் மூலமாக பந்தைக் கோல் கம்பங்களுக்குள் செலுத்தும் லாபகம் பெற்ற இவர் அநேக நாட்களில் மைதானத்தின் மத்தியபகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இருந்து அடிக்கும் பந்துகள் அனைவரையும் ஏமாற்றி கோல்களாக மாறும் சம்பவங்களினால் இவர் சார்ந்த அணி வெற்றிவாகை சூடும்.

ஊதியம் பெறும் ஒரு உதைபந்தாட்ட வீரராக கடந்து இரண்டு வருடங்களாக இலங்கையின் முன்னணி உதைபந்தாட்ட அணியான டெனோன் அணி சார்பாக விளையாடி வருகின்றார். இவ் அணி சார்பான போட்டிகளில் இவர் வெளிப்படுத்திய பிரகாசமே தேசிய அணியில் இடம்பிடிக்க காரணமாக அமைந்ததெனலாம். உதைபந்தாட்ட மைதானங்களில் பல நேரங்களில் பந்தை சரியாக கணித்து மிக வேகமாக அடிக்கக் கூடியவர். இதனை ரசிகர்கள் 'பந்தை அளந்து அடிப்பான் பார்" எனக் கூறுவதும் கண்கூடு.

இலங்கை அணியின் 21 வயதுப் பிரிவில் முதன்முதலாக தெரிவாகி போட்டிகளில் பங்குகொள்ளவில்லை. பின்னர் 23 வயது இலங்கை அணி சார்பாக 2016 ஆம் ஆண்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய மண்ணில் முதலாவது சர்வதேசப் போட்டியில் பங்குகொண்டவர். 2018 ஆம் ஆண்டு ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் நடைபெற்ற போட்டிகளில் இலங்கை அணி சார்பாக தன் அதிர்வான உதைகளை வெளிப்படுத்தி சக வீரர்களிடம் நன்மதிப்பைப் பெற்றவர்.





2022 FIFA world cup, 2023 AFC கிண்ணம் ஆகிய போட்டிகளில் பங்குகொள்ளும் வீரர்களின் இறுதித் தெரிவில் இடம்பிடித்துள்ள நிதர்சன் நாடுகளிடையே நடைபெறும் பல சிநேகபூர்வ போட்டிகளில் இலங்கை அணி சார்பாக விளையாடி வருகிறார். இவ்வருடம் மே மாதம் 15 ஆம் திகதி கட்டாரில் நடைபெற்ற போட்டியிலும், யூன்மாதம் 07 திகதி லாகூரில் நடைபெற்ற போட்டியிலும் பங்குகொண்டுள்ளார். இலங்கை உதைபந்தாட்ட அணி அண்மைக்காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. உதைபந்தாட்ட உலக அரங்கில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக.

தனக்கும் தான் சார்ந்தவர்களுக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக தான் வரித்துக் கொண்ட உதைபந்தாட்டத்தின் மூலமாக சர்வதேச அரங்குகளில் பிரகாசித்து வருகிறார் நிதர்சன். யாழ்ப்பாணத்திலுள்ள இளையோர்களில் பலர் பயிற்சியும் முயற்சியும் தம்மீதான நம்பிக்கையும் இல்லாமல் வழிதவறிப் போகின்ற பல சம்பவங்கள் போர் ஓய்ந்த பின்னர் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இளையோர் சமூகம் வழிதவற சமூகம் காரணம் என்ற கருத்து இருந்தாலும் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சிகளிலும் தளராத முயற்சிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். இதன் மூலமாக ஏதாவது ஒரு துறையில் சாதனையாளராக எம்மை நாமே மாற்றிக்கொள்ளலாம். இதன்மூலமாக சமூக அங்கீகாரத்தையும் தாம் சார்ந்த வாழ்வையும் வழப்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிதர்சன் போன்றவர்கள் முன்னுதாரணமாக உள்ளனர். எம்மில் நாம் நம்பிக்கை வைத்துச் செயற்படும் போதே நம்மைத் தேடிவரும்வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

உதைபந்தாட்ட உலக அரங்கில் முன்னணி வீரர்கள் பலர் செல்வந்தர்களாக உள்ளனர். உதைபந்தாட்ட உலக ஜாம்பவான்கள் ஒன்று சேரவுள்ள உலகக்கோப்பை உதைபந்தாட்ட போட்டியில் ஈழத்தவர்கள் பங்குகொள்வது அதிலும் வடபுலத்திலிருந்து பங்குகொள்வதும் வீரர்களுக்கு மட்டுமன்றி எம் அனைவருக்கும் பெருமையே. இப்புகழுக்கும் பெருமைக்கும் காரணமானவர்களை நாமும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

# விளையாட்டு உலகில்



# ஆருடம் பலிக்குமோ?

ஏழாவது மோதலாக உலக வெற்றிக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இலங்கை ஆபுகானிஸ்தானுடன் மோதியது.. தனது முன்னைய மோதலில் படுதோல்வியைச் சந்தித்த இலங்கை அணி இதில் வென்றேயாக வேண்டும் என்ற நிலை. வழமைபோல இலங்கை அணியின் துடுப்பாட்டக்காரர்கள் மோசமாகவே ஆடினார்கள். நுவான் பிரதீப்பும், லசித் மலிங்காவும் நன்றாகவே பந்தை வீசியதால்,தட்டுத்தடுமாறி வெற்றிக் கனியைச் சுவைத்தார்கள்.. இறுதி வெற்றி ஜூலை6, 2017இல் கிடைத்தபின்னர், (21 தோல்விகள்) மலிங்கவும் விளையாடி, இவர்கள் சுவைத்த முதல் வெற்றி இது!

**சாம்பியன் நான்தான்**

எட்டாவது மோதலாக இந்தியா தெ.ஆபிரிக்க அணிக்கெதிராக ஆடிய ஆட்டத்தைப் பார்க்கும் போது, பந்து வீச்சிலாகட்டும், துடுப்பாட்டத்திலாகட்டும் நன்றாகவே ஜொலித்தால் சாம்பியன் கிண்ணத்திற்கு பலத்த போட்டி காத்திருக்கின்றது. வழமைபோல் சஹால்,பும்ரா பந்து வீச்சில் மிரட்ட றோஹித் ஷர்மா ஒரு சதமடித்து அசத்தியிருக்கிறார். 9வது மோதலை வென்றது பலமான நியூசிலாந்து அணிதான். பங்களாதேஷ் மோசமாக ஆடவில்லை என்றாலும், சிறந்த துடுப்பாட்ட வீரரான றெய்லரின் 82 ஓட்டங்கள், நியூசிலாந்து அணிக்கு இன்னுமொரு வெற்றியைத் தேடிக் கொடுத்தன. நாங்கள்தான் சாம்பியன் என்கிறதோ நியூசிலாந்து?

**அதிர்ச்சி ஆட்டம்**

ஏற்கனவே பாகிஸ்தான் அணியை தமது அதிவேக பந்துவீச்சினால் நிலைகுலைய வைத்த மே.இந்திய அணி அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 10வது மோதலில், மளமளவென்று 5 விக்கெட்டுகளை 100 ஓட்டங்கள் எடுப்பதற்குள் சரித்தபோது, அணியின் கதி அதோகதி என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் சிமித்தின் 73 உட்பட பந்துவீச்சாளர் குல்டர் நைல் 92 ஓட்டங்கள் ஆடியெடுத்ததால், மே.இந்திய அணி தோற்றது. நடுவர்கள் மே.இந்திய அணியினரிடம் பாரபட்சமாக நடந்து கொண்டார்கள் என்று அணித் தலைவர் ஹோல்டர் உட்பட பலர் மனம் நொந்திருக்கிறார்கள். உலகக் கிண்ண சரிதத்தில், இந்தஆட்ட முடிவில் 39 வயதான கெயில் 1000 உலக வெற்றிக் கிண்ண ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டியிருக்கிறார். 2012இல் ஓய்வு பெற்ற ரெண்டுல்கார் எடுத்த 2278 ஓட்டங்களே முதலிடத்தில் நிற்கின்றன.

**மழைக்கு வெற்றி**

முரண்டு பிடித்த மழைதான் 11வது மோதலில் வென்றது. பாகிஸ்தானையும், இலங்கையையும் ஆடவிடாமல் கைவிட வைத்த மழை, இருவருக்கும் ஆறுதலாக ஆளுக்கொரு புள்ளி கிடைக்க வழிவகுத்துள்ளது. 12வது மோதலில் இங்கிலாந்து அணி, பங்களாதேஷ் அணியை தோற்கடித்துள்ளது. ஷாகிப் பங்களாதேஷ் அணிக்காக ஒரு சதம் அடித்து உதவினாலும், றோயின் அசத்தல் ஆட்டத்தால்(153), இங்கிலாந்து அணியிடம் மண்டியிட்டது எதிரணி! நான் கவனிக்கப்பட வேண்டியவன் என்று தன் அதிவேக பந்துவீச்சில் அச்சுறுத்தி இருக்கிறார் ஆர்ச்சர் அடுத்து இடம்பெற்ற 13வது மோதலில் நியூசிலாந்து அணியின்

**-காவலூர் ஞானம்-**

கைதான் ஓங்கியிருந்தது. மிகச் சுலபமாக ஆப்கானிஸ்தானை வென்ற இவர்கள்.



ஆப்கானிஸ்தான் வெளியேற வேண்டிய அணிதான் என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.கடந்த 9 ஆம் திகதி அவுஸ்திரேலிய அணி இந்திய அணி திணறடிக்க வைத்ததைப் பார்த்தபோது, இறுதி தோமல் இங்கிலாந்து-இந்தியா என்ற ஆருடம் சரியாகி விடுமோ என்றே நினைக்கத் தோன்றுகிறது.

---

# வளைகுடாவில் ஒரு "சுப்பர் ஷோ"

ஜூன் 7 அன்று, குத்துச் சண்டை வீரர்களின் பிரசன்னத்தால், சவுதி அரேபியாவின் துறைமுக நகரான ஜெடா அமர்க்களப்பட்டிருக்கின்றது.அங்குள்ள மன்னர் அப்துல்லா ஸ்போர்ட்ஸ் நகர ஸ்டேடியத்தில் நிகழ்ந்துள்ளதுதான் இப்போட்டி!. உலகக் குத்துச்சண்டை சம்மேளனத்திற்கும்(WWE) சவுதி அரசுக்குமிடையில் கைச்சாத்திட்ட 10 வருட ஒப்பந்த அடிப்படையில், இந்த நிகழ்வு இரண்டாவது வருடமாக இடம்பெற்றுள்ளது.




**வாளெடுத்தவன் வாளால் சாவான்**

நட்சத்திர குத்துச்சண்டை வீரர்களின் பங்கேற்பு, பார்வையாளர்கள் நிரம்பி வழிந்த் அரங்கு- என்று உற்சாகத்திற்கும் அமர்க்களத்திற்கும் இங்கே குறைவிருக்கவில்லை. பார்வையாளர்களாக முன் ஆசனங்களில் அரபு உடையில் பெருந்திரளாக 4 மணி நேர நேரடியான ஒளிபரப்பில் சவுதி நாட்டவர்களை, -பிள்ளைகள் பெரியவர்கள் என்ற வித்தியாசமில்லாமல் நன்றாகவே காணமுடிந்தது. நீண்ட இடைவெளியின் பின்னர் கோல்ட்பேர்க்-அண்டர்ரேக்கருக்கு இடையிலான கனவு மோதல் பரபரப்பாக ஆரம்பமாகிற்று. 2017இல்தான் இறுதியாக இவர்கள் இருவரும் மோதிக் கொண்டார்கள். ஆனால் அதிக நேரம் மோதல் நீடிக்காமல், அண்டர்ரேக்கரின் ஆக்ரோஷத்தில் தோல்வியைத் தழுவினார் கோல்ட்பேர்க். பரமவைரிகளும் பழுத்த அனுபவசாலிகளுமான ரண்டி ஓர்ட்டன்-ரிபிள் எச்சுக்கு இடையிலான மோதல் பயங்கரமாக இருந்தது. இருவருமே நன்றாகவே வாங்கிக் கட்டிக் கொண்டார்கள். இறுதியில் தன் வழமையான யுக்தியை உபயோகித்து வென்றதோ 13 தடவை சாம்பியன் பட்டத்தை வென்ற ரண்டி ஓர்ட்டன்தான். 2010க்குப் பின்னர் இருவருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் இது! சாம்பியன் செத் றொலின்ஸ் கோர்பினுடன் மோதி வென்றதை விட, பழிக்குப் பழி வாங்கும் படலமாக புறொக் லெஸ்னரை வலியில் துடிக்க வைத்தது, பார்வையாளர்களை குதூகலிக்க வைத்தது. சென்ற தடவை ஒரு உருக்கு கதிரையுடன் களமேறி, எந்தக் காரணமும் இல்லாமல் செத் றொலின்ஸை "வாங்குவாங்கென்று" வாங்கியிருந்தார். வாளெடுத்தவன் வாளால் சாவான் என்பது உண்மைதான்.

**பெண்கள் வேண்டாமே**

50 பேர் ஒரேயடியாகக் களத்தில் குதித்து,இறுதியாக எஞ்சுவது யார் என்ற மோதலில் சவுதி நாட்டுக் குத்துச்சண்டை வீரர் ஒருவர் வெற்றியாளராகியது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இவர்பெயர் மன்சூர். நிஜத்திலேயே இவர் வென்றாரா அல்லது சவுதி மண்ணில் ஷோடவுனில் இன்னொரு ஷோடவுனோ தெரியவில்லை. வெற்றியின் அக்களிப்பில் நின்றவரை கண்கூடாக பார்க்க முடிந்தது. உலகக் குத்துச்சண்டை சம்மேளனம் சவுதி மண்ணில் மோதல் இடம்பெறுவதால், பல வீரகளுக்கு விளையாட அனுமதி வழங்கப்படவில்லை. முன்பு பத்திரிகையாளரைக் கொன்ற நிகழ்வைக் காரணம் காட்டி ஜோண் சேனாவும், டானியல் பிரயனும்" கிரவுண் ஜுவெல்ஸ் " நிகழ்ச்சியை பகிஷ்கரித்திருந்தார்கள். இன்னும் பலருக்கு விளையாடும் அங்கீகாரம் மறுக்கப்பட்டுள்ளது. சிரிய வம்சாவழி என்ற காரணம் காட்டி சமி ஸயானுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சமய சம்பந்தமான பச்சை குத்துதல் உடம்பில் இருக்கிறது என்ற காரணம் காட்டி, அலிஸ்டர் பிளாக் சவுதி மண்ணில் மிதிக்க தடை செய்யப்பட்டுள்ளார். பெண்குத்துச்சண்டை வீராங்கனைகளை களமேற்ற சவுதி அரசு கடைசிவரைக்கும் ஒப்புதல் கொடுக்கவில்லை. மகளிர் விடயத்தில் சவுதி அந்த அளவுக்கு இறங்கத் தயாராக இல்லை... அலெக்ஸா பிளிஸ் நத்தாலியாவுடன் விளையாடக்கூடும் என்று கடைசி நேரத்தில் பேச்சடிபட்டாலும், சவுதி அரசு இந்த விடயத்தில் விடாக்கண்டன் கொடாக்கண்டனாகவே நடந்துகொண்டுள்ளது.



# நியூ சன் செரமிக் (பிரைவெட்) லிமிடெட்

**Floor Tiles, Wall Tiles** மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் நேர்த்தியானதும் தரமானதாக பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்

A-9 கண்டி வீதி, கிளிநொச்சி
(பழைய மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக)
Tel No- 021 228 3872

## NewSun Ceramics (Pvt) Ltd




A-9 Kandy Road Kilinochchi
(opposite to the old Hospital)
Tel No- 021 228 3872



மலையாளும் கடலோரம் சோலைவனம் போன்ற விசால இடப்பரப்பில் உலகத் தரத்தில் ஓர் உல்லாச விடுதி

***Tilko jaffna city hotel***

சகல வசதிகளுடன் கூடிய சொகுசு அறைகள், அறுசுவையின் பொருள் கூறும் உணவு வகைகள் மற்றும் உயர்ரக வகைகள் கொண்ட மதுபான ***Bar***, திருமண மற்றும் வைபவங்களுக்கு ஆயிரம் பேர் கலந்துகொள்ளக்கூடிய பிரமாண்டமான மண்டபம், உடல் பயிற்சிக்கு ***Gim***, உல்லாசமாய் நீந்திக் கழிக்க ***Swimming pool***, கடல் அலைகளுடன் உங்கள் பொழுதைக் களிப்புடன் கொண்டாட சாட்டி ***Beach***. வெளிநாட்டிலிருந்து வரும் உங்கள் உறவினர்கள் நண்பர்களை விருந்தோம்பல்களுடன் வரவேற்க.....



## Tilko jaffna city hotel

TILKO hotels

TILKO JAFFNA CITY HOTEL,
#70/6, K, K, S. ROAD,
JAFFNA,
SRI LANKA.

PARKVIEW HOTEL
#107, KANDY ROAD,
(NEAR JAFFNA DISTRICT SECRETARIAT)
JAFFNA.

CHARTY BEACH RESORT,
CHARTY, VELANAI,
JAFFNA,
SRI LANKA.

FORTWAY HOTEL
MAIN STREET,
(3rd CROSS STREET JUNCTION)
JAFFNA.

E- MAIL : info@cityhoteljaffna.com, Web : www.cityhoteljaffna.com, TEL : (+94) 021 222 5969, (+94) 021 720 0707





AnnA EXPRESS Courier Services

# அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் கடிதங்கள் சேவை

இங்கிருந்து அனுப்பப்படும் பொதிகள் மற்றும் கடிதங்கள் உங்கள் உறவுகளிடம்

## 3-5 நாட்களுக்குள்

**11 kg க்கு மேல்**

| | சாதாரணம் | விரைவு |
|---|---|---|
| லண்டன் | 600/= | & 750/= |
| ஜேர்மன் | 675/= | & 850/= |
| பிரான்ஸ் | 775/= | & 900/= |
| இத்தாலி | 750/= | & 1200/= |
| சுவிஸ் | 875/= | & 1200/= |
| கனடா | 1300/= | |

யாழ்ப்பாணம்/வேலணை /ஊர்காவற்துறை / சங்கானை/ கரணவாய் /மீசாலை/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ கனகராயன்குளம்/ மன்னார்/ வவுனியா

976,கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 221 5656, 070 330 5500, 075 330 5500

WESTERN UNION MONEY TRANSFER | SKYNET WORLDWIDE EXPRESS | DHL EXPRESS | aramex delivery unlimited



இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால் 16.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.